In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டுகளில் காணைக்கோள் பகுதிகள்





விழியனூர் புலவர்
ந.வேங்கடேசன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

கல்வெட்டுகளில் கரரைக்கரல் பகுதிகள்

திருமுடி பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Bibiliographical Data

Title	:	**KALVETTUKALIL KAARAIKKAAL PAKUTHIKAL**
Auther	:	Pulavar N. VENKATESAN
Subject	:	History - Archeological Research Epigraphic
Language	:	Tamizh
Edition	:	First
Published	:	December, 2000
Type Point	:	12 Pt. and 11 Pt.
Paper Used	:	White Printing 10.5kg Double Crown
No. of Pages	:	320
No. of Copies	:	1000
Publisher	:	Thirumudi Pathippagam 38, East Sannathi Street, Villiyanur, Pondicherry - 10
Price	:	**Rs. 80.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கல்வெட்டுகளில்
காரைக்கால் பகுதிகள்

வில்லியனூர் புலவர்
ந. வேங்கடேசன்

திருமுடி பதிப்பகம்
38, கிழக்குச் சன்னிதித் தெரு,
வில்லியனூர்,
புதுச்சேரி - 605 110.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற்பதிப்பு : டிசம்பர், 2000

விலை ரூ. 80.

ஒளி அச்சு

கிறிஸ்ட் டி. டி. பி. சென்டர்,
19, பாரதீஸ்வரர்காலனி,
4ஆவது தெரு,
சென்னை - 24.

அச்சிட்டோர்

ஸ்கிரிப்ட் ஆப்ஸெட்,
பெரியார் பாதை,
சென்னை - 94.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

a. திருநள்ளாறு 25
1. கல்வெட்டால் அறியும் நாடுகளும் கூற்றமும் 28
2. கல்வெட்டால் அறியும் வளநாடுகள் 35
3. கல்வெட்டால் அறியும் சதுர்வேதி மங்கலங்கள் .. 42
4. கல்வெட்டு காட்டும் ஊர்கள் 43
5. கூத்துபற்றிய பிற கல்வெட்டுகள் 58
6. உப்பு அளங்களும் உப்பு உற்பத்தியும் 69
7. கல்வெட்டில் நாணயம் 79
8. தியாகராசர் 82
9. சப்தவிடங்கத் தலங்கள் 83
10. சோமாஸ்கந்தர் 84
11. திருநள்ளாற்றில் தியாகராஜர் 86
12. ஸ்தானிகர்கள் விபரம் 89
13. தியாகராஜரைப்பற்றிய நூல்கள் 91
14. திருநள்ளாறு கல்வெட்டால் அறியும் மக்கள் பெயர் 94

1. நல்லாம்பல் 97
2. மாதூர் 99
3. நெடுங்காடு 101
4. கீழ்க்காசாக்குடி 102
5. மேல்காசாக்குடி 104
6. தருமபுரம் 107
7. காரைக்கால் 110
8. திருமலைராயன் பட்டினம் 118
9. சேத்தூர் 120
10. சொரக்குடி 122

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றியுரை

இந்நூல் தோற்றத்திற்குப் பெரிதும் துணை நின்ற பெருந்தகை, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல் இயக்குநராக இருந்தவர் திருநள்ளாறு டாக்டர் எஸ்.எஸ். முருகேசன் பிள்ளை அவர்களே. அவர்க்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

பல முறை அவரது சொந்த செலவில் இன்ப ஊர்தியில் அழைத்துச் சென்று இருபது நாட்களுக்கு மேல் வீட்டில் உணவளித்து உதவினார்; அவர் குடும்பத்தினர் அனைவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மொழியில் பண்பாட்டுக்கழகம், புதுச்சேரியில் 27.4.88 முதல் 5.5.88 வரையும், காரைக்காலில் 9.5.88 முதல் 14.5.88 வரையிலும் கல்வெட்டியல், நாணயவியல் வகுப்பு நடத்தியது. அப்போது 65 பேர் பயிற்சி பெற்றார்கள். அப்பயிற்சியாளர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள ஆசிரியருக்கு என்னும் இதழில் 1. 7. 88இல் நடந்து முடிந்த கண்காட்சியும் நெஞ்சில் நீங்கா நினைவுகளும் என்று தலைப்பிட்டுப் பாராட்டி எழுதிய அவ்விதழ் ஆசிரியர் சுப. சீனிவாசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரைக்காலில் நடைபெற்ற கல்வெட்டுப் பயிற்சி வகுப்பில் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், ஆக 65 பேர்கள் பங்கு கொண்டு பயன் பெற்றனர் என்ற (தினமணி மே 21.5.88 இல் வெளியான) செய்திக்காக தினமணிக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இத்துறையில் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்த பெருமகனார் மறைந்த திருமுடி ந. சேதுராமனார் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

என் ஒருசாலை மாணாக்கரும் கல்வெட்டுப் பயிற்சியில் நல்லாசானாக இருந்தவருமான பாகூர் புலவர் சு.குப்புசாமிக்கும், காரைக்கால் பகுதி நிழற்படங்கள் கொடுத்துதவிய அவர் குடும்பத்தினர் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் ஆய்வுக்கு வேண்டிய துணைநூல்கள், தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதிகள், ஆண்டறிக்கைகள் முதலியனவற்றைக் கொடுத்து உதவும் புதுவை பிரெஞ்சிந்திய பண்பாட்டுக் கழகத்தார்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் மணிவிழா நாள் என்றவுடன், அன்று ஒரு நூல் வெளிவர வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்து இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருக்கும் வீரப்பதிப்பாளர் வெள்ளையாம்பாட்டு சுந்தரம் அவர்களுக்கும் அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடும்பத்தினர்க்கும் என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

ஊக்க உரைகள் நல்கிடும் முனைவர் இராச. திருமாவளவனார்க்கும் நன்றி.

இத்துறையில் என் உள்ளம் ஈடுபடத் துணை நிற்கும் இறையருளுக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

38, கிழக்குச் சன்னிதித் தெரு, – **ந. வேங்கடேசன்**
வில்லியனூர், புதுவை – 10.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

தமிழ்நாட்டின் முற்கால வரலாறு முறையாக வெளிப்படவில்லை. அதைத் தேடும் பணியும் திரட்டும் பணியும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. நம்முன்னோர் வாழ்வும் பண்பாடும் கலைகளும் இலக்கியங்களில் வெளிப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், பழமொழிகள் வாயிலாகவும் சில பல செய்திகள் தெரிகின்றன.

மன்னர்கள் கட்டிவைத்துள்ள கோயில்களில் வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. மன்னர்களது ஆட்சிக்காலம், அவர்களது கொடைச் செய்திகள், குடிமக்கள் பெயர்கள், நிர்வாகிகள், சில நடைமுறைகள், கோயில் விழாக்கள், வழிபாடுகள் முதலான பலவற்றையும் கல்வெட்டு ஆவணங்களே வெளிப்படுத்துகின்றன.

சங்ககாலம் எனக் குறிப்பிடும் காலம் தமிழர் வரலாற்றில் பொற்காலம் என்பர் அறிஞர். சங்ககால நூல்கள் பலவும் தமிழர் பண்பாட்டினை, வாழ்க்கைமுறைகளை, வீர உணர்ச்சிகளை, அறச்செயல்களை, கற்றோர்தம் சிறப்பியல்புகளை மிகத் தெளிவாக விளக்குகின்றன.

வெளிநாட்டு அறிஞர் பலரது பாராட்டுகளைப் பெற்றவை நமது சங்கத் தமிழ் நூல்கள். தனிச் சிறப்புடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழர் பண்பாடும் வாழ்வும் உலகம் புகழும் நிலையில் இருந்துள்ளன.

கி.பி. நான்கு, ஐந்து நூற்றாண்டுகளில் புத்தமும் சமணமும் தமிழகமெங்கும் பரவியிருந்துள்ளது. பின்னர் சைவ சமயம் பெருகி வளரலானது. 'இந்த நிலையில் தோன்றியதே வள்ளுவரின் திருக்குறள்' என்னும் கருத்து சிந்திக்கத் தக்கதாகும்.

சமயங்களின் தாக்கத்தால் மக்கள் பிளவுபட்டுப் பிரிந்து பிணக்குகளில் சிக்கித் தடுமாறிய நிலையில்தான், ஒரு தெளிவுதரும் வழிகாட்டியாகத் திருக்குறள் பேரொளி தோன்றியது எனத் தெரிகிறது.

திருக்குறள் நெறி ஏனோ பின்னுக்குத் தள்ளப்பட்டது. சமயங்கள் கால்கொண்டன. வேதநெறிகள் வேகம் பெற்றன. பக்தி வழி பரவியது. சடங்குகளும் விழாக்களும் மக்களிடம் பரவக் கோயில் அமைப்புகள் காரணங்களாயின.

பழைமையான சங்ககால நூல்களில் கடவுள்களின் கோயில்கள் இடம் பெறவில்லை. பிற்கால நூல்களிலேயே சிவன், முருகன், திருமால் எனும் தெய்வப்பெயர்கள் குறிக்கும் நிலை தோன்றியுள்ளன.

கி.பி. 5, 6ஆம் நூற்றாண்டுகளில் சமயம் பரப்பும் பணிகள் பெருகலாயின.

காரைக்காலம்மையாரும், திருமுருகாற்றுப்படை, கலித்தொகை போன்ற நூல்களும் தொடக்கமாய் இருந்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புலனாகிறது. இதன் பின்னரே கோயில்கள் தோன்றின போலும்! இதன் தொடர்ச்சியாக நால்வர் என்போர் சைவ சமயத்தைப் பரப்பிலாயினர்; வைணவத்தைப் பரப்பிட ஆழ்வார்கள் தோன்றினர்.

பல்லவர்கள் கற்கோயில் எழுப்பிச் சமயங்களுக்கு நிலையான காட்சிக் கூடங்களை அமைக்கலாயினர். பெண்தெய்வம் துர்க்கைச் சிற்பங்களை அறிமுகப்படுத்தியவர்களும் பல்லவர்களே! சாத்தன் சிற்பமும் அவர்களது படைப்பே எனப்படுகிறது.

பல்லவர் படைத்த குடைவரைக்கோயில்களே பிற்காலக் கற்கோயில்களுக்கு அடிப்படையாய் அமைந்தன. ஏழாம் நூற்றாண்டளவில் திருக்கோயில்கள் தமிழ்நாட்டில் தோன்றியுள்ளன எனக் கருதலாம்.

கற்கோயில்கள் கட்டத் தொடங்கியதால் அதிலே ஆவணங்களாய்க் கல்லெழுத்துகள் தோன்றலாயின. அனைவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் அக்காலத்தில் கல்லெழுத்துகள் செதுக்கப்பெற்றன. அதனால் அவை இன்றளவும் வரலாற்றை விளக்கியபடி விளங்குகின்றன.

மன்னர்கள், நாடுகள், நாட்டுப் பிரிவுகள், நில அளவை, நீர்வள அமைப்பு, ஆட்சி மாற்றங்கள், அதிகாரிகள், நிதி வழங்கியோர், கோயிற்பணிகள் முதலான பற்பல குறிப்புகள் கொண்டவையாய்க் கோயில் கல்லெழுத்து ஆவணங்கள் அமைந்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்காலப் புதுவை மாநிலத்தில் எண்ணற்ற பழங்கோயில்கள் உள்ளன. அக்கோயில்களில் கல்வெட்டுச் செய்திகள் காணப்படுகின்றன.

காரைக்காலை ஒட்டிய பல ஊர்களிலும் பழமையான திருக்கோயில்கள் இன்றும் காட்சி தருகின்றன. அவற்றிலுள்ள கல்லெழுத்து ஆவணங்களை நேரில் சென்று பார்த்துப் படித்துப் படியெடுத்து ஒருசேரத் தொகுத்துத் தரும் பெரும்பணியைத் தம் கடமையாய்க்கொண்டார் வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன் அவர்கள்.

இவர் முன்னரே கல்வெட்டு வரலாற்றுப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட திருத்தொண்டராவார். இவரது தேடல் முயற்சிகளின் அறுவடைப் பயனாய் வரலாற்று நூல்கள் பத்து வெளிவந்துள்ளன.

பல்லாண்டுப் பணிகளின் தொடர்ச்சியாய் இவர், காரைக்கால் பகுதிகளில் கருத்துச் செலுத்தியுள்ளார். அதன் விளைவே இந்த வரலாற்றுத் திரட்டு.

ஊர்களில் காணப்பெறும் கல்வெட்டுகளின் மொத்த எண்ணிக்கை 84. இவற்றுக்குரிய அரசர்கள் 21 பேர். கி.பி. 1043 முதல் பதினான்காம் நூற்றாண்டுவரையுள்ள காலத்திற்குரிய செய்திகளின் தொகுப்பாயுள்ள நூல் இது.

மேலும் 15, 16 ஆம் நூற்றாண்டுக்குரிய 5 துண்டுக் கல்வெட்டுச் செய்திகளும் இவற்றுள் அடக்கமாயுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்றாட வாழ்வுப் பிரச்சனைகளில் அலைமோதும் மக்கள் கூட்டம் அக்கால நிலையை அறிந்துகொள்ள முற்பட விழைவது எங்ஙனம்? விழைவோர் எத்தனைபேர்?

இவ்வகை எண்ணமும் ஏக்கமும், தேடலும் உழைப்பும் ஒருசிலர்க்கே உரியதாயுள்ளன. இத்தகைய வரலாற்றுத் தொண்டர்களின் வரிசையில் வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசனாரும் ஒருவராய் விளங்குகிறார்.

அவர்தம் ஆர்வமும் அயரா உழைப்பும் மண்ணின் பற்றும் பாசமும் இந்த நூலாய் வடிவம் கொண்டுள்ளன. இந்நூல் உருவாக, உறுதுணை புரிந்தவர் கற்றறிந்த கல்வியாளர், பெரியவர் முனைவர் சோ. முருகேசம் பிள்ளையவர்கள் பாராட்டுக்குரியவர். கல்வித்துறையில் பணியாற்றிக் கனிந்த பேராசிரியர் இவர். ஓய்வுக்காலத்திலும் ஓயாது வரலாற்றுணர்வுடன் செயல்படுபவர்.

ஐம்பதாண்டுகளாய் வெளிவராமல் பிரெஞ்சு மொழியில் இருந்த அரிக்கமேட்டு வரலாற்றை இவர் மிக முயன்று தமிழாக்கம் செய்து நூலாக்கி வெளியிட்டுப் பரப்பியவர். இவரது வரலாற்றுத்தொண்டு குறிப்பிடத்தக்கது, வாழ்த்துக்குரியது; பாராட்டுக்குரிய பணியாகும்.

இத்தகைய உணர்வின் உந்துதலால் இந்த வரலாற்று நூலைத் தம் சொந்த ஊரான காரைக்கால் நகரில், விழா எடுத்து வெளியிடும் சிறப்பான நிகழ்ச்சியும் பாராட்டத்தக்கதாகும்; வரலாற்றுப் பெருமைக்குரியதாகும். இப்பெரியாரை நன்றியுடன் வணங்குகிறேன். வரலாற்று உலகின் வாழ்த்துக்கும் இவர் உரியவர் ஆகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பெருமகனார் போல் மேலும் பலர் முன்வர வேண்டும் என்று விரும்புகிறேன்.

புதுவைப் பெருமகனார் திருமுடி ந. சேதுராமன் செட்டியார் (M.R.) அவர்கள், முன்னர் செய்த பெரும் தொண்டுகளால் மறைந்தும் மறையாத பேரொளியாய் இன்றும் புகழுருவில் வாழ்கிறார். அந்தப் பெருந்தகையாளரின் வளர்ப்புக் குழந்தைகளில் ஒருவரான புலவர் வேங்கடேசனார் இந்த நூல் படைத்தமைக்குப் பாராட்டி மகிழ்கிறேன்.

மேலும் பல வரலாற்றுக் குறிப்புகளைத் தேடித் திரட்டி வெளிப்படுத்த வேண்டுமென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நெஞ்சங்கள் படித்துப் பயன் பெறவேண்டும். புதிய வரலாற்றை நாமும் படைக்கவேண்டும். படைப்போம்!

அன்புடன்,

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலாசிரியரின் நூல்களைப்பற்றி...

Books The Hindu, Tuesday, Friday 15, 1994 - 23.
KALVETTUKALIL UR PEYARGAL; KALVETTUKALIL ARIA SEITHIGAL; By Pulavar N. Venkatesan. Both published by Thirumudi Padippakam, East Sannidhi street, Villiyanur, Pondicherry.

Both the books under review bring out the value of our inscriptions for writting the history of our numerous villages and towns at the micro level. In the first book, the author deal with the history of the place names of the village of Pondicherry State. At a place called Bahur, there was a Vedic college during the pallava period. It was named as Alagia Chola Chaturvedimangalam, after the name of the Chola King Sundara Chola. Author village which goes by the name Tribhuvanai today was indeed known as Tribhuvana Madevi, Chaturvedimangalam, after the queen to Parantake Chola, 1. The present day Mokshakulattur is mentioned as Mosukulattur in the Chola inscriptions. The study of the place names shows that they are based on certain natural factors. Some derive thier names from geographical location like lake (Eripakkam) or a pond (kuttakkarai and Kulathur) some are based on the flora

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(puvarasanpattu) and lluppaiyur and some of fauna (Puliyur and Kuruvimedu). There are also villages with royal association eg. Seliya-ganganallur and Tirumalairayan-pattinam. A few others have religious origin like Buddhamangalam and Narayanacheri. A Chola inscription dated A.D. 1018 mentions twelve villages named after the well known names (Dvadhasanama) of Vishnu like Kesavacheri, Madhavacheri, Govindacheri etc. The author has provided valuable information on the history of the villages and ancient territorial and revenue divisions of the Pondicherry State. He points out that many villages which figure in the earlier inscriptions are no longer there and in some cases the names have undergone changes. Arugur was known as Ariyur. Embalam as Emalam, Seshanur as Seliaganganallur.

In the other work, the athor presents some interesting historiacal facts culled out from the Tamil inscriptions. They pertain to a variety of fields like economic and cultural life, social service, festivals, religious and charitable endowments, taxation, agricultural guilds, educational institutions, irrigational activities and so forth. A record of Kulothunga-I (1097 AD) from Thirubhuvanai mentions the recital of a poem entitled Kulothuga Sola Charitai composed by a poet Kumuda Chandra Pandita. The village assembly honoured the poet by a land grant. The village assemblies contributed substanitially for maintaining the corporate life of the village. At one time (AD 1113) a village assembly had to lay down that the artisans of the village and even the Vedic reciters who enjoyed free land grants should serve in that village only and should not accept jobs outside.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

An inscription of Rajadhiraja I (AD 1048) from Tribhuvanai provides a long list of religious scriptures that were expounded or recited in the village on various occasions and the honororium given to them. The list includes the exponents of Tiruvaymozhi, the Vedas, Bodayanasutra, Vedants, mimamsa, Vyakarana, Vaikhanasam, Ramayana and Mahabharata. A committee (variam) of the village assembly was entrusted with the responsibility of the correct distribution of the grants. Another record gives details of a Vedic college at Ennayiram (in South Arcot District) which had 250 students and 14 teachers.

An important feature of the economic life in medieval South India was the role of the agricultural and merchant guilds. A Chola record from Tirukkovalur provides details of an agricultural guild named Chitramezhi Peria Nattar. They called themselves as 'Bhumiputtirar' and enjoyed many privileges and had the plough share as their emblem. Similarly, trade guilds like the Manigramathar and the Five Hundred were active in Tamil Nadu.

The author has included in this collection inscriptions throwing valuable light on many other interesting topics like self immolation, musical inscrioptions, land measures, bride prize (Kanyadhanam), rehabilitation of the handicapped, Valangai Idangai social classes. On the whole, these two works by Pulavar Venkatesan clearly demonstrate that the inscriptions of Tamil Nadu are a mine of information.

நன்றி : இந்து நாளிதழ் பிப்ரவரி 15 1994 **Dr. K.V. Raman**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊர்களும் கல்வெட்டுகளின் எண்களும்

	ஊர்	கொம்யூன்	எண்கள்
1.	திருநள்ளாறு	திருநள்ளாறு	1 - 51
2.	நல்லம்பல்	திருநள்ளாறு	52 - 54
3.	மாதூர்	திருநள்ளாறு	55 - 56
4.	நெடுங்காடு	நெடுங்காடு	57 - 60
5.	கீழ்க்காசாக்குடி	கோட்டுச்சேரி	61 - 62
6.	மேல்காசாக்குடி	நெடுங்காடு	63
7.	தருமபுரம்	காரைக்கால்	64
8.	காரைக்கால்	காரைக்கால்	65 - 74
9.	திருமலைராயன் பட்டினம்	திருமலைராயன் பட்டினம்	75 - 80
10.	சேத்தூர்	திருநள்ளாறு	81 - 83
11.	சொரக்குடி	திருநள்ளாறு	84
12.	மேல்பொன்பேத்தி	திருநள்ளாறு	85

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன் பதிப்பு

திருநள்ளாறு	1902	394	S.I.I. Vol, VII. No. 1026	25
திருநள்ளாறு	1902	395	S.I.I. Vol, VII. No. 1027	27
திருநள்ளாறு	1965-66	435	-	1
திருநள்ளாறு	1965-66	436	-	-
திருநள்ளாறு	1965-66	437	-	5
திருநள்ளாறு	1965-66	438	-	4
திருநள்ளாறு	1965-66	439	-	7
திருநள்ளாறு	1965-66	440	-	8
திருநள்ளாறு	1965-66	441	-	2
திருநள்ளாறு	1965-66	442	-	14
திருநள்ளாறு	1965-66	443	-	49
திருநள்ளாறு	1965-66	444	-	3
திருநள்ளாறு	1965-66	446	-	16
திருநள்ளாறு	1965-66	447	-	18
திருநள்ளாறு	1965-66	448	-	17
திருநள்ளாறு	1965-66	449	-	20
திருநள்ளாறு	1965-66	450	-	19
திருநள்ளாறு	1965-66	451	-	26
திருநள்ளாறு	1965-66	452	-	38
திருநள்ளாறு	1965-66	453	-	41

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு	1965-66	454	-	39
திருநள்ளாறு	1965-66	455	-	32
திருநள்ளாறு	1965-66	456	-	33
திருநள்ளாறு	1965-66	458	-	30
திருநள்ளாறு	1965-66	459	-	11
திருநள்ளாறு	1968-69	107	-	21
திருநள்ளாறு	1968-69	108	-	22
திருநள்ளாறு	1968-69	109	-	24
திருநள்ளாறு	1968-69	110	-	42
திருநள்ளாறு	1968-69	111	-	43
திருநள்ளாறு	1968-69	112	S.I.I. Vol.VII. No.1026	
திருநள்ளாறு	1968-69	113	-	28
திருநள்ளாறு	1968-69	114	-	29
திருநள்ளாறு	1968-69	115	-	47
பெருங்காடு	1965-66	431	-	57
பெருங்காடு	1965-66	432	-	58
பெருங்காடு	1965-66	433	-	59
பெருங்காடு	1965-66	434	-	60
கீழ்க்காசாக்குடி	1902	392	S.I.I. Vol.VII. No.1024	61
கீழ்க்காசாக்குடி	1902	393	S.I.I. Vol.VII. No.1025	62

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டுகளுக்குரிய அரசர்கள்

சோழர்கள்

இராஜேந்திரன் II
குலோத்துங்கன் I
விக்கிரம சோழன்
குலோத்துங்கன் II
இராஜராஜன் II
குலோத்துங்கன் III
இராஜராஜன் III
இராஜேந்திரன் III
கோனேரின்மை கொண்டான்.

பிற்காலப் பல்லவர்

வீரமோகன் காடவராயன்
கோப்பெருஞ்சிங்கன்

பாண்டியர்

சடையவர்மன் சுந்தரபாண்டியன் III
சடையவர்மன் ஸ்ரீவல்லபன்
மாறவர்மன் குலசேகரன் II

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சடையவர்மன் சுந்தரபாண்டியன் IV
சடையவர்மன் சுந்தரபாண்டியன் V
மாறவர்மன் வீரபாண்டியன்
சுந்தர பாண்டியன்

விஜயநகர்

விருப்பண உடையார்
விருபாக்ஷராயர் II

பிறவகைக்கவ்வெட்டுகளின் காலம்:
கி.பி. 12, 13, 14, 15, 16ஆம் நூற்றாண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எண்ணெய்க்கா மண்டபம்
திருநள்ளாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. திருநள்ளாறு

ஊரும் பேரும்

திருநள்ளாறு, முழையூர் நாட்டு ஊர்களில் ஒன்று. நள் என்பது நடுவு என்னும் பொருளுடையது. இரண்டு ஆறுகளுக்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ள காரணம் பற்றி இது நள்ளாறு என்று பெயர்பெற்றது. திரு என்னும் அடைமொழி சேர்ந்ததால் திருநள்ளாறு என வழங்கப் பெறுகிறது. இவ்வூருக்கு வடக்கே நூலாறும் தெற்கே அரசலாறும் ஓடுகின்றன.

இவ்வூர்க் கல்வெட்டுகளில், இறைவன், "திருநள்ளாறுடையார்' என்று ஊர்ப் பெயராலேயே குறிப்பிடப் பெறுகிறார்.

நளனைத் தொடர்ந்து வந்த கலிபுருடன், இத்தலத்தில் அவனை விட்டு நீங்கியதாகத் தலபுராணம் கூறும்.

நளன் என்னும் பெயருக்கும் ஊர்ப்பெயருக்கும் கல்வெட்டு அடிப்படையில் சான்றேதும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவார மூவரும் இத்தலத்து இறைவனை ஒன்பது திருப்பதிகங்களால் போற்றிப் பரவியுள்ளனர். திருஞான சம்பந்தர் இத்தலத்து இறைவனைப் பாடிய 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் திருப்பதிகம் சிறப்புப் பெற்ற பதிகமாகும்.

மதுரையம்பதியில் திரு ஞானசம்பந்தருக்கும் சமணர்களுக்கும் **அனல்வாதம்** நிகழ்ந்தபொழுது திருஞான சம்பந்தப் பெருமான், தீயிலிட்ட திருப்பதிகம் இதுவேயாகும். தீயினில் இத்திருப்பதிகம் வேகாமல் நின்றமைபற்றி இது **'பச்சைப்பதிகம்'** என்று போற்றப்பெறுகின்றது. இந்தப் பச்சைப் பதிகம் பற்றிக் குறிப்பால் உணர்த்தும் சில கல்வெட்டுகளும் காரைக்கால் பகுதிகளில் கிடைத்துள்ளன.

அருமொழி தேவச் சதுர்வேதி மங்கலம்

இது திருநள்ளாற்றின் வேறு பெயராகும். அருண்மொழி என்பது முதலாம் இராஜராஜ சோழனின் இயற்பெயராகும். பிற்காலத்தில் இவ்வூர் இம்மன்னன் பெயரால் சதுர்வேதி மங்கலமாகத் திகழ்ந்தது. விருதராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலம் என்பதுவும் திருநள்ளாற்றின் பிற்காலத்துப் பெயராகும். விருதராஜ பயங்கரன் என்பது முதலாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று. ஆதலின், இச் சதுர்வேதி மங்கலம் அம்மன்னன் பெயரால் விளங்கியதாகும். *(கலிங்கத்துப் பரணி. 6:14)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விழாக்கள்

திருநள்ளாறுடையார்க்கு மாசித் திருநாள் ஆண்டுதோறும் கொண்டாடப் பெற்றது. இவ்விழாவில் இறைவனை உலாவர எழுந்தருளச் செய்வர்.

மாசி மகத்தில் வரும் மக நட்சத்திரத்தன்று விழா நடைபெறும்.

வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தன்று பெருவிழா நடைபெற்றதைக் கல்வெட்டு வழியாக அறிகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டால் அறியும் நாடுகளும் கூற்றமும்

1. முழையூர் நாடு!

இது உய்யக் கொண்டார் வளநாட்டைச் சேர்ந்த உட்பிரிவு நாடுகளில் ஒன்று. தஞ்சை மாவட்டத்து நன்னிலம் வட்டமும் புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் வட்டாரமும் சேர்ந்த நிலப்பரப்பு அக்காலத்து முழையூர் நாடாகும். திருநள்ளாறு அருமொழி தேவச் சதுர்வேதி மங்கலம், குந்தவைச் சதுர் வேதி மங்கலம், சாத்தமங்கலம், தருமபுரம், முதலானவை முழையூர் நாட்டு ஊர்களில் சிலவாகும்.

2. மருகல் நாடு

தஞ்சை மாவட்டத்து நன்னிலம் வட்டத்தின் பெரும்பகுதி அக்காலத்திய மருகல் நாடாகும். இடையாற்றுக்குடியான கலிகடிந்த சோழச் சதுர்வேதி மங்கலம், கருப்பூர், மருதவூர், மருகல், பொற்கலக்குடி, பூதனூர், தஞ்சாவூர், திருச்செங்காட்டங்குடி, திருக்கண்ணமங்கலம், திருக்கண்ணபுரம், வைப்பூர் ஆகியன இந்நாட்டு ஊர்களில் சிலவாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. குறும்பூர் நாடு

தஞ்சை மாவட்டத்து மாயவரம் வட்டம், புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் வட்டாரம் ஆகியவற்றின் பெரும் பகுதிகளைக் கொண்ட நிலப்பரப்பு அக்காலத்துக் குறும்பூர் நாடாகும். இறையான்சேரி, காயாக்குடி, குறும்பபுரத்தூர், நாகமங்கலம், நெடுங்காடு, புத்தக்குடி, தளிச்சேரியான பராக்கிரமச் சோழச் சதுர்வேதி மங்கலம் (தலத்தெருவு), தில்லையாளி நல்லூர் (தில்லையாடி), திருவிடைக்கழி ஆகியவை இந்நாட்டு ஊர்களில் சிலவாகும்.

4. அம்பர் நாடு

தஞ்சை மாவட்டத்து மாயவரம், நன்னிலம் ஆகிய வட்டங்களின் சில பகுதிகள் அடங்கிய நிலப்பரப்பு அக்காலத்து அம்பர் நாடாகும். இதன் தலைநகரம் அம்பர் என்னும் ஊராகும். இதற்கு விக்கிரம சோழபுரம் என்ற வேறு பெயரும் உண்டு. அதியரைய குறும்பல், அம்பர் புறத்தூர் (அம்பகரத்தூர்), அம்பர் அருவந்தை, அம்பர் திருமாகாளம், ஔவைநல்லூர், எண்ணுக்குடி, கொற்றவாசல், நாகன்குடி, பழையாறை, பெரும்பொழ், பிரட்டைக்குடி, புரக்குடி, திருக்கடவூர், திருமீயச்சூர், வைகாவூர் முதலானவை இந்நாட்டின்கண் இருந்த சில ஊர்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. புறங்கரம்பை நாடு

தஞ்சை மாவட்டத்து மன்னார் குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய வட்டங்களின் சில பகுதிகளைத் தன்னகத்துக் கொண்டது புறங்கரம்பை நாடாகும். அரியாற்றூர் (அரியலூர்), அருமொழிதேவச் சதுர்வேதி மங்கலம், செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம், சோழ மாருதி நல்லூர், சுத்தவல்லிச் சதுர்வேதி மங்கலம், எழினூர் (இலவனூர்), இளநகர், களப்பூழ், கெழுவத்தூர், கொரி, கொற்றமங்கலம், கோயிலாற் புதுக்குடி, குலோத்துங்கசோழச் சதுர்வேதி மங்கலம், பண்ணியூர், மருதூர், முக்கரையான மும்முடிச் சோழபுரம், நெடும்புலம், நெல்வாயில், பாசிப்புரம், பல்லவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம், பனையூர், பெரும்பல மருதூர், பெருவாழ்வு தந்த சதுர்வேதி மங்கலம், சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலம், திருப்பேரூர், உசாத்தானம், வங்கநகர், வண்கொற்றங்குடி, வெங்கூர்க்கள திருக்களர் ஆகியவை இந்நாட்டின்கண் அடங்கிய ஊர்களில் சிலவாகும்.

6. ஆர்வலர் கூற்றம்

இது இராஜேந்திர சோழ வளநாட்டின் உட்பிரிவு நாடுகளில் ஒன்று. தஞ்சை மாவட்டத்து மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய வட்டங்களின் சில பகுதிகளைத் தன்னகத்துக் கொண்டது ஆர்வலர் கூற்றமாகும். ஆர்வலம் என்னும் ஊர் இதன் தலைநகர். இக்காலத்தில் இவ்வூர் **ஆலிவலம்** என்னும் பெயருடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளது. கச்சிரம் (கச்சனம்), கொள்ளிக்காடு, பூசலாங்குடி, புலியூர், தளிகொற்றங்குடி, திருநெல்லிக்கா, திருத்தெங்கூர், உத்தரங்குடி, வட விறையான் பள்ளம் ஆகியவை இந்நாட்டின் ஊர்களில் சிலவாகும்.

7. திருவாரூர்க் கூற்றம்

இது கேய மாணிக்க வளநாட்டின் உட்பிரிவு நாடுகளில் ஒன்று. தஞ்சை மாவட்டத்து நாகப்பட்டினம் வட்டத்தின் ஒருபகுதி அக்காலத்தில் திருவாரூர்க்கூற்றம் என்னும் பெயருடன் விளங்கியது. இதன் தலைநகரம் திருவாரூர் ஆகும். இவ்வூரிலுள்ள அரநெறி, பரவையுண் மண்தளி ஆகிய இரண்டு கோயில்களும் தேவார மூவராலும் பாடப்பெற்ற சிறப்புக் குரியனவாகும். அடியப்பிய சதுர்வேதி மங்கலம் (இன்று அடியக்கா மங்கலம்), ஆமூர், கீழ்க்குடி, குமாரமங்கலம், மேனிலாப்படியான வீரராஜேந்திரபுரம், பழைய வல்லம், பள்ளி (பள்ளிவார மங்கலம்) பனங்குடி, பந்தணை நல்லூர், புதுக்குடி, புத்தமங்கலம், தந்திரம், தீயங்குடி, வல்லம், வாயற்றூர், வேளாங்குடி ஆகியவை திருவாரூர் கூற்றத்து ஊர்களில் சிலவாகும்.

8. குறுக்கை நாடு

விருதராஜ பயங்கர வளநாட்டின் உட்பிரிவு நாடுகளில் குறுக்கை நாடு என்பதும் ஒன்றாகும். குறுக்கை என்னும் ஊர் இந்நாட்டின் தலைநகராகும். இவ்வூர் மாயவரத்துக்கு அண்மையில் உள்ள நீடூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் ஊருக்கு வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள வீரட்டானேஸ்வரம் எட்டு வீரட்டானங்களுள் ஒன்றாகும். இத் தலத்திற்குத் திருநாவுக்கரசரின் இரண்டு பதிகங்கள் உள்ளன.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இவற்றிய தலபுராணம் ஒன்றும் இதற்கு உண்டு. இத் தல புராணம் 1920 ஆவது ஆண்டில் தருமை ஆதீனத்தின் உதவியுடன் வெளியிடப் பெற்றுள்ளது. இங்குள்ள கல்வெட்டுகள் கல்வெட்டுத் துறையினரால் படி எடுக்கப்பட்டுள்ளன. (ArE 1917 Nos : 215 - 244)

தஞ்சை மாவட்டத்து மாயவரம் வட்டத்தின் பெரும்பகுதி அக்காலத்துக் குறுக்கை நாடாகும். ஆற்றூரான ராஜநாராயணச் சதுர்வேதிமங்கலம், சோழேந்திர சிங்க நல்லூர், கடலங்குடியான விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம், காட்டியார், காவிரி மங்கலம், கிளஞ்லூர், குறுக்கையான விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம், பாண்டூர், இராஜராஜன் திருமங்கலம், திருமணஞ்சேரி, திருவேள்விக்குடியான கங்கை கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம், வரகூர் ஆகியவை குறுக்கைநாட்டின் சில ஊர்கள்.

ஏ. மிழலைக்கூற்றம்

கும்பகோணம் வட்டத்தின் ஒருபகுதி அக்காலத்து மிழலைக் கூற்றமாகும். மிழலை என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊர் இதன் தலைநகரம். சேய்ஞ்ஞலூர் (திருவாய்ப்பாடி), இலைச்சிக்குடியான வீரநாராயணபுரம் ஆகியவை இக்கூற்றத்தின் முக்கிய ஊர்களாகும். மிழலை என்னும் ஊர் இக்காலத்தில் முளலை நத்தம் என்னும் பெயருடன் உள்ளது.

10. இடைக்கழி நாடு

சோழ மண்டலத்து இராஜேந்திரசோழ வளநாட்டு உட்பிரிவு நாடுகளில் இடைக்கழி நாடும் ஒன்று. இதற்கு இடையள நாடு என்ற வேறு பெயரும் உண்டு. நாகப்பட்டினம் வட்டத்தின் ஒரு பகுதி அக்காலத்து இடைக்கழி நாடாகும். அடும்பன் திட்டை, அனபாயச் சதுர்வேதி மங்கலம், அறிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம், சிஞ்சல், சிறஞர், ஈசனூரான பரமேசுவர மங்கலம், குந்தவைச் சதுர் வேதி மங்கலம், குன்றலூர், மணற்குடி (மீனற்குடி), பெரிஞார், பொன்மலைக்குன்றான பொய்யில், திருக்கோளிலி, வேளார்க்குடி ஆகிய ஊர்கள் இந்நாட்டில் சில.

11. முடிச் சேரணாடு

தஞ்சை மாவட்டத்துப் பாபநாசம் வட்டத்தின் ஒரு பகுதி அக்காலத்து முடிச் சோணாடாகும். ஆலங்குடியான சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் அல்லது ஐநநாதச் சதுர்வேதி மங்கலம், அரிதாவமங்கலம் (அர்த்துவார மங்கலம்), சிற்றினவாழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(சித்தன் வாலூர்), குட்டி மங்கலம், பட்டக்கல், கடம்பூர் முதலானவை இந்நாட்டு ஊர்களில் அடங்கும்.

12. சேற்றூர்க் கூற்றம்

தஞ்சை மாவட்டத்துக் கும்பகோணம், நன்னிலம் வட்டங்களின் சில பகுதிகளைத் தன்னகத்துக் கொண்டது சேற்றூர்க் கூற்றமாகும். சேற்றூர் இதன் தலைநகரம். இக்காலத்தில் இது திருச்சிறை என்னும் பெயருடன் உள்ளது. அன்னவாயில், இடைக்குறும்பூர், குடவாயிலான சோழ்குல வல்லிச் சதுர்வேதி மங்கலம், மருதத்தூர், மருத்தூர், நல்லூரான வானவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம், ஓகை, ராஜசுந்தரி சதுர்வேதி மங்கலம், திருக்கொள்ளம் பூதூர், வெட்சியூர், விசலூர் ஆகியவை இக்கூற்றத்தில் சேர்ந்தவை.

13. புலியூர் நாடு

நாகப்பட்டினம் வட்டத்தின் ஒரு பகுதி புலியூர் நாடாகும். புலியூர் இதன் தலைநகர். இக்காலத்தில் இது தப்பலாம் புலியூர் என்னும் பெயருடன் உள்ளது. மாவூர், மயிலாப்பூர், மீவணம், முருக நல்லூர், பாலையூர், புலிவலம், பூண்டி, திருக்காறாயில், வாஞ்சியூர், வேளூர் ஆகியவை இந்நாட்டு ஊர்களில் சில.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டால் அறியும் வளநாடுகள்

1. உய்யக் கொண்டார் வளநாடு

தஞ்சை-மாவட்டத்திலுள்ள மாயவரம் வட்டம், நன்னிலம் வட்டம், கும்பகோணம் வட்டம் ஆகிய வட்டங்களின் சில பகுதிகளும், புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் வட்டாரமும் இணைந்த நிலப்பரப்பு அக்காலத்தில் உய்யக் கொண்டார் வளநாடு என்னும் பெயருடன் விளங்கியது.

இவ்வளநாட்டின் வடக்கே காவிரி ஆறும்; தெற்கே அரசிலி ஆறும் எல்லைகளாக இருந்தன. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இது பூபால குலவல்லி வளநாடு என்ற பெயராலும் குறிக்கப்பெற்றது.

ஆக்கூர் நாடு, அம்பர் நாடு, குறும்பூர் நாடு, மருகல் நாடு, மாத்தூர் நாடு, முழையூர் நாடு, பாம்பூர் நாடு, பேராவூர் நாடு, திரைமூர் நாடு, திருநரையூர்நாடு, திருவழுந்தூர் நாடு, வெண்ணாடு, விளைநாடு, முதலான நாடுகள் இவ்வளநாட்டின் உட்பிரிவு நாடுகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றுள் ஆக்கூர்நாடு, குறும்பூர் நாடு, பேராவூர் நாடு, திருவழுந்தூர் நாடு, விளைநாடு ஆகிய நாடுகள் இணைந்த நிலப்பகுதி ஜெயங்கொண்ட சோழ வளநாடு எனப் பெற்றது. அம்பர் நாடு, ஆக்கூர் நாடு, திருவழுந்தூர் நாடு, விளைநாடு ஆகிய நாடுகள் இணைந்த நிலப்பகுதி ராஜ நாராயண வளநாடு எனவும் குறிக்கப் பெற்றன.

உய்யக் கொண்டார் வளநாடு என்னும் இவ்வளநாடு, ராஜசுந்தரி வளநாடு, உலகுய்யக் கொண்ட சோழ வளநாடு, ராஜ நாராயண வளநாடு, பூபாலகுல வல்லி வளநாடு என நான்குமுறை பெயர் மாற்றம் பெற்றுள்ளது.✪

2. அருமொழி தேவ வளநாடு

தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, கும்பகோணம், நன்னிலம் ஆகிய வட்டங்களின் பெரும்பகுதி நிலப்பரப்பைக் கொண்டது அக்காலத்து அருமொழி தேவ வள நாடாகும்.

அளநாடு, ஆர்வலக்கூற்றம், சேற்றூர்க் கூற்றம், சோவூர்க் கூற்றம், இடையளநாடு, மங்கலநாடு,

✪ (Thiru y. Subbarayalu, Political geography of the Chola Country, Dep. of Archaeology, Govt. of Tamil Nadu (pp.59 & 108) Madras 1973)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முழைக்காட்டு நாடு, நென்மலி நாடு, பிரான் காழிடை நாடு, புலியூர்நாடு, புறங்கரம்பை நாடு, தக்கஞர் நாடு, தேவூர் நாடு, திருநரையூர் நாடு, வலிவலக்கூற்றம், வண்டாழை வேளூர்க் கூற்றம் ஆகியவை இவ் வளநாட்டின் உட்பிரிவு நாடுகளாகும்.

3. ஜயங்கொண்ட சோழ வளநாடு

தஞ்சை மாவட்டத்து மாயவரம் வட்டத்தின் பெரும்பகுதியும், புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் வட்டாரமும் இணைந்த நிலப்பரப்பு அக்காலத்து ஜயங்கொண்ட சோழ வள நாடாகும்.

ஆக்கூர்நாடு, குறும்பூர்நாடு, பேராவூர் நாடு, திருவழுந்தூர் நாடு, விளைநாடு ஆகியவை இவ்வள நாட்டின் உட்பிரிவு நாடுகளாகும். இவ்வளநாடு உய்யக்கொண்டார் வளநாட்டின் பிற்காலத்துப் பிரிவாகும்.

4. ராஜராஜ வளநாடு

தஞ்சை மாவட்டத்துக் கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருச்சி மாவட்டத்து ஆலங்குடி ஆகிய வட்டங்களின் பெரும்பகுதி கொண்ட நிலப்பரப்பு தென்கரை ராஜராஜ வளநாடு என்றும், தஞ்சை மாவட்டத்துப் பாபநாசம், தஞ்சாவூர், திருச்சி மாவட்டத்து முசிரி, இலால்குடி, உடையார்பாளையம், குளித்தலை, திருச்சி, குளத்தூர் ஆகிய வட்டங்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரும்பகுதி கொண்ட நிலப்பரப்பு வடகரை ராஜராஜ வளநாடு என்றும் அக்காலத்தில் அழைக்கப் பெற்றன. இவற்றுள் மருகல் நாடு என்பது தென்கரை ராஜராஜ வளநாட்டைச் சார்ந்ததாகும்.

காந்தார நாடு, தென்கவிர நாடு, கீழ் வேங்கை நாடு, குன்றில் கூற்றம், பாலையூர் நாடு, பன்றியூர் நாடு, பரண்டையூர் நாடு, பரவைநாடு, பொய்யில் கூற்றம், புலிவல நாடு, புன்றில் கூற்றம், வல்லநாடு, வரகூர் நாடு ஆகியவை தென்கரை ராஜராஜ வளநாட்டையும், அழகரைநாடு, கலார்க் கூற்றம், மீமலைக் கூற்றம், பாச்சில் கூற்றம், பிடவூர் நாடு, பொய்கை நாடு, உற்றத்தூர் நாடு, வட்வழிநாடு, கீழ்வள்ளுவப் பாடி நாடு ஆகியவை வடகரை ராஜராஜ வளநாட்டையும் சார்ந்தவை.

5. ராஜ நாராயண வளநாடு

இராஜநாராயணன் என்பது முதலாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று (S.I.I. Vol.I.p.59). ஆதலின், இவ்வளநாடு அம்மன்னன் பெயரால் விளங்கியதாகும். இது முன்னர்க் கூறப்பெற்ற உய்யக் கொண்டார் வளநாட்டின் ஒரு பிரிவாகும். தஞ்சை மாவட்டத்தின் மாயவரம், நன்னிலம் வட்டங்களின் பெரும்பகுதியும், புதுவை மாநிலத்துக் காரைக்கால் வட்டாரமும் இணைந்தது அக்காலத்து ராஜநாராயண வளநாடாகும். அம்பர்நாடு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக்கூர்நாடு, திருவெழுந்தூர் நாடு, விளைநாடு ஆகியவை இவ்வளநாட்டின் உட்பிரிவு நாடுகளாகும்.

6. க்ஷத்திரிய சிகாமணி வளநாடு

க்ஷத்திரிய சிகாமணி என்பது முதலாம் இராஜராஜ சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று. இவ்வளநாடு அம்மன்னன் பெயரால் விளங்கியுள்ளது. நாகப்பட்டினம், கும்பகோணம், நன்னிலம் ஆகிய வட்டங்களின் பெரும்பான்மையான பகுதிகளைத் தன்னகத்துக் கொண்டது, அக்காலத்து கூத்திரிய சிகாமணி வளநாடு.

அளநாடு, சேற்றூர் நாடு, இண்கல்நாடு, மருகல்நாடு, முறையூர் நாடு, பனையூர் நாடு, பட்டணக்கூற்றம், தேவூர் நாடு, திருநரையூர் நாடு, திருவாரூர்க் கூற்றம் வேளா நாடு ஆகியவை இவ் வளநாட்டின் உட்பிரிவுகளாகும்.

7. இராஜேந்திர சோழ வளநாடு

இது அருமொழி தேவ வளநாட்டினின்றும் பிற்காலத்தில் பிரிக்கப்பெற்ற ஒரு பகுதியாகும். நாகப்பட்டினம், மன்னார்குடி திருத்துறைப் பூண்டி ஆகிய வட்டங்களின் பெரும்பாலான நிலப்பரப்பு இராஜேந்திர சோழ வளநாடு.

அளநாடு, ஆர்வலக் கூற்றம், இடையளநாடு, நென்மலிநாடு, புறங்கரம்பைநாடு, வலிவலக் கூற்றம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்டாழை வேளூர்க் கூற்றம் ஆகியவை இவ்வளநாட்டின் உட்பிரிவுகளாம்.

8. விருதராஜ பயங்கர வளநாடு

தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணம் வட்டம், பாபநாசம் வட்டம், மாயவரம் வட்டம் ஆகியவற்றின் சில பகுதிகளும், கடலூர் மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டத்தின் பெரும் பகுதியும் இணைந்த நிலப்பரப்பு அக்காலத்து விருத ராஜ பயங்கர வளநாடாகும்.

இது இராஜேந்திர சிம்ம வள நாட்டினின்றும் பிரிக்கப்பட்டு, இவ்வாறு புதிய பெயர் இடப்பெற்றது. இன்னம்பர் நாடு, கீழ்க்காடு நாடு, கூடல்நாடு, குறுக்கை நாடு, மண்ணி நாடு, மேற்காநாடு, மிழலை நாடு, நல்லாற்றூர் நாடு, பருவூர்க் கூற்றம், விளந்தையில் கூற்றம், விளத்தூர் நாடு முதலானவை விருதராஜ பயங்கர வளநாட்டின் உட்பிரிவு நாடுகளாம்.

9. ராஜேந்திர சிங்க வளநாடு

மாயவரம், தஞ்சாவூர், திருத்துறைப் பூண்டி, சீர்காழி, கும்பகோணம், பாபநாசம் ஆகிய வட்டங்களின் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்து லால்குடி, உடையார் பாளையம் ஆகிய வட்டங்களின் சில பகுதிகளும், சிதம்பரம் வட்டத்தின் ஒரு பகுதியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இணைந்த பெருநிலப் பரப்பு அக்காலத்து ராஜேந்திர சிங்க வளநாடு எனப்பட்டது.

அதிகைமங்கை நாடு, அண்டாத்துக் கூற்றம், ஏமப்பேரூர் நாடு, இன்னம்பர் நாடு, கார்க் கூற்றம், கொண்டநாடு, குன்றர் கூற்றம், குறுக்கை நாடு, மண்ணி நாடு, மிழலை நாடு, மிறைக் கூற்றம், நல்லாற்றூர் நாடு, நல்வயலூர் நாடு, நாங்கூர் நாடு, நெலுவூர் நாடு, பருவூர்க் கூற்றம், பிடவூர் நாடு, பொய்கை நாடு, திருக்கழுமல நாடு, திருவாலி நாடு, திருவிந்தளூர் நாடு, வெண்ணெயூர் நாடு, விளத்தூர் நாடு ஆகியவை இவ்வள நாட்டின் உட்பிரிவுகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டால் அறியும் சதுர்வேதி மங்கலங்கள்

அருமொழி தேவச் சதுர்வேதி மங்கலம்

இது திருநள்ளாற்றின் வேறு பெயராகும். அருண் மொழி என்பது முதலாம் இராஜராஜ சோழனின் இயற்பெயராகும். பிற்காலத்தில் இவ்வூர் இம்மன்னன் பெயரால் சதுர்வேதி மங்கலத்துள் சேர்ந்துள்ளது.

சோழேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலம்

சோழேந்திர சிம்மன் என்னும் பெயர் முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திர சோழன் ஆகிய இரு மன்னர்களுக்கும் உரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். ஆயினும், முதலாம் இராஜாதிராஜ சோழனின் தந்தையான முதலாம் இராஜேந்திர சோழனின் பெயராலேயே இச்சதுர்வேதி மங்கலம் விளங்கியதாகக் கொள்வதே பொருத்தமாகும்.

விருதராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலம்

இது திருநள்ளாற்றின் பிற்காலத்துப் பெயராகும். விருதராஜ பயங்கரன் என்பது முதலாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று. (செயங்கொண்டார்: கலிங்கத்துப் பரணி 6:14). ஆதலின், இச் சதுர்வேதி மங்கலம் அம்மன்னன் பெயரால் விளங்கியுள்ளது.

✪

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டு காட்டும் ஊர்கள் (57)

விழியூர்

இக்காலத்தில் இவ்வூர் 'விழிதியூர்' என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு விழிதிநாத ஸ்வாமியின் பழமையான கோயிலும் உள்ளது.

குண்டூர்

திருநள்ளாற்றுக்கு வடக்கே 7 கி.மீ. தொலைவிலுள்ள 'அண்டூர்' என்னும் ஊராக இருக்கலாம்.

இடையாற்றுக்குடி

இது மருகல் நாட்டைச் சேர்ந்த ஊர்களுள் ஒன்று. இதற்குக் கலிகடிந்த சோழச் சதுர்வேதி மங்கலம் என்ற பிறிதொரு பெயரும் உண்டு (S.I.I. vol III No. 205). கலி கடிந்த சோழன் என்பது இரண்டாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. (S.I.I. vol. VII. No. 460). ஆதலின், இம்மன்னன் பெயரால் இவ்வூர் சதுர்வேதி மங்கலமாகத் திகழ்ந்துள்ளது.

மருதூர்

இக்காலத்து இவ்வூர் மருத்தூர் என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு வடக்கே 24கி.மீ. தொலைவில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயரக்குடி

இவ்வூர் இந்நாளில் மேல்காசாக்குடி என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு மேற்கே 10கி.மீ. தொலைவில் உள்ளது.

முழையூர்

இது குறும்பூர் நாட்டு ஊர்களில் ஒன்றாகும். இதனைத் தலைமையிடமாகக் கொண்ட நாடு. முழையூர் நாடு' என்னும் பெயருடன் திகழ்ந்தது.

புத்த மங்கலம்

இவ்வூர் திருநள்ளாற்றுக்கு வடகிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வட்டாரத்தில் உள்ள புத்தமங்கலம், புத்தக்குடி, போதிமங்கலம் முதலான ஊர்ப்பெயர்கள், இப்பகுதியில் பௌத்த மதம் சிறப்புற்றிருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

நெல்வரய்க்குடி

தஞ்சை மாவட்டத்து மாயவரம் வட்டத்திலுள்ள நல்லத்துக் குடி என்னும் ஊராக இருக்கலாம்.

பண்ணியூர்

இது புறங்கரம்பை நாட்டு ஊர்களில் ஒன்று. இது நன்னிலம் வட்டத்துப் பெரும்பண்ணியூர் என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊராகவோ அறந்தாங்கி வட்டத்துப் பண்ணியூர் என்னும் ஊராகவோ இருக்கலாம்.

பச்சைப் பெதிய நல்லூர்

இதுவும் நிலத்தின் பெயர். இது பச்சைப்பதிகம் என்று போற்றப் பெறும் திரு ஞான சம்பந்தரின் 'போக மார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தை நினைவூட்டும் வகையில் அமைந்த பெயராகும்.

ஒக்கூர்

இக்காலத்தில் இவ்வூர் திருநள்ளாற்றுக்குத் தெற்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது.

குண்டூர்

திருநள்ளாற்றுக்கு வடக்கே 7 கி.மீ. தொலைவில் உள்ள அண்டூர் என்னும் ஊராக இருக்கலாம்.

செல்லூரர்

இவ்வூர்த் திருநள்ளாற்றுக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது.

கொற்றமங்கலம்

மாயவரத்துக்கு அண்மையில் இவ்வூர் கொத்தங்குடி என்னும் பெயருடன் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புல்லாலி

இவ்வூர், பில்லாலி என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

மருதூர்

இக்காலத்தில் இது மருத்தூர் என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு வடக்கே 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருவெழுந்தூர்

இது திருவெழுந்தூர் நாட்டின் தலைநகர். மாயவரத்துக்கு வடக்கே 1.5 கி.மீ. தொலைவில் தேரழுந்தூர் என்னும் பெயருடன் இக்காலத்தில் உள்ளது. இங்குள்ள கீழையூர் வேதபுரீஸ் வரர்க் கோயில் திருஞானசம்பந்தரின் பாடல்பெற்ற சிறப்புக்குரியது. இக்கோயிலில் கல்வெட்டுகளும் உள்ளன.

அம்பர்

இக்காலத்தில் இவ்வூர் அம்பல் என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கே மேற்கே 14 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் அம்பர் நாட்டின் தலைநகரமாகும். இங்குள்ள அம்பர் மாகாளம் என்னும் சிவன் கோயில் திருஞானசம்பந்தரின் மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகங்களைக் கொண்டது. பிற்காலத்தில் இவ்வூர் விக்கிரம சோழபுரம் என்ற பெயராலும் அழைக்கப் பெற்றுள்ளது.

நல்லம்பர்

இக்காலத்தில் இவ்வூர் நல்லம்பல் என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு வட மேற்கே 14 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர்ச் சிவன் கோயிலில் கல்வெட்டுகள் உண்டு.

நல்லழுந்தூர்

இவ்வூர் திருநள்ளாற்றுக்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

தீயங்குடி

இக்காலத்தில் இவ்வூர் தீபங்குடி என்னும் பெயருடன் நன்னிலம் வட்டத்தில் உள்ளது.

நெய்வாய்க்குடி

இக்காலத்தில் இவ்வூர் நல்லத்துக்குடி என்னும் பெயருடன் மாயவரம் வட்டத்தில் உள்ளது.

கீழ் மாந்தூரர்

திருநள்ளாற்றுக்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள சேத்தூர் என்னும் ஊரின் பழைய பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரம்பயலூர், அமிற்கர

இப்பொழுது இவை இருப்பிடம் அறிய இயலாத ஊர்கள்.

கூமூர்

இவ்வூர், சைவ ஆசாரியருள் ஒருவரான ஈசான தேவரின் ஊராகும். இது கும்பகோணம் வட்டத்திலுள்ள கூகூர் என்னும் ஊராக இருக்கலாம்.

பனைக்குடி

இவ்வூர்த் திருநள்ளாற்றுக்குத் தென்கிழக்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது.

நெற்குப்பை

திருநள்ளாற்றுக்கு மேற்கே 32 கி.மீ. தொலைவில் உள்ள ஊர்.

நென்மலி

இக்காலத்தில் இவ்வூர் நெம்மேலி என்னும் பெயருடன் மன்னார்குடி வட்டத்தில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தண்டலம்

திருநள்ளாற்றுக்குத் தெற்கே 10கி.மீ. தொலைவில் இப்பொழுது தண்டவாளம் என்னும் பெயருடன் இருக்கும் ஊர்.

குறும்பூர் மங்கலம்

இக்காலத்தில் இவ்வூர் குறும்பூர் என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு வடக்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது.

செம்பங்குடி

இது கும்பகோணத்துக்கு அண்மையில் இதே பெயருடன் இன்றும் உள்ளது.

பிறையாறு

இவ்வூர் காரைக்காலுக்கு வடக்கே ஏறத்தாழ 15 கி.மீ. தொலைவில் பொறையாறு என்னும் பெயருடன் உள்ளது. இவ்வூரில் வாழ்ந்த 'பொறையாற்றுக் கிழான்' என்னும் தலைவன் ஒருவனைக் கல்லாடனார் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுதல் இங்கு நினைவு★ கொள்ளத்தக்கது.

★ (புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் பதிப்பு, சென்னை. 1950 - செய்யுள் - 391.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வன்னியூர்

குறுக்கை நாட்டு ஊர்களில் இதுவும் ஒன்று. இக்காலத்தில் இவ்வூர் திருவீழிமிழலை என்னும் ஊருக்கு வடமேற்கே 3 கி.மீ. தொலைவில் அன்னூர் என்னும் பெயரில் உள்ளது. இங்குள்ள அக்னீஸ்வரர்க் கோயில் திருநாவுக்கரசரின் பாடல் பெற்ற தலமாகும்.

பறியலூர்

இது மாயவரத்துக்குத் தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள ஊராகும். இக்காலத்தில் இது பரசலூர் என்னும் பெயருடன் உள்ளது. இங்குள்ள வீரட்டானேஸ்வரம் எட்டு வீரட்டானங்களுள் ஒன்று. இது திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாகும்.

கோரட்டூர்

இது திருத்துறைப் பூண்டி வட்டத்தில் உள்ளதோர் ஊர். காவிரியின் தென்கரைத் தலங்களுள் ஒன்று.

கோட்டூரின் மேற்குத் திசையில் உள்ள சிவன் கோயில்; இறைவனின் பெயர் கொழுந்து நாதர். இக்கோயில் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்றது. ஊருக்குக் கிழக்கே உள்ள மற்றுமொரு கோயில் 'கீழ்க்கோட்டூர் மணியம்பலம்' என்னும் பெயருடன் விளங்குகிறது. இது கருவூர்த் தேவரின் திருவிசைப்பாக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டது. இதற்குத் திருஞானசம்பந்தரின் பதிகம் ஒன்றும் உள்ளது. இங்குக் கல்வெட்டுகளும் உள்ளன. (Are. 1913 Nos. 443 - 465)

புத்தமங்கலம்

திருநள்ளாற்றுக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள ஊராகும்.

புத்தக்குடி

திருநள்ளாற்றுக்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள ஊர்.

குமாரமங்கலம்

இவ்வூர் திரு நள்ளாற்றுக்கு வடமேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருநீலக்குடி

கும்பகோணத்துக்கு அண்மையிலுள்ள ஆடுதுறையிலிருந்து தெற்கே 3 கி.மீ. தொலைவில் தென்னலக்குடி என்னும் பெயருடன் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் இறைவன் திருநீலக் குடியீசர் என்று குறிக்கப் பெறுகிறார். வழக்கத்துக்கு மாறாக இக்கோயிலில் இரண்டு அம்மன் சன்னிதிகள் உள்ளன. இது திருநாவுக்கரசரின் பாடல் பெற்ற தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெக்கனூர்

இது திருநள்ளாற்றுக்குக் கிழக்கே 1.5 கி.மீ. தொலைவில் உள்ள தக்களூர் என்னும் ஊராக இருத்தல் வேண்டும். பூலோக நாதர் கற்றளி ஒன்றும் இவ்வூரில் உள்ளது. இங்கே கல்வெட்டுகள் அனைத்தும் சிதைக்கப்பட்டமைக்கான சுவடுகள் உள்ளன.

நல்லாற்றூர்

திருநள்ளாற்றுக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள ஊர். இங்கு இடிந்து போன பழமையான சிவன்கோயில் ஒன்று உள்ளது.

ஆமூர்

இவ்வூர் நாகப்பட்டினம் வட்டத்தில் இதே பெயருடன் உள்ளது.

வேளூர்

நாகப்பட்டினத்துக்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவிலுள்ள கீழ் வேளூர் என்னும் ஊராகவோ, திருவாரூருக்கு மேற்கே 11 கி.மீ. தொலைவிலுள்ள பெருவேளூர் என்னும் ஊராகவோ இருக்கலாம். இவற்றுள் பெருவேளூரிலுள்ள பிரியநாதரின் திருக்கோயில் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூடலூரர்

இவ்வூர் மாயவரத்துக்கு மேற்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது.

பரவைக்குடி

இவ்வூர் இக்காலத்தில் பாவட்டாக்குடி அல்லது பாவட்டாங்குடி என்னும் பெயருடன் திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள சுந்தரேசுவரர்க் கோயிலில் கல்வெட்டு உள்ளது. கல்வெட்டில் இதன்பெயர் **பாவடைகுடியான தியாகவினோத நல்லூர்** என்று காணப்பெறுகிறது. *(நன்னிலம் கல்வெட்டுகள் தொகுதி I, த.தொ.பொ.துறை வெளியீடு. சென்னை 79 : எண் 195/1977)*

போதிமங்கலம்

இது திருத்தெளிச்சேரிக்கு அண்மையில் போதிமங்கை என்னும் பெயருடன் உள்ளது. முற்காலத்தில் இங்குப் பௌத்தர்கள் பெருவாரியாக வாழ்ந்தனர். பௌத்தர்களின் தலைவர் சாரிபுத்தர் என்பவரோடு சம்பந்தசரணாலயர் என்பார் திருஞானசம்பந்தரின் முன்னிலையில் வாது செய்து வெற்றி பெற்றார் என்பது இங்கு நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் வரலாறாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாத்தனூர்

இவ்வூர் திரு நள்ளாற்றுக்கு வடகிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குப் பழமையான சிவன் கோயில் ஒன்றும் உள்ளது.

நாகமங்கலம்

இது திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 14 கி.மீ. தொலைவில் உள்ள ஊராகும்.

காரையூர்

இது தஞ்சைமாவட்டத்து நன்னிலம் வட்டத்தைச் சார்ந்த ஊராகும்.

கோரட்டுச்சேரி

காரைக்காலிலிருந்து பொறையாறு செல்லும் பெருவழியில் 5 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இங்குப் பழமையான சோமநாதசுவாமியின் திருக்கோயில் உள்ளது.

ஆலத்தூர்

இவ்வூர்த் திருநள்ளாற்றுக்குத் தெற்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாங்குடி

இவ்வூர் திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 32 கி.மீ. தொலைவில் கொல்லுமாங்குடி என்னும் பெயருடன் உள்ளது.

மருகல்

இவ்வூர் திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே 15கி.மீ.தொலைவில் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் இறைவன் மாணிக்க வண்ணர் என்னும் பெயருடையவர். இது திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற சிறப்புக்குரியது. கோச் செங்கட் சோழன் எடுப்பித்த எழுபது மாடக் கோயில்களில் இதுவும் ஒன்றென்று கருதப் பெறுகிறது.

எழிலூர்

புறங்கரம்பை நாட்டு ஊர்களில் இதுவும் ஒன்று. இக்காலத்தில் இது இலவனூர் என்னும் பெயருடன் உள்ளது.

கண்டியூர்

இவ்வூர் தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள வீரட்டானேஸ்வரம் எட்டு வீரட்டானங்களுள் ஒன்று. காவிரியின் தென்கரைத் தலங்களுள் இது 12ஆவது தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் பிரமதேவனின் தலையை அறுத்த இடம் கண்டியூர் என்று தலபுராணம் கூறுகிறது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசரின் பதிகம் ஒன்றுமாக, இரண்டு பதிகங்கள் உள்ளன. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள் வெளியிடப் பெற்றுள்ளன. (S.I.I. vol. III. N. 134and vol. 568 to 579)

ஆரியக்கூத்து

நம் நாட்டுக் கலைக் கோயில்களில் அழகை மட்டும் காணவில்லை. நம் முன்னோர்களின் வாழ்க்கையையும் புரிந்துகொள்ள முடிகிறது. இவற்றைக் காலத்தால் அழிக்க இயலவில்லை. காலத்தை வென்று நிற்கும் கல்வெட்டுக்களை மையமாகக் கொண்டு தொல்லியல் ஆயுவுத்துறையினரும் வரலாற்று அறிஞர்களும் நம் நாட்டின் பழமை வரலாறுகளை ஆராய்கின்றனர். தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் பதிவு செய்யப்பெற்றன. பதிவு செய்யப் பெறாதவை ஏராளம்.

வரலாறு என்பது வெறும் போர்களைப் பற்றியும் வெற்றிகளைப் பற்றியும் விளக்கும் கதைத் தொகுப்பு என்று இன்று யாரும் கருதுவதில்லை. அது சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியைப் பற்றி விளக்குகின்றபோது பெரிதும் சுவையுடையதாகவும் தனிச் சிறப்பு மிக்கதாயும் அமைகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலாம் இராஜாதிராஜ சோழனின் 35ஆம் ஆட்சியாண்டில் திருநள்ளாறுடையார்க் கோயிலில் ஆண்டுதோறும் மாசிமாதம் மகத்து நாளன்றும் வைகாசி மாதம் விசாகத்து நாளன்றும் ஸ்ரீகண்டன் கம்பனான அபிமான மேரு நாடகப் பேரரையனும் ஸ்ரீகண்டன் அரங்கனின் மக்களுமாக ஆரியக்கூத்து நிகழ்த்திவந்தனர்.

இவர்கள் அனுபவிப்பதற்காக ஆரியக் கூத்துக் காணி என்னும் பெயரில் 3 வேலி நிலங்கள் வழங்கப் பெற்றன. இவர்கள் தாம் ஆடிய இரண்டு நாள் கூத்துகளை ஐந்து ஐந்து அங்கங்களாகப் பிரித்து நிகழ்த்தினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூத்தைப்பற்றிய பிற கல்வெட்டுகள்

இராசாதிராசனின் கல்வெட்டுவழி வைகாசித் திருவாதிரை விழாவின்போது 6 முறை சாந்திக் கூத்து நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்ட இரண்டு நடன மாதர்களுக்கு நிலம் கொடுத்துள்ளதை அறிகிறோம். (36 புதுக்கோட்டை கல்வெட்டு 254/1914 எண்.139).

சுந்தரபாண்டியனின் பத்தாம் ஆட்சியாண்டில் "அறஞ்சை அரிட்டன்" என்பவன் சாந்திக்கூத்து நிகழ்த்தினான். அதற்காக நிலம் ஒதுக்கப் பெற்றுள்ளது (37 புதுக்கோட்டை கல்வெட்டு எண் 274).

மூன்றாம் இராசராசனின் 19ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த திருவொற்றியூர்க் கோயில் கல்வெட்டில், **ராசராச திருமண்டபத்தில் ஆவணித் திருவிழாவின் எட்டாம் நாள் அகமார்க்கம் அல்லது மெய்க்கூத்து நடை பெற்றது.** (38 தெ.இ.சா.பா: 1.211/ 1912 எண் 520 - 39. தெ.இ.சா.பா:1. 128/1912)

'சாந்திக் குனிப்பம்' என்று கூறப்படும் ஒருவகைக் கூத்தைப் பற்றிய செய்தியைச் சுந்தர பாண்டிய தேவரின் திருவொற்றியூர் கல்வெட்டு கூறுகிறது. (40.எ.ஆர்.இ.1913) பக்.127; 212/1910. எண் 525).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாம் ஆதித்தன் காலத்திய திருவிடை மருதூர்க் கல்வெட்டு, "திருவெள்ளார்றைச் சாக்கை என்பான் ஆரியக்கூத்து நிகழ்த்தினான்" என்று உள்ளது. (41.தெ.இ.சா. பா.4.எண்.118)

இராசராசன் ஒன்பதாம் ஆண்டியாண்டில் திருவாவடுதுறையில் சாக்கை காணி என்பான் ஆரியக் கூத்தை அரசன் முன்பு ஆடினான் என்று உள்ளது. (42.எ.ஆர்.இ/1925).

முதலாம் இராசேந்திரன் 29ஆவது ஆட்சியாண்டில் கீழப்பழுவூர்க் கல்வெட்டில் சாக்கைக் கூத்தைப்பற்றிய செய்தி வருகிறது. (44.எ.ஆர்.இ.65/1914)

திருவாவடுதுறையில் ஆழ்வார்க் கோயிலில் குமரன் ஸ்ரீகண்டன் ஆறங்கம் ஆரியக் கூத்தினை நிகழ்த்தினான் என்று உள்ளது. (45.எ.ஆர்.இ. 120/1925)

இச்செய்திகள் கூத்துகள் பற்றி வரும் கல்வெட்டுச் செய்திகளாகும்.

ஆனால் மிகத் தெளிவாகத் திருநள்ளாறு கல்வெட்டு ஆரியக் கூத்தைப்பற்றி விரிவாகக் கூறியிருக்கிறது. காலம் கி.பி.1043. (எ.ஆர்.இ.437/65.66)

திருநள்ளாறுடையார்க் கோயிலில் ஆண்டு தோறும் மாசி மாதம் மகத்து நாளன்றும் வைகாசி மாதம் விசாகத்து நாளன்றும் ஸ்ரீகண்டன் கம்பனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிமான மேருநாடகப் பேரரையனும் ஸ்ரீகண்டன் அரங்கனின் மக்களுமாக 'ஆரியக்கூத்து' நிகழ்த்தி வந்தனர்.

இதன்பொருட்டு இவர்கள் அனுபவிப்பதற்காக ஆரியக் கூத்துக் காணி என்னும் பெயரில் 3 வேலி நிலங்கள் இவர்களுக்குக் கொடையாக வழங்கப்பெற்றன. இவர்கள் தாம் ஆடிய இரண்டுநாள் கூத்துகளை ஐந்தைந்து அங்கங்களாகப் பிரித்து நிகழ்த்தினர். மேற்கூறிய விழாநாட்களில் ஆரியக்கூத்து நிகழ்த்தும் இக்கூட்டத்தார்க்கு 'விழாக் கொற்று' என்னும் 20 கலம் நெல்லும் ஒப்பனை செய்து கொள்ள அங்கம் ஒன்றுக்கு நாழி அரிசியும் இவர்களுக்குக் கொடுக்கப் பெற்றதை அறிகிறோம்.

ஆரியந் தமிழை யறியார் கூத்தின்
வீரிய மறியா வெறுமைக் கூத்தர்

என்று ஆரியக் கூத்து பற்றிய குறிப்பு தாள நூலில் காணப்பெறுவதாக (அறிவனார் - பஞ்சமரபு - மூலமும் உரையும் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பு - ஈரோடு 1975 - பக்கம் -6) அடிக்குறிப்பால் அறிகிறோம்.

சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதையில் வரும் இருவகைக் கூத்து என்னும் தொடருக்கு அடியார்க்கு நல்லார் 'ஆரியம் தமிழ்' என்று விளக்கம் கூறியுள்ளார். (உ.வே. சாமிநாதையர் பதிப்பு - சென்னை 1950. பக்கம் 79) ஆரியர் ஆடிய கழைக்கூத்து பற்றிய குறிப்பு சங்க நூலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணப்பெறுகிறது. (குறுந்தொகை - பாடல் 7) 'ஆரியர்கள் ஆடியகூத்து ஆரியக் கூத்து என்றும், தமிழர்கள் ஆடிய கூத்து தமிழ்க்கூத்து என்றும் பொதுவகையான பொருள் கொண்டாலும், இவ்விரு திறத்தார் ஆடிய கூத்துகளின் அடிப்படை வேறுபாடுகள் பற்றி இக்காலத்தில் அறிந்துகொள்ள இயலவில்லை.

ஆனால், திருநள்ளாறு கோயிலில் ஆண்டுதோறும் நடைபெற்ற ஆரியக்கூத்து கழைக்கூத்து அன்று; கதையை மையமாகக் கொண்டு நாடக அமைப்பில் அமைந்த கூத்தாகும். **'ஆரியக் கூத்துக் காணி'** என்பது ஆரியக்கூத்து ஆடியோர்க்கு விடப்பெற்ற கொடைநிலமாகும்.

பச்சைப் பதிக நிருத்தம் என்பதன் சிதைவாக இருக்கலாம். திருஞானசம்பந்தர் அனல் வாதம் செய்த பொழுது அவரால் நெருப்பில் இடம்பெற்ற பதிகம் "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகமாகும். அது திருநள்ளாற்றில் அவ்வடியாரால் பாடப்பெற்ற பதிகமாகும். நெருப்பில் இடப்பெற்ற அப்பதிகம் வேகாது இருந்தமையின் அப்பதிகம் பச்சைப்பதிகம் என்று பெயர் பெற்றது.

கல்வெட்டில் வருகின்ற 'பச்சைப்பதி' என்பது அப்பதிகத்தையே குறிப்பதாக இருத்தல் வேண்டும் திருநள்ளாற்றுக்கு அண்மையிலுள்ள வேறு சில கல்வெட்டுகளில் காணப்பெறும் **பச்சைப் பதியஞ்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோறுடையான், பச்சைப் பதிய நல்லூர் முதலான பெயர்கள் இக்கருத்தை வலியுறுத்துவனவாய் உள்ளன. திருநள்ளாற்றுக் கோயிலில் நிகழ்த்தப் பெற்ற ஆரியக்கூத்து பச்சைப்பதிகம் இக்கோயிலில் பாடப்பெற்றதையும், மதுரையில் நடைபெற்ற அனல் வாதத்தின்போது, அப்பதிகம் நெருப்பில் வேகாது நின்றதையும் மையமாகக் கொண்டு ஐந்து அங்கங்களாகப் பிரித்து நிகழ்த்தப் பெற்றிருத்தல் வேண்டும்.✪

அறச்செயல்கள்

கி.பி. 1045இல் முதலாம் இராஜாதி ராஜசோழன் காலத்தில், திருநள்ளாறில் இருக்கும் சிவபெருமானுக்கு நாள்தோறும் காலைச் சந்தியில் திருவமுது படைக்கும் பொருட்டு, விழியூரைச் சேர்ந்த கொம்மன்நாதன் என்பவன் 45 காசுகளை மூலதனமாக வழங்கினான்.

இக்காசுகளைப் பெற்றுக்கொண்ட இக்கோயில் சிவப்பிராமணர்கள், இக்காசுகளுக்கு ஆண்டுதோறும் வட்டியாக வரும் 45 கலம் நெல் வருவாயைக் கொண்டு இவ் அறச் செயலை நிறைவேற்றினர்.

கி.பி.1048இல் திருநள்ளாறுடையார்க்கு ஆண்டுதோறும் மாசிமாதம் நடைபெறும் விழாச் செலவுக்காகச் சோழேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலத்துச்

✪ 'புலமை' தொகுதி 22. திசம்பர் 1996 பகுதி : 2. "புதுவை மாநிலக் கல்வெட்டில் ஆரியக்கூத்து" வில்லியனூர் ந.வேங்கடேசன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபையினர் இவ் இறைவனுக்கு முக்காலே இரண்டு மா அளவுள்ள நிலங்களை விழாப்புறமாக வழங்கினர். இந்நிலங்களுக்கு அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய நிலவரிக்காகத் தேவகன்மிகளிடம் 50 காசுகளை மூலதனமாகப் பெற்றுக்கொண்டனர்.

இக் காசுகளுக்கு ஆண்டுதோறும் வட்டியாக வரும் 100 கலம் நெல்லைக் கொண்டு சபையினரே நிலவரியைச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டனர்.

கி.பி. 15.7.1094இல் முதல் குலோத்துங்கன் காலத்தில் பயிரேற்றாமல் தரிசாகக் கிடந்த நிலங்களில் பயிரேற்றும் பொருட்டு, திருநள்ளாறுடையார்கோயில் நிதியிலிருந்து 5 காசுகளைக் கடனாகப் பெற்றுக் கொண்ட ஊர்ச் சபையினர், காசு ஒன்றுக்கு 2 கலம் நெல்வீதம் ஆண்டு ஒன்றுக்கு 10கலம் நெல் வட்டியாக வழங்கி வந்தமை பற்றியும், அவ்வட்டி நெல்லைக் கொண்டு இறைவனுக்கு இரவுகால பூஜைக்கு வேண்டும் நிவேதனங்களுக்கு ஏற்பாடு செய்ய நிலக்கொடை வழங்கினர் என்பதும் தெரிகிறது.

இது முதற் குலோத்துங்க சோழனின் காலமாகிய 26.3.1110இல் நிகழ்ந்துள்ளது.

விருதராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலத்துச் சபையினர் திருநள்ளாறுடையார்க் கோயிலின் தெற்கு மண்டபத்தில் கூடியிருந்து, திருநள்ளாறிலுள்ள **வாகனூர் நாடுடையான் பட்டன்** என்பவனால் நிறுவப்பெற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மடத்துக்கு நிலக்கொடை வழங்கியது பற்றியும், சிவபெருமானுக்குச் சிறுகாலைச் சந்தி, உச்சிச் சந்தித்த காலங்களில் திருவமுது படைக்க ஏற்பாடு செய்தனர்.

மற்றும், **திசைச்சூடர்** என்பவளிடமும் நெல்வாய்க்குடியைச் சேர்ந்த வெள்ளாளன் ஒருவனிடமும் மூலதனமாகக் காசுகளைப் பெற்றுக் கொண்டு நந்தா விளக்கு எரிக்க வழிவகை செய்தமையைக் கல்வெட்டால் அறிகிறோம்.

விக்கிரம சோழனின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் கி.பி. 1133 இல், சீரிளங்கோப் புற்றிடங் கொண்டான் அபிமான சகாயப் பேரரையன் என்பவன், சோழர்களின் குலம் வளரவும், பகைவர்களை அவர்கள் வெற்றி கொள்ளவும், கோயிலும் ஊரும் செழிப்படையவும் வேண்டி நந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காகவும், குறிப்பிட்ட சந்தியில் இறைவனுக்குத் திருவமுது படைப்பதற்காகவும் 25 காசுகளை மூலதனமாக வழங்கினான்.

இம் மூலதனத்துக்கு ஆண்டுதோறும் வட்டியாக வரும் நெல்லைக்கொண்டு இவ்வறச் செயல்கள் நிகழ ஏற்பாடு செய்யப்பெற்றது.

மூன்றாம் இராஜராஜ சோழன் காலமாகிய கி.பி. 16.10.1241இல், திருநள்ளாறுடையார்க் கோயிலிலுள்ள நாடுடை நாயகன் திருமண்டபம் என்னும் மண்டபத்தில் கோயில் தானத்தாரும், மகேஸ்வரரும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாட்டவரும் கூடியிருந்து இக்கோயில் பூசைக் காரியங்களைத் தணிக்கை செய்தனர்.

அப்போது சிவப்பிராமணர்களில் சிலர் இக்கோயிலுக்கு நாள்தோறும் அளந்து வருவதாக ஒப்புக்கொண்ட அரசி, அவல், எள், எண்ணெய், இலுப்பை எண்ணெய் ஆகியவை அவ்வாறு அளக்கப்பெறாமல் தடைப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பெற்றது. ஆதலின் சிவப்பிராமணர்கள் மேற்கண்ட பொருள்களை வழங்குவதற்காக ஏற்கனவே மூலதனமாகப் பெற்றிருந்த காசுகளை அவர்களிடமிருந்து வசூலித்து, அவற்றைக் கொண்டு நிலம் வாங்கிக் கோயிலுக்கு வழங்குவதென்று கூட்டத்தினர் முடிவு செய்தனர்.

இம்முடிவின்படி அக்காசுகள் சிவப்பிராமணர்களிடமிருந்து வசூலிக்கப்பெற்றன. அவற்றைக்கொண்டு அவ்வை நல்லூரைச் சேர்ந்த சேரமான் பெருமாள் என்பவனுக்குச் சொந்தமான அரை நிலம் விலைக்கு வாங்கப்பெற்று, அது மேற்கூறிய தேவைகளுக்காகக் கோயிலுக்கு வழங்கப்பெற்றது. அந்நிலத்தின் வருவாயைக்கொண்டு நாள்தோறும் அரிசியும் பாலும் எள்ளெண்ணெயும் அளக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பெற்றது.

இச்சாசனத்தில் கோயில் தானத்தாரும் மாகேஸ்வரர்களும் நாட்டுச்சபை உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோப்பெருஞ்சிங்கன் காலமாகிய கி.பி. 7.3.1262இல் தென்மலியுடையான் தேவன் செல்வாண்டான் என்பவன், தான் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக நள்ளாறுடையார்க்கு நடைபெறும் ஆண்டுப் பெருவிழாவில் ஐந்தாம் நாள் விழாவன்று, இறைவனை உலா எழுந்தருளச் செய்யவும், தீர்த்தமாடச் செய்யவும் புத்தக்குடி என்னும் ஊரில் ஒன்றே அரைமா அரைக்காணி முந்திரிகை அளவுள்ள நிலங்களை விலைக்கு வாங்கி அவற்றைக் கொடையாக வழங்கினான்.

இந்நிலங்களில் இறைவனின் திருவமுது, திருபள்ளித்தாமம் உள்ளிட்ட தேவைகளுக்குப் பயன்படும் வண்ணம் தெங்கு, பலா, பூச்செடிகள் ஆகியவை வளர்க்க வேண்டுமென்பது கொடையாளியின் விருப்பமாகும். ஆதலின், திருநந்தவனம் உண்டாக்கிப் பராமரிக்கும் பொறுப்பை ஈசான தேவரின் சந்தானத்தைச் சேர்ந்த திருத்தொண்டர்களிடம் ஒப்படைத்து அவர்களின் ஜீவனத்துக்கு நிலமும் வழங்கினான்.

சடையவர்மன் ஸ்ரீவல்லபவனின் 3ஆம் ஆட்சியாண்டில் கி.பி.1311இல் ஒரு நிகழ்ச்சி.

அபிமுத்த நாயனார்க் கோயிலில் நடைபெறும் விழா நாட்களில், அக்கோயில் பெருமானை உலாவாக எழுந்தருளச் செய்வது போலவே சுந்தரபாண்டிய பிரமாதிராயர் எழுந்தருளுவித்த திருஞான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தரையும் உலாவாக எழுந்தருளச் செய்யவும், கடலுக்குத் தீர்த்தமாட எழுந்தருளச் செய்யவும் திருநள்ளாற்றைச் சேர்ந்த நாடுடை நாயகப் பேரிளமையார் என்னும் குழுவினர் ஏற்பாடு செய்தனர்.

திருஞானசம்பந்தப் பெருமானை உலாவாக எழுந்தருளச் செய்யும்பொழுது ஸ்ரீபாதம் தாங்கிச் செல்வதற்கு எட்டு ஆட்களையும், பண் இசைப்பார் இருவரையும் திருவிளக்கு எடுத்துச் செல்வதற்குத் தேவையான ஆட்களையும் குறைவில்லாமல் தாங்களே கொடுத்துத் திருஉலா எழுந்தருளச் செய்வதாக, சமய பண்டாரத்தார்க்கு அப்பேரிளமையார் உறுதியளித்ததைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலமாகிய கி.பி. 1323இல் பெருமானுக்கு (நடராஜர்) மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளில் அபிஷேகம் செய்யவும், உலா எழுந்தருளச் செய்யவும், திருவமுது படையல் சாத்துப்படி உள்ளிட்ட தேவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பெற்றது.

காரைக்கால் உப்பளத்தில் இக்கோயிலுக்கு சொந்தமாக இருந்த தரிசு நிலத்தின் ஒரு துண்டத்தையும் ஒரு கேணியையும் திருத்தி, உப்பு விளைவித்து, அவ்வுப்பைப் புறநாட்டில் விற்று, அதனால் வரும் முதலைக்கொண்டு மேற்கூறிய அறச்செயல்கள் நிகழ்த்தப்பெற வேண்டுமென்று கோயில் தானத்தார்க்கு ஆணையிடப்பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிமுத்தீஸ்வரத்து நாயனார்க்குச் சொந்தமான காரைக்கால் உப்பளத்தில், ஒரு வாய்க்காலில் உப்பு விளைவித்து அதனைப் புறநாட்டில் விற்பதால் வரும் முதலைக்கொண்டு இந்நாயனார்க்குத் திருப்பணி நடைபெறுதற்கு, கி.பி. 1328இல் ஏற்பாடு செய்யப் பெற்றமையைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

மேல் காசாக்குடி - முருகன் - பல்லவர்காலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டால் அறியும் உப்பு அளங்களும் உப்பு உற்பத்தியும்

பண்டைய நாளிலிருந்தே மனிதர் உணவில் உப்பு இன்றியமையாத ஒரு பகுதியாக இருந்து வருகிறது. ஆதிவாசிகளில் பலர் இக்காலத்திலும் உப்பில்லாத உணவை உட்கொள்கின்றனர். பாலைப் பருகுவோரும், பச்சையாகவோ, தீயிற்சுட்டோ இறைச்சியை மட்டும் உண்போரும் உப்பைத் தேவையற்றதாகக் கருதினர்.

மத்திய ஆப்பிரிக்காவையொத்த சில பகுதிகளில் உப்பு கிடைப்பது மிக அருமையாதலால், அங்கு இதைச் செல்வர் மட்டும் உணவிற்குப் பயன்படுத்துகின்றனர். உழவு தோன்றியது முதல் உப்பை உணவில் சேர்க்கும் முறையும் தோன்றியது. இது பழங்காலத்தில் மதக்கோட்பாடுகளிலும் சடங்குகளிலும் முதன்மை பெற்றிருந்தது.

உப்பு, தூய்மையையும், நட்பையும், நன்றியையும் குறிக்கும் பொருளாகப் பல நாடுகளில் வழங்குவதிலிருந்தே இதற்குப் பழங்கால மக்கள் கொடுத்த முதன்மை விளங்கும். பண்டைய நாளில் வாணிகத்திலும் உப்பு மிக இன்றியமையாததாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளங்கியது. பல வாணிகப் பாதைகள் உப்பு வாணிகத்திற்காகவே ஏற்பட்டவையாகும்.

ஆப்பிரிக்க நாடுகளிலும், திபெத்து முதலிய மத்திய பகுதிகளிலும் பணத்திற்குப் பதிலாக பண்டமாற்று முறையில் பயன்படுகின்றது. மீன்களை உப்பிட்டுக் காக்கின்றனர். பனிக்கட்டியுடன் கலந்து தாழ்ந்த வெப்ப நிலைகளைப் பெறவும், உணவு கெடாமல் காக்கவும், தோல்கள் அழுகாமல் காக்கவும், வயல்களுக்கு உரமாகவும், உலோக வேலையிலும், சிமெண்டுத் தொழிலிலும் உப்பு பெரும்பயன் அளிக்கிறது.

அக்காலத்தில் உப்பு உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்கப்பெற்றமையைக் கல்வெட்டு கூறுகிறது. சில உப்பளங்கள் கோவிலின் சார்பில் குத்தகைக்கு விடப்பெற்றது என்பதையும் தெரிவிக்கிறது.

இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டவை தவிர்த்து மற்றைய கோவிலுக்குச் சொந்தமான நிலங்களின் ஒரு பகுதி, வாய்க்கால் வழியாக உப்பு நீர் கொண்டுவரப் பெற்று உப்பளங்களாக மாற்றப்பெற்றன.

அவ்வாறு உற்பத்தி செய்யப்பெற்ற உப்பிற்கு வரிவிலக்கு அளித்தனர். இவற்றைப் பல பகுதிகளிலும் எடுத்துச் சென்று விற்றனர். விற்பனையால் பெறப்பட்ட அனைத்துப் பணமும் கோயில் பணிகளுக்கே செலவு செய்யப்பெற்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாற்றில் இரண்டு கல்வெட்டுகள் உப்பு உற்பத்திக்கு விதிக்கப்பெற்ற வரியைப்பற்றித் தெரிவிக்கின்றன. சில நேரங்களில் அரசர் வரி தவிர்ப்பு செய்து வந்தனர்.

காரைக்கால் உப்பளத்தில் இக்கோயிலுக்குச் சொந்தமாக இருந்த தரிசு நிலத்தின் ஒரு துண்டத்தையும் ஒரு கேணியையும் திருத்தி, உப்பு விளைவித்து, அவ்வுப்பைப் புறநாட்டில் விற்று அதனால் வரும் வருவாயைக்கொண்டு மேற்கூறிய அறச்செயல்கள் நிகழ்த்தப்பெற வேண்டுமென்று கோயில் தானத்தார்க்கு ஆணையிடப் பெற்றது.

மற்றொரு கல்வெட்டு மேற்கூறிய பாண்டியனின் 11ஆம் ஆட்சியாண்டில் கி.பி. 1328இல் பதியப்பெற்றுள்ளது.

அபிமுத்தீஸ்வரத்து நாயனார்க்குச் சொந்தமான காரைக்கால் உப்பளத்தில் ஒரு வாய்க்காலில் வரும் தண்ணீரால் உப்பு விளைவித்து, அவ்வுப்பைப் புறநாட்டில் விற்பதால் வரும் வருவாயைக்கொண்டு இந்நாயனார்க்குத் திருப்பணி நடைபெறுதற்கு ஏற்பாடு செய்யப் பெற்றமையைக் குறிக்கிறது.

ஆதிரை விழா

முதல் கல்வெட்டிலே குறித்துள்ள ஆதிரைத் திருநாள் அன்றும் இன்றும் பெருமையும் கொண்டாடினர். இதை,

In`Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விடுதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை 'ஆதிரை'
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க

என்று பரிபாடல்-11 சுட்டுகிறது.

செய்தி விளக்கம்

கல்வெட்டில் நடராசப் பெருமான், 'நாடகம் ஆடும் பெருமாள்' என்றும், 'நாடுடைய நாடகப் பெருமாள்' என்றும் அழைக்கப்பெற்ற குறிப்பு உள்ளது.

'கலிங்கத் துறையன்' என்கின்ற ஒருவர் செல்வத்தைத் திரட்டிச் சீரிய முறையில் செலவிட்டார். கோயிற் பணிகளுக்கும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறவும் உப்பளங்களாக மாற்றப்பட்ட தரிசு நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்தான். மேலும் உற்பத்தி செய்த உப்பை எங்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ள அனுமதி வழங்கினான்.

உப்பளங்களுக்கு உப்பு நீர் (கடல்நீர்) வாய்க்கால்கள் வழியாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உப்பை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கு அரசின் ஆணை தேவை என்பதை இக்கல்வெட்டு மிகத் தெளிவாகக் கூறுகிறது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரருடன் செய்து கொண்ட ஒப்பந்தம், கி.பி. 1818ஆம் ஆண்டு.

பிரெஞ்சுக்காரர்கள் காரைக்கால் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதை நிறுத்தி ஆங்கிலேயர் மட்டுமே உப்பு உற்பத்தி செய்யும் தனித்த அதிகாரத்தைப் பெற்றனர். அந்த அதிகாரத்தைப் பெற்றதற்காக ஆங்கிலேயர்கள் 4,000 காசுகளை (star) இழப்பீட்டுத் தொகையாகத் தருவதுடன் புதுவையில் வாழ்ந்த பிரெஞ்சுக்காரர்களுக்குத் தேவையான உப்பையும் கொடுத்தனர்.

கல்வெட்டில் சமுதாயப்பணி

ஐந்தாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 16-7-1333இல்.) கல்வெட்டுச் செய்தி :

இடைக்கழிநாட்டுக் குற்றூர் உப்பரீஸ்வரம் என்னும் சிவன் கோயிலில் தொண்டு செய்து வரும் வளத்து வாழ்வித்தான் வாணாதிராஜ பிரமாராயன் என்னும் சிவப்பிராமணனுக்கு, திருநள்ளாறுடையார்க் கோயில் தேவகன்மிகள் சமுதாயப்பணி ஒன்றை 50 பணத்துக்கு விற்று, அத்தொகையை இறைவனுக்கு அணிகலன்கள் செய்வதற்காகக் கோயிற் கருவூலத்தில் வைப்பாக இட்டமையைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

நம் முன்னோர் கல்லில் கலை வளர்த்தனர். கல்வியும் வளர்ந்தது. கல்லில் வளர்த்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழுத்துக்களைக் கல்வெட்டு என்று கூறுகிறோம். அரசியல் பொருளாதார சமுதாய வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக இது அமைந்துள்ளது.

இதுகாறும் கிடைத்துள்ள தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில்கூட சமுதாயப்பணி என்றால் என்ன என்பதற்குரிய விளக்கமாகச் செய்திகளை அறிந்துகொள்ள இயலவில்லை. ஆயினும் புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் பகுதியில் உள்ள திருநள்ளாற்றுச் சிவன் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டொன்று, அக்காலத்துச் சமுதாயப் பணிபற்றி அறிந்துகொள்ள ஓரளவு துணை செய்கிறது.

இது இரண்டாவது பாண்டியப்பேரரசு நிகழ்ந்த காலத்தில் வரையப்பெற்றது. கோச்சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய நான்காவது ஆட்சியாண்டில் (16-7-1333) வரையப்பெற்றது.

இக்காலத்தில் பொதுநலத் தொண்டு செய்வதையே சமுதாயப்பணி என்னும் பெயரால் பெரும்பாலும் குறிப்பிட்டு வழங்குகின்றோம். கல்வெட்டில் இச்சொல் சமுதாயப்பணி என்று காணப்பெறுகிறது. மேற்கூறிய கல்வெட்டு, கோயிற்பணிகளையே சமுதாயப் பணியென்று குறிக்கிறது.

சிவன் கோயிலுக்குக்குரிய நிலத்தை விற்பதாயினும் கோயிலுக்கென்று நிலங்களை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாங்குவதாயினும் சண்டேஸ்வரர் பெயரால் செய்வதே அக்காலத்து வழக்கம்.

கோயிலில் பணியாற்றும் அக்காலத்து அறங்காவல் குழுவினர் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகள் என்று குறிக்கப்பெறுவதை எண்ணற்ற கல்வெட்டுகளில் காணலாம். திருநள்ளாற்றுச் சிவன் கோயிலில் தொண்டு செய்த அறங்காவற் குழுவினரான சண்டேஸ்வர தேவகன்மிகள் அக்கோயிலுக்குரிய சமுதாயப்பணியொன்றை ஐம்பது பணத்துக்கு விலைகொடுத்து வாங்கினர்ன். திருநள்ளாற்றுச் சிவன் கோயில் தேவகன்மிகள் இவனிடம் சமுதாயப்பணி என்னும் பெயரால் விற்றது கோயிலுக்குச் சொந்தமான நிலமேயாகும்.

திருநள்ளாற்றுச் சிவபெருமானுக்கு அணிகலன்கள் செய்யும் பொருட்டுக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை விற்றதாகப் பின்வரும் கல்வெட்டுப் பகுதி கூறுகிறது.

"……

5……ஐம்பதுக்கும் இப்பணி யொன்றும் விலையாக விற்று விலைப்படி பணமைம்பதும் கோயில் பொற்ப்பண்டாரத்துப் பெருமாளுக்குத் திரு ஆபரணம் பண்ணுகிற இதுக்கு உடலாக ஒடுக்குவித்துக்கொண்டு சமுதாயப் பணி ஒன்றுக்கு…."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக் கல்வெட்டு அறிவிப்பது : கோயிலுக்குச் சொந்தமான நிலத்தைச் சமுதாயப்பணி யென்னும் பெயரால் அக்கோயில் சிவப்பிரமாணர்கள் விற்பதற்கு உரிமை பெற்றிருந்தனர். இந்த ஆவணத்தில் அக்கோயில் சமுதாயப் பணியை மேற்கொண்டிருந்த 25 அறங்காவற் குழுவினர் ஒப்பமிட்டுள்ளனர். ஒப்பமிட்டுள்ள இவர்களில் பெரும்பாலோர் சிவப்பிராமணர்களே. இவர்களில் பலர் காசியப கோத்திரத்தையும் பரத்துவஜி கோத்திரத்தையும் சார்த்தவர்களாக இருந்துள்ளனர்.

இவர்களுள் கோயிற்கணக்கர், திருமேனி காப்போர், காவல் இருப்போர், ஸ்ரீபாதம் தாங்குவோர் ஆகியோர் சமுதாயப் பணியாளர் என்று இக்கல்வெட்டு குறிப்பது நினைவுகொள்ளத் தக்கது. அறங்காவலர் குழுவினரின் விருப்பத்திற்கிணங்க, இந்த ஆவணத்தைச் சிற்பாசாரியன் புவன முழுதுடைய ஆசாரியனும் கல்தச்சன் நாடகமாடும் பெருமாள் என்பானும் கல்லில் வரைந்துள்ளனர்.

16.10.1241ஆண்டில் **ஸ்ரீ பாதம் தாங்குவதற்கு சாமுதாயம் தில்லை நாயக னெழுத்தென்றும்** என்று வரும் தொடர் சோழர் ஆட்சிக் காலத்திலும் இச் சொல் இப் பொருளில் வழங்கியதைக் காணலாம்.

மாறவர்மன் வீரபாண்டியன் காலத்திய (கி.பி. 1354இல்) வரையப்பட்ட கல்வெட்டில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறுடையார் கோயிலில் **"ஸ்ரீபாதம் தாங்கும் பணி திருக்கேரளாந்தகன் எடுக்கும் பணி முதலான பணிகளைச் செய்து வந்தோர் சமுதாயம் செய்வார்"** என்றே குறிக்கப்பட்டுள்ளனர். அன்றியும், **"சாமுதாயம் ஆளுடையான் கோயில் பிள்ளையான பெரிய நாட்டு விழுப்பரையன்", "சாமுதாயம் சறுவக்குடையான திருநள்ளாறுடையானான நாற்பத்தெண்ணாயிர விழுப்பரையனுக்கும்"**

"சாமுதாயம் மருகலுடையான் திருநள்ளாறுடையான் ஸ்ரீமாதேஸ்வர விழுப்பரையனும்", "இப்பணம் இருநுறும் செம்பொன் செய்மாலை திருவாபரணத்துக் குடலாக கோயில் பண்டாரத்து ஓடுக்குகையில் தங்களுக்கு இலக்கைக்கு சாமுதாயம் பேர் நாலுக்கு பேர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு பதக்காக வந்த நெல்லும்"

"திருப்பணி சமுதாயம் காளியபன் சூரியதேவன் நாற்பத்தெண்ணாயிர பிராமராயன்" என வரும் தொடர்கள் மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளன.

நான்காம் கோச்சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1326) காலத்திய கல்வெட்டு ஒன்றில் ஒப்பமிட்டோரின் பெயர் வரிசையில், **"சமுதாயம் அழகிய சிற்றம்பல முடையாநேந்"** என்னும் தொடர் காணப்பெறுதல் மேற்கூறியவற்றோடு கருதத்தக்க ஒன்றாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றும், வில்லியனூர்ச் சிவன் கோயிலில் காணப்பெறும் பராக்கிரமப் பாண்டியன் காலத்திய (கி.பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட) கல்வெட்டு ஒன்றில், அக்கோயிலில் தொண்டாற்றி வந்த இறைப்பணியாளர்கள் **சமுதாயம் செய்வார்** என்னும் தொடரால் குறிப்பிடப்படுவது உளங்கொளத் தக்கது.



'புலமை' தொகுதி : 1. "புதுவை மாநிலக் கல்வெட்டில் சமுதாயப்பணி" - வில்லியனூர், ந.வேங்கடேசன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டில் நாணயம்

நாணயம் சற்றேறக்குறைய 2,700 ஆண்டுகளுக்கு முன்பே உருவாயின. பொருள்களின் மதிப்பை அளவிடும் கருவியாகப் பயன்பட்டன. அவை, வரலாற்று மைல் கற்களாகவும் பண்பாட்டு வளர்ச்சியின் சின்னங்களாகவும் இன்று திகழ்கின்றன. வரலாற்றோடு அக்கால மக்களின் கலை நுட்பத்தையும் தெளிவாக உணர முடிகிறது.

திருநள்ளாறு சிவன் கோயிலில் சடையவர்மன் குலசேகர பாண்டியனால் (இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன்) கி.பி. 1336 இல் வரையப்பெற்ற கல்வெட்டொன்று, **"வாளால் வழி திறந்தான் பணம்"** என்னும் பெயருடைய பணம் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. வாளால் வழிதிறந்தான் என்பது முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியனின் சிறப்புப் பெயராகும்.

கழுகும் பட்ட பாழ் மணலிடுக்கும் பிரமானபடி
வாளால் வழி திறந்தான் பணம் இருபத்து ஐயாயிரம்

என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தென்னாட்டின் மீது படையெடுத்த டெல்லிசுல்தான் முபாரக் ஷாவின் படைத்தலைவனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தியாகராசர்

"ஆதிநாளில் திருமால் மகப்பேறு வேண்டிச் சிவனை அம்மையோடும் கந்தரோடும் கூடிய தியாகராஜப் பெருமானை மார்பகத்து வைத்துப் பூஜித்து அருள் பெற்றார்."

"அம்மூர்த்தியை தேவேந்திரன் பெற்றுப் பூஜித்து வரும் நாளில் வாலாசுரனை வென்று தனக்குத் துணை செய்த முசுகுந்த சக்கரவர்த்திக்குப் பரிசு அளிக்க நினைத்து, யாது வேண்டினும் ஈவோம் - என்று சொல்ல, முசுகுந்தன் நீ உன் பூஜாமூர்த்தியைத் தருவாய் - எனக் கேட்டார். அறியாது கூறிய இந்திரன் அப் பூஜாமூர்த்தியைப் போலவே 6 உருவங்களைச் செய்து அதனுடன் சேர்த்து வைக்கவும், முசுகுந்தன் இறையருளால் மூலமூர்த்திகளையே எடுக்கவும், இந்திரன் அதனுடன் அவ்வாறையும் சேர்த்துக் கொடுத்தான் என்பது புராணச் செய்தி:

இவ்வேழு மூர்த்திகளும் இருக்கும் தலங்களே **சப்தவிடங்கத் தலங்கள்** ஆகும். அவற்றுள் ஒன்றாக அமைந்து சிறப்புப் பெற்றது திருநள்ளாறு.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

	சப்த விடங்கத் தலங்கள்		
திருவாரூர்	- வீதிவிடங்கர்	மரகத லிங்கம்	அஜபா நடனம்
திருநள்ளாறு	- நாகவிடங்கர்	மரகத லிங்கம்	உன்மத்த நடனம்
திருநாகைக்காரோணம்	- சுந்தரவிடங்கர்	சோமஸ்கந்த லிங்கம்	தரங்க நடனம்
திருக்காரவாசல்	- ஆதிவிடங்கர்	மரகத லிங்கம்	குக்குட நடனம்
திருக்கோளிலி (திருக்குவளை)	- அவனிவிடங்கர்	மரகத லிங்கம்	பிருங்க நடனம்
திருவாய்மூர்	- நீலவிடங்கர்	ஸ்படிக லிங்கம்	கமல நடனம்
திருமறைக்காடு	- புவனிவிடங்கர்	மரகத லிங்கம்	ஹம்ச நடனம்

இவ்வாறு இத்தலங்களில் சோமாஸ்கந்தரைத் தியாகராசராக வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோமாஸ்கந்தர்

அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களில், சுகாசனர் முதலான மூர்த்தியாக 11ஆவது சோமாஸ்கந்தர் விளங்குகிறார்.

உமையன்னை பிரியாமல் உடனுறைவதாலும் சோமன் எனப்பட்டார்.

சிவாலயங்களில் விளங்கும் மகேஸ்வரத் திருமேனிகளில் மிகச் சிறப்புடையது சோமாஸ்கந்த மூர்த்தியாகும். இத்திருமேனியினை சிலை உருவிலும் சுதை வடிவிலும், பஞ்சலோகச் சிலையிலும், மரத்திலும் (தேர்ச்சிற்பம்) ஓவியத்திலும் காணலாம்.

இவ்வுருவம் சச்சிதானந்த உருவமாகும். சோமாஸ்கந்தர் திருமேனியானது பஞ்ச மூர்த்திகளில் ஒன்றாகும். இத் திருமேனி மேற்கு ஆவரணத்தில் விளங்கும். மிகப் பழமையான சிவாலயத்தின் கருவறையின் பின்னால் சுவரை ஒட்டினாற் போன்று சிலை உருவமாகவோ (பனைமலை) அல்லது சிற்பமாகவோ விளங்குகிறது.

இத்திருமேனிக்கு முன்னால் சிவலிங்கம் விளங்கும். இத் திருமேனியானது சிவன்-முருகன்-

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உமை இம்மூவரும் தனித் தனி பத்ம பீடத்தில் ஒருசேர விளங்குவர். சில சிவாலயங்கள் சோமாஸ்கந்தர் வடிவமைப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. "மேலும் மாமல்லபுரம் இராமானுச மண்டபக் கருவறையின் பின்சுவரிலும், காஞ்சிபுரம் கைலாசநாதர் ஆலயத்திலும், பனைமலை மலைக் கோயிலிலும் சோமாஸ்கந்தர் திருமேனி விளங்குவதால் தொன்மைச் சிறப்பு தெரியவருகிறது."✪

இத்திருமேனியானது பிரம்மோற்சவ காலங்களில் பிரதானமாகப் போற்றப்படுகிறது. இந்தத் திருமேனியினைத் தொன்றுதொட்டுத் தியாகராஜராகப் போற்றி வழிபடப்படுகிறது. இத்தகு தியாகராஜர் தலங்களை சப்த விடங்கத் தலங்கள் எனக் கூறுவர்.

✪ 'சோமஸ்கந்தர்' திருவாவடுதுறை ஆதீனம். வெளியீடு 407.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாற்றில் தியாகராஜர்

தியாகராஜாவைத் தூக்குவது ஸ்தானிகர் என்போரின் தனிப்பட்ட உரிமையாகும்.

ஸ்தானிகர்கள் வாரைகளை மஞ்சத்துடன் சேர்த்துக் கயிறு போட்டுச் சாதாரண முறையில் கட்டுவது கிடையாது.

வாரைகளையும் பிள்ளைத் தண்டுகளையும் முன்கூட்டியே தமக்கே உரிய சிறப்பான முறையில் ஸ்தானிகர்கள் தயாரித்துக் கட்டி வைத்து, அதை அறையில் பூட்டி வைப்பர். அவ்வறையின் சாவியை ஸ்தானிகர்களே வைத்திருப்பர்.

ஸ்தானிகர்கள் தியாகராசர் சந்நிதியின் கதவுகளை மூடிவிட்டு வாரைகள் தயார் செய்து வைப்பார்கள்.

சாமியை வாரையைப் பிடித்துத் தூக்குவது கிடையாது. முன்பக்கத்துப் பிள்ளைத்தண்டை 6 பேர் தோளில் தூக்கிக்கொள்வர். கைகளை வாரையின்மேல் வைத்து அணைத்துக்கொள்வார்கள். இதேபோல் பின் பக்கத்துப் பிள்ளைத் தண்டையும் 6 பேர் தோளில் தூக்கி வைத்துக்கொள்வார்கள். இப்போது மேற்கூறிய

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

12 பேர்களின் தோளில் முழு தியாகராஜ மஞ்சமும் அமர்ந்திருக்கும்.

12 பேர் பிள்ளைத் தண்டுகளைத் தூக்கியதும் சாமி உன்மத்த நடன ஆட்டம் ஆடத் தொடங்கும். ஆடுபவர்களின் தோளில் இருக்கும் இறைவன் ஆடுவது போலவே தோற்றமளிக்கும். இயற்கையாகவே ஆடுவது போன்று இருக்கும். உன் மத்த நடனம் ஆடும்போது தூக்குபவர்களின் கால்களும் அதற்குத் தக்கவாறு மாறி மாறி நடனமாடும்.

வாரையின் முன்புறம் ஒருவர், பின்புறம் ஒருவர் வாரையின் மேலும் கீழுமாகப் பிடித்து, ஆடுதற்குத் துணை புரிவார். முன் கோடி ஒருவரும் பின் கோடி ஒருவரும் குஞ்சம் பிடித்திருப்பர்.

சாமி, வலமும் இடமும் கீழும் பூமிவரையில் சாய்ந்து உன்மத்த நடனம் ஆடும். இதன் முறையை நன்கு அறிந்திருப்பர் ஸ்தானிகர்கள். தேரில் இருக்கும் தியாகராஜாவைக் காவல் புரியவேண்டிய வேலையும் ஸ்தானிகர்களுடையதே. ஆனால் இப்போது காவல் துறையினர் காவல் புரிகின்றனர்.

தேர் ஊரைச் சுற்றி வந்ததும், தியாகராசரை உன்மத்த ஆட்டத்துடன் ஸ்தானிகர்கள், கோயில் பிரகாரத்தில் இருக்கும் எண்ணெய்க்காப்பு மண்டபத்திற்குக் கொண்டு வருவார்கள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்மத்த ஆட்டத்தின்போது பெரிய தாளம், தண்டை, நமரி முதலிய வாத்தியங்கள் (எக்காள வகையறா 5 வகை வாத்தியங்கள்) வாசிப்பர்.

ஸ்தானிகர்களின் ஆண்வாரிசுக்கே தியாகராசரைத் தூக்கும் உரிமை உண்டு. பெண்ணைக் கட்டிக்கொண்ட மாப்பிள்ளைகளுக்கு உரிமை இல்லை.

ஸ்தானிகர்களின் வீட்டுத் திருமணத்திற்கு, செலவுக்காக கோவிலில் ரூ. 5 நன்கொடை கொடுப்பர். ஸ்தானிகர்கள் வீட்டில் துக்க நிகழ்ச்சி நிகழ்ந்தால் அடக்கம் ஆகும் வரை கோயில் மூடி இருக்கும்.

மேலும் பிரேதத்திற்குச் சந்தனக்கட்டை வாய்க்கரிசி, தேங்காய், வெற்றிலைப்பாக்கு இவற்றைப் பரிவட்டத்தில் கட்டி ஓர் இடத்தில் வைத்துவிடுவர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தானிகர்கள் விபரம்

ஸ்தானிகர்கள் முன்கோடி அறுவர்

திருவாளர் இராமாமிர்தம் பிள்ளையின் குடும்பத்தினர்
திருவாளர் மாணிக்கம்பிள்ளை
(கோடியாபிள்ளை, கிருஷ்ணப்பிள்ளை மரபினர்)
திருவாளர் ரெத்தினம்பிள்ளை
திருவாளர் அருணாசலம்பிள்ளை –
குள்ளசிங்கார வேலுப்பிள்ளை.

பின்கோடி ஸ்தானிர் அறுவர்

திருவாளர் **செல்லப் பெருமாள்பிள்ளை** குடும்பத்தினர்.

திரு **கோ. சீனிவாசப்பிள்ளை** குடும்பத்தினர்

திரு **வி. இராமலிங்கம்பிள்ளை**

திரு **அப்பு பிள்ளை** குடும்பத்தினர்

திரு **கோவிந்தபிள்ளை** குடும்பத்தினர்

திரு **நடேசப் பிள்ளை – மாரிமுத்தாபிள்ளை** குடும்பத்தினர்

நேர்க்காணல் – திருவாளர் முனைவர் எஸ்.எஸ். முருகேசம்பிள்ளை அவர்கள். திருவாளர் கி.மா. சிவபுண்ணியம் வயது 80, தெற்குவீதி, திருநள்ளாறு. திருவாளர் ந.சா. சிவானந்தம் வயது 79. தலையாரித்தெரு, திருநள்ளாறு திருவாளர் ஜி. இராமகிருஷ்ண அய்யர், திருநள்ளாறு குருமூர்த்தி ஐயர் (சர்க்கரை)

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

செவிவழிச் செய்தி

இடையன் அபிஷேகத்திற்குப் பால் கொடுத்து வந்தான். ஆனால் கணக்கப்பிள்ளை பாலைத் திருடிக்கொண்டு, பால் வரவில்லை என்று பொய்க்கணக்கு எழுதிவிட்டார். உடனே பொய்க்குற்றம் சாட்டப்பட்ட இடையனைத் தண்டித்து வெட்டிவிட்டார்கள்.

தியாகராஜர் இடையனை உயிர்ப்பித்து அவனுக்குக் காட்சி கொடுக்கிறார். கணக்குப் பிள்ளையின் தலையைச் சிவன் தன் சூலத்தால் எடுத்து விட்டார். அத்தலை விழுந்த இடம் இன்றும் மண்டைக்குளம் (மட்டைக்குளம்) என்று அழைக்கப்பெறுகிறது. சந்நிதியிலிருந்து சூலம் வந்தது என்பதையறிய இன்றும் பலிபீடம் ஒதுங்கி வழிவிட்டது போன்று இருக்கும் காட்சியைக் காணலாம்.

தியாரராஜா புறப்பாடு : 6 இடங்கள்

1. வசந்த மண்டபம் எழுந்தருளல்
2. யதாஸ்தானம் வருகை
3. தேருக்குப் புறப்படுதல்
4. தேரிலிருந்து எண்ணெய்க்கா மண்டபம் வருகை
5. எண்ணெய்க்கா மண்டபத்திலிருந்து யதாஸ்தானம் வருகை
6. இடையன் காட்சி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டில் தியாகராஜருக்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறும்

1. சித்திரை ஆண்டுப் பிறப்பு
2. சித்திரை - நிறைமதி
3. ஆடி
4. ஐப்பசி
5. மார்கழி (திருவாதிரை)
6. தை

தியாகராஜரைப் பற்றிய நூல்கள்

1. **தியாகராச லீலை :** திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் கி.பி. 1845ஆம் ஆண்டு இயற்றப்பெற்றது. தியாகராசப்பெருமான் இயற்றிய 360 லீலைகளுள் முதல் 13 லீலைகளையும் 14ஆவது லீலையின் முற்பகுதியும் உடையது.

2. **தியாகராசர் பள்ளு :** 16ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப்பிரகாசர் இயற்றியது என்பார்.

3. **தியாகராசர் குறவஞ்சி :** 17ஆம் நூற்றாண்டில் இயற்றியது.

4. **தியாகராசர் கழிநெடில்**

5. **தியாக வசந்தக் கலிப்பா**

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடமொழி நூல்: 1. ஸ்ரீ தியாகராசர். திருத்தலங்கள் வரலாறு – ஐ. பக்கம் 32. டாக்டர் உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு.

தியாகராசரின் வேறு பெயர்கள்

அசைந்தாடிய பெருமான், அடிக்காயிரம் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியுமாடுவார், இரத்தின சிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கம்பிக் காதழகர், கருணாகரத் தொண்டைமான், கனகத் தியாகேசர், கிண்கிணிக் காலழகர், செங்கழுநீர்த் தாமர், செம்பொற் சிங்காதனாதிபதி, செவ்வந்தித் தாமர், செவ்வந்தித் தோட்டழகர், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமான், தியாகப் பெருமாள், திருவந்திக் காப்பழகர், மணித்தண்டில் அசைந்தாடிய பெருமான், முன்னிலும் பின்னழகர், வள்ளல், வீதிவிடங்கப் பெருமான் என்பன இவர்க்குரிய திருப்பெயர்கள்.

இவருடைய நடனம் : ஹம்ச நடனம், அஜபா நடனம், நாதாந்த நடனம், புயங்க நடனம் என்று பாராட்டப்பெறும்.

தேவசபை : இது தியாகேசர் எழுந்தருளியிருக்குமிடம்.

திருச்சாலகம் : இது தென்றல் தவழ்ந்து வருவதற்கு ஸ்ரீ தியாகேசருக்கு நேரே தென்பாற் சுவரில் அமைக்கப்பெற்றுள்ள கல் பலகணி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாத்தியங்கள் : சுத்தமத்தளம், பஞ்சவாத்தியங்கள் பஞ்சானை முரசு முதலியன.

தியாகக்கொடி : இவருடைய துவசம் இப்பெயரால் வழங்கும்.

ஆழித்தேர் : இஃது இவருடைய திருத்தேரின் திருநாமம்.

இடபதேவர் : இவர் மூலவர் தியாகேசருடைய சந்நிதியிலுள்ள திருநந்தி தேவர். இவர் நின்ற திருக்கோலமாகவே உள்ளார்.

ஸ்ரீதியாகராச மூர்த்திக்கு முசுகுந்த சக்ரவர்த்தியால் வைவசுவத மனுவந்திரத்தில் செய்விக்கப்பெற்று அக்காலம் தொடங்கி இன்றுவரையில் சோழ அரசர்கள் முதலியவர்களால் பரிபாலனம் செய்யப்பெற்று வந்ததும்.

"ஆழித்தேர் வித்தகனையான் கண்டதாரூரே" என்று தேவராத்தில் சிறப்பித்துப் பாராட்டப் பெற்றதுமாகிய திருத்தேர் வாய்ந்ததும் இத்தலமேயாகும்.✪

✪ (1. திருத்தல வரலாறு : டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு)

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு கல்வெட்டரல் அறியும்
மக்கள் பெயர்கள்

கொம்மன் தாதன்,

ஸ்ரீகண்டன் கம்பனான அபிமானமேரு
நாடகப்பேரரையன்

ஸ்ரீகண்டன் அரங்கன்

தேவன் புவனி மாணிக்கம்

திருவரங்க நாராயணக் கிரமவித்தன்

ஈஸ்வரக் கிரமவித்தன்

சீரூடையாள் (பெண்)

வாகளூர் நாடுடையான் பட்டன்

திசைச்சுடர் (பெண்)

இராயூர் பெரியானான திருச்சிற்றம்பல
மூவேந்த வேளான்.

சீரிளங்கோப் புற்றிடங்கொண்டான் அபிமான
சகாயப் பேரரையன்

குனித்தான் சிவதேவனான மீனவன் மூவேந்த
வேளான்.

உடைய நம்பியரான தொண்டைமானார்

சோறனான நாடுடைய நாயக மாயிலட்டி

பகுடையான் சான்று போனான்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோலை இடர் தீர்ந்தான் முழையூர்
நாட்டுக்கோன்

வாது செய் வாரணன்

சிவமதி

சேரமான் பெருமாள்

வீரமோகன் காடவராயன்

அழகிய நம்பிராட்டி (பெண்)

பொன்னாழ்வான்

நச்சினார்க்கினியான்

தென்மலியுடையான் தேவன் செல்வாண்டான்

சுந்தரப்பெருமான்

கோதண்டராமன்

வளத்து வாழ்வித்தான் வாணாதிராஜ
பிரமாராயன்

பெரிய நாயன் முழச்சோணாட்டுக் கோனார்

எழிலூருடையான் சூரியதேவன்

முதலான பெயர்கள் திருநள்ளாற்றுச் சிவன்கோயில் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். சேரமான் பெருமாள், நச்சினார்க்கினியான், கோதண்டராமன் போன்ற ஒருசில பெயர்களே இக்காலத்து வழக்கில் இருப்பதை அறிகிறோம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவன் கோயில் – நல்லம்பல்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. நல்லம்பல்

இவ்வூரின் பழமையான பெயர் நல்லம்பர் என்பதை இங்குள்ள கல்வெட்டால் அறியலாம். இதுவே இப்பொழுது நல்லம்பல் என்று மருவி வழங்குகிறது. இவ்வூரில் மூன்று கல்வெட்டுகள் கிடைத்தன.

இங்குள்ள, தான்தோன்றி மகாதேவர்க்கு நடைபெறும் படித்தரக் கட்டளைக்காக வழங்கப்பெற்ற கொடைநிலம். இந்நிலம் இவ்வூரைச் சேர்ந்த அம்பலவன் கம்பன் என்பவனால் கொடுக்கப் பெற்றதாகும்.

கல்வெட்டில் வரும் பிடாரியார் கோயில் இக்காலத்தில் இல்லை.

பவித்திர மாணிக்கப் பேரேரி

திருமாலின் பெயரால் இப்பகுதியில் இருந்த ஏரி அழைக்கப்பெற்றிருந்தது. நல்லம்பலில் வாழ்ந்தவன் நெற்குன்றங்கிழான் என்பவன். இவன் நெற்குன்றம் என்னும் ஊருக்குத் தலைவனாக

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கவேண்டும். இருங்கண்டி சவரிபட்டன் என்பது இவனுடைய பெயர்.

'விழியூர்' என்று கல்வெட்டிலே வரும் ஊர் இக்காலத்து விழுதியூராக இருக்கலாம். நல்லம்பலுக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

கீரனூர் : இது நல்லம்பலிலிருந்து வடமேற்கே 16 கி.மீ. தொலைவில் உள்ளது.

உறத்தூர் : இக்காலத்தில் இது ஒரத்தூர் என்னும் பெயருடன் நல்லம்பலிலிருந்து தெற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ளது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. மாதூர்

இவ்வூரின் பழமையான பெயர் மாதவூர் என்பதாகும். இப்பெயரே இப்பொழுது மாதூர் என்று மருவி வழங்குகிறது. இவ்வூரிலுள்ள சிதைந்த மாடக்கோயிலின் பழைய பெயர் மாதரணீஸ்வரம் என்பதாகும்.

மாணிக்க தேவனான திருவீதித் திருநீறு பரப்பினான் என்பவர் மாதரணீஸ்வரத்தில் தொண்டாற்றிய மாகேஸ்வரர் குழுவைச் சார்ந்தவர். மாதவூர் மடம் இவர் பொறுப்பில் இருந்ததாகக் கல்வெட்டால் அறிகிறோம்.

"பச்சைப் பதியஞ் சோறுடையான் என்று கல்வெட்டில் வரும் தொடர், பச்சைப்பதிகம் என்பது திருஞான சம்பந்தர் திருநள்ளாற்றில் பாடியருளிய 'போகமார்த்த பூண் முலையாள்' என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தைக் குறிக்கும்.

மாதரணீஸ்வரத்தில் இப்பதிகத்தைப் பாடி சோறு பெறும் உரிமையுடையவன் ஆதலின் இவ்வாறு பெயர் பெற்றான் போலும்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜெயங்கொண்ட சோழ விண்ணகராழ்வார்க் கோயில்

ஜெயங்கொண்ட சோழ விண்ணகர் என்னும் பெயரில் மாதூரில் பழமையான திருமால் கோயில் ஒன்று இருந்துள்ளது. முதலாம் இராஜராஜ சோழனின் சிறப்புப் பெயர்களில் ஜெயங்கொண்ட சோழன் என்பதும் ஒன்றாகும். ஆதலின், இவ் விண்ணகர் அம்மன்னன் பெயரால் திகழ்ந்ததாகும். இக்கோயில் இக்காலத்தில் இல்லை. ஆயினும் இதனைச் சார்ந்த திருமாலின் நின்ற திருக்கோலம் ஒன்று சிவன் கோயிலுக்கு மேற்குத் திசையில் வழிபாட்டில் உள்ளது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. நெடுங்காடு

இவ்வூரில் இருக்கும் இறைவன் பெயர் திருத்தோன்றீஸ்வரமுடையார் என்பதாகும். கி.பி. 1150இல் காரைக்குடி என்னும் ஊரைச்சேர்ந்த 'பொன்னாழ்வி அறமுடையாள்' என்னும் வெள்ளாட்டி மூலதனமாக 300 காசுகள் நந்தாவிளக்கு ஒன்று எரிக்கக் கொடை வழங்கியுள்ளாள்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கி.பி. 1215இல் சந்தி விளக்கு எரிக்கும் பொருட்டு 'திருநீலகண்டத்தார்' என்னும் குழுவினருள் ஒருவரான முழையூரைச் சேர்ந்த நம்பி வீரன் என்பவன் 300 காசுகள் மூலதனமாக வழங்கினான். அம் முந்நூறு காசுகளுக்கு வரும்•வட்டியைக்கொண்டு சந்திவிளக்கு எரித்துள்ளார்.

மற்றும் ஒருவர் 16ஆம் நூற்றாண்டில் சந்தியாதீபம் எரிக்க நிலக்கொடை வழங்கியதைக் கல்வெட்டால் அறிகிறோம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. கீழ்க்காசாக்குடி

இரண்டாம் இராஜராஜ சோழன் காலமாகிய கி.பி. 1156இல் காயாக்குடியான உதைய சந்திரச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சங்கர நாராயணபட்டர் என்பவர் 4 மா அளவுள்ள நிலங்களை விளக்குப்புறமாக நல்கினான். கோயில் அமைந்துள்ள பகுதி சேரகுட்டனூர் என்று அக்காலத்தில் வழங்கியது.

கி.பி. 1157இல் திருவாதீஸ்வரமுடையார்க்குச் சொந்தமாக இருந்த தேவதான நிலங்களையும், இறையிலி நிலங்களையும் அளந்து கணக்குப் பார்த்தனர். ஸ்ரீகோயில், திருமுற்றம், திருமடைவிளாகம், திருநந்தவனம், காழிக்கற்பகம், திருமுகை, திருநந்தவனம், திருஞானம்சம்பந்தர் திருநந்தவனம், நாற்பத்தெண்ணாயிரவன் திருநந்தவனம், சோம்பநாதன் திருநந்தவனம் முதலான நந்தவனங்களும், சிறுத்தொண்டர் விளாகம், திருஞான சம்பந்தர் விளாகம், திருக்குறிப்புத் தொண்டர் விளாகம், திருநாவுக்கரசு விளாகம், சேய்ஞலூர்விளாகம், காடுவெட்டியான கொல்லை, திருவிளக்குப்புறம், நன்னிக்குழி முதலான நில்ப்பகுதிகளும், திருஞான சம்பந்தர் திருமடம், பொன்னம்பல மடம் ஆகிய மடங்களுக்குரிய மடப்புற நிலங்களும் அடங்கியிருந்தன. இவை அனைத்தும் 10 ஆயிரம் குழிகளுக்கும் அதிகமானவையாகும்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறுத்தொண்டர் விளாகம்

சிறுத்தொண்டர் என்பார் 63 நாயன்மார்களில் ஒருவர்; திருச்செங்காட்டங்குடியினர். பரஞ்சோதியார் என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவரும் இவர் மனையாட்டி திருவெண்காட்டு நங்கையும் சேர்ந்து, தம்மகன் சீராளதேவரை அரிந்து, அடியார் உருவில் வந்த சிவபெருமானுக்கு அமுது படைத்தனர் என்பது திருத்தொண்டர் புராணம் கூறும் வரலாறு. சிறுத்தொண்டர் விளாகம் என்பது இவர் பெயரால் விளங்கிய நிலப்பகுதியாகும்.

திருக்குறிப்புத்தொண்டர் விளாகம் : இவரும் 63 நாயன்மார்களில் ஒருவர். காஞ்சிமா நகரத்தினர். சிவனடியார்களின் ஆடைகளைத் துவைத்துக்கொடுக்கும் பணியை முதற்கடமையாகக் கொண்டவர். திருக்குறிப்புத் தொண்டர் விளாகம் என்பது இவர் பெயரால் விளங்கிய நிலப்பகுதியாகும்.

திருத்தெளிச்சேரி

இக்காலத்தில் இவ்வூர் 'கோயில் பத்து' என்னும் பெயருடன் காரைக்காலுக்கு வடக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. இதனைத் தளத்தெருவு என்றும் கூறுவர். இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 50ஆவது தலமாகும். இங்குள்ள பார்வதீஸ்வரம் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. மேல்காசாக்குடி

மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலமாகிய 1182இல் காயாக்குடியான உதயசந்திரச் சதுர்வேதி மங்கலத்து இராஜசேரியில் இருக்கும் விளங்கில் வேளார் உய்யக்கொண்டாரான வளவதரையர் என்பவர் எழுந்தருளிவித்த திருநாகீஸ்வரமுடையார்க்கு சபையினர் இறையிலி நிலம் வழங்கினார்.

உதய சந்திரச் சதுர்வேதிமங்கலம்

இது காயாக்குடியின் வேறு பெயராகும். இந்தச் சதுர்வேதி மங்கலம் பல சிற்றூர்களைத் தன்னகத்துக்கொண்ட அமைப்பாகும். இதன் தலைமை இடம் காயாக்குடி என்னும் ஊராகும். மேல்காசாக்குடியில் திருநாகீஸ்வரம் அமைந்துள்ள இடம் இராஜசேரி என்னும் பெயருடன் விளங்கியது. கீழ்க்காசாக்குடியில் ஆதியப்பர்க் கோயில் அமைந்துள்ள ஊர்ப்பகுதி சேரகுட்டனூர் என்னும் பெயருடன் இருந்துள்ளது. இவை இரண்டும் இச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஊர்களாகவே குறிக்கப்பட்டுள்ளன.

பெருங்கழி

இது இவ்வூரின் எட்டாங்கட்டளையைச் சேர்ந்த நிலப்பகுதி. இது கடலோரத்து உப்பங்கழிப் பகுதியைச் சார்ந்த நிலமாக இருக்கலாம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய மேல்கசாக்குடிச் செப்பேடுகள்

செப்பேடுகள் பதினொன்று கிடைத்தன. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த- பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காரைக்காலுக்கு அண்மையில் 4 கி.மீ தொலைவில் மேல்காசாக்குடி என்னும் கிராமத்தில் 1879 ஆம் ஆண்டு பூமியிலிருந்து கண்டெடுக்கப் பெற்றது.

முதன் முதலாக வெளியுலகுக்கு அறிமுகம் செய்தவர் புதுச்சேரியைச் சேர்ந்த ஜூல்ஸ் தே லா போன் (Mons Jules de La Fon) என்பவராவார். வாகூர்ச் (பாகூர்) செப்பேடுகளை வெளிக் கொணர்ந்தவரும் இவரே.

இச்சாசனம் டாக்டர் ஹூல்ஷ் என்பவரால் தென்னிந்தியச் சாசனங்கள் இரண்டாம் தொகுதியில் மூன்றாம் பாகத்தில், மைப்பதிவேடு வெளியிடப் பெற்றுள்ளன. அதனை அடுத்துள்ள 106-107 பக்கங்களில் கண்டு தெளியலாம்.

அது இப்போது சென்னை அரசினர் காட்சி சாலையில் காப்பாக வைக்கப் பெற்றுள்ளது.

இச்சாசனத்தில் ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரையில்,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடப்புறம் நோக்கிப் படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவமும் அதன் மேலே லிங்கத்தின் உருவமும் காணப்படுகிறது என்று டாக்டர் ஹூல்ஷ் குறிப்பிட்டுள்ளார்.

முதல் ஏடும் கடைசி ஏடும் ஒருபுறம் மட்டுமே எழுதப்பெற்றுள்ளது. ஏனைய ஒன்பது ஏடுகளில் இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது.

ஆக மொத்தம் இருபது பக்கங்களில் அடங்கிய இச்சாசனம் ஒவ்வொரு ஏட்டிலும் ஏழு ஏழு வரிகள் கொண்டு உள்ளன. இறுதிப் பக்கத்தில் மட்டும் ஐந்து வரிகள் உள்ளன.

ஆகவே, சாசனம் மொத்தம் 138வரிகளில் எழுதப்பெற்றுள்ளது. அதில் பெரும்பகுதி சமஸ்கிருதத்தில் உள்ளது. வரி 104 முதல் 133 வரிகள் வரையும், 137 வரியின் நடுவிலும் தமிழில் எழுதப்பெற்றுள்ளது.

சமஸ்கிருதப் பகுதி காவியம்போல் விரிவாக, உரைநடையிலும் செய்யுளிலும் எழுதப்பட்டிருக்கிறது.

செப்பேட்டுச் செய்திகளை விரிவாகப் **''புதுச்சேரி மாநிலச் செப்பேடுகள்''** என்னும் நூலில் கண்டு தெளியலாம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. தருமபுரம்

இவ்வூரின் முற்காலத்துப் பெயரும் இக்காலத்துப் பெயரும் தருமபுரம் என்பதே. தருமபுரத்துச் சிவன் கோயில் இறைவனின் பழைய பெயர் யாழ்முரிநாயகர்.

யாழ்முரிநாயகரை ஆண்டுதோறும் 12அமாவாசை நாட்களில் உலாவாக எழுந்தருளவும், கடலில் தீர்த்தமாடவும், திருவமுதுக்கும், திருப்பள்ளித் தாமத்திற்கும் கிளிஞலூர் தலைவனான அணுக்கன் விழுப்பரையன் என்பவன் நிலக்கொடை வழங்கினான்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. காரைக்கால்

காரைக்கால் என்றவுடன் காரைக்கால் அம்மையாரை அனைவரும் எண்ணிப் பார்ப்பர். இவ்வூரில் தனதத்தர் என்பவர் வாழ்ந்தார். அவருக்கு, நல்லூழ் காரணமாகப் புனிதவதியம்மையார் என்பவர் அவதரித்தார். அவர் சிவனிடத்து அன்புடையவர். சிவபெருமானையே பயின்று வளர்ந்து மங்கைப்பருவம் அடைந்தார்.

தொல்குலத்தில் வந்த நாகப்பட்டினத்து நிதிபதியென்பாருடைய மைந்தர் பரமதத்தனுக்கு மணம் பேசித் திருமணம் செய்தனர். ஒரே பெண் என்பதால், காரைக்காலிலே அழகிய மாடம் ஒன்றை அமைத்து அளவற்ற நிதிகளையும் அளித்து தனதத்தன் மகிழ்ந்திருந்தான்.

பரமதத்தனும், சிறக்க வாழ்ந்து மனைவளம் பெருக்கி, வாணிகத்துறையில், மேம்பட்டனன். அருந்துணைவியராகிய புனிதவதியாவார். சிவபெருமானின் திருவடியே எண்ணி மனையறத்தின் பண்பு வழுவாது வாழ்ந்து வந்தனர்.

சிவனடியார் தம் இல்லம் நோக்கிவரின் நல்ல திருவமுது அளித்தும், பொன்னும் மணியும் அன்பு

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலீட்டினால் கொடுத்தும் மகிழ்ந்திருந்தனர். இவ்வாறு வாழும் நாளில் வணிக நிமித்தம் வந்த சிலர் பரமதத்தனுக்கு இரு மாங்கனிகள் கொடுத்தனர். அக்கனிகளை இல்லத்தில் கொடுக்கச் சொல்லினன்.

கணவன் கொடுத்தனுப்பிய கனிகள் இரண்டையும் வாங்கிவைத்த பின்னர், சிவனடியார் ஒருவர் பசியுடையவராகி மனைக்கு வந்தார். அவரது நிலையைக் கண்ட அம்மையார் "இவ்வடியார் பசியைத் தீர்ப்பேன்" என்று அமுதூட்டினர். அப்போது, கணவன் அனுப்பிய இரு கனிகளில் ஒன்றை அடியார்க்கு அளித்து மகிழ்வோடு அமுது செய்வித்தனர்.

அம்மையார் அளித்த அமுதினை மாங்கனியோடு மகிழ்ந்துண்டு அச்செயலினைப் பாராட்டிச் சென்றார் சிவனடியார். அதன்பின் வணிகன் மனைக்கு வந்தான்; அவனுக்கு அடிசிலும் கறிகளும் உரிய முறையாய்ப் படைத்தனர். மாங்கனியையும் இட்டார். அம்மையார் அளித்த மதுர மிகு கனியை உண்ட சுவை தீராமையால், வணிகன் "இதுபோன்று பழம் இன்னுமொன்றுளது; அதனையும் இடுக" என்று கேட்க, அம்மை அதனைக்கொண்டு வரச் செல்வது போன்று சென்று, சிவபெருமானின் திருவடிகளைத் தம் மனத்துள் நினைந்தார். உடனே அதிமதுரக்கனி வந்துற்றது. அக்கனியைக் கலத்திலிட்டார். அதனை வணிகன் உண்டான். அதன் சுவையோ சொல்லும் தரமன்று. 'இக்கனி எப்படி வந்தது' என்று கேட்டனன். சீலத்தின்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிக்க புனிதவதியார் கனிபெற்ற விதத்தை எடுத்துக் கூறினர். இது சிவனருள் எனின் மற்றொரு கனியை அளிப்பாய் என்றனன். அம்மையார், "ஈசா! இதனை அருள் செய்யாவிடில் என் உரை பொய்யாகும்" என்று வேண்ட, அவர் அருளால் ஒரு மாங்கனி வந்துற்றது. அதனைக் கணவனிடம் அளித்தனர். அவன் அதிசயித்து, வாங்கினான். சிறிது நேரத்தில் கனி மறைந்தது. அவன் பயந்து மனந் தடுமாறி அம்மையைத் தெய்வமென்று எண்ணினான்; அவரைவிட்டு நீங்கத் துணிந்தான்.

கப்பல் வணிகம் செய்வானாய்ச் சொல்லி வேறு பட்டணம் சேர்ந்து வணிகத்தைப் பெருக்கி அங்கேயே வேறொரு வணிகன் மகளை மணம் முடித்து வஞ்சனையோடு ஒழுகி, ஒரு பெண் மகவை பெற்றனன். தன் முன்னை மனைவியைத் தன் குல தெய்வமென்றே எண்ணி, அவர் பெயரையே அம்மகவுக்கும் இட்டனன்.

காரைக்கால் அம்மையார் அறம் பல புரிந்து வாழ்ந்திருந்த நாளில், சுற்றத்தார் வழியாகப் பாண்டிய நாட்டில் வணிகன் வாழ்ந்து வருகிறான் என்று அறிந்தனர். அம்மையாரை வணிகனிடம் சேர்க்க எண்ணி அவ்வாறே செய்தனர். வணிகன் நடுங்கி, மனைவி மகளோடு எதிர்வந்து, "யான் உமது அருளினால் வாழ்வேன்; அது பற்றியே இக்குழவிக்கு உம் பெயரிட்டுள்ளேன்" என்று பணிந்து வீழ்ந்தான்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணவன் வணங்குகிறாரே என்று சுற்றத்தார் பக்கம் ஒதுங்கி நிற்க. சுற்றத்தார் அனைவரும், 'நின் மனைவியை வணங்குகிறாயே' என்று கடிந்தனர். வணிகன், அவர்களை நோக்கி, "இவர் மானிடம் அல்லர்; நம்பெருந்தெய்வமே ஆதலின், இம்மகவுக்கு அவர் பெயரை இட்டுள்ளேன். அதனால் வணங்கினேன். நீங்களும் வணங்குங்கள்" என்றனன்.

அம்மையார், சிந்தை ஒன்றிய உணர்வோடு, 'இதுவரைத் தாங்கி நின்ற அழகு தங்குதற்கிடனாகிய தசைகளின் சுமையை இங்குக் கழித்து, உம்மிடம் அங்கு உள்ள பூத கணங்கள் போற்றும் பேய்வடிவம் அடியேனுக்குப் பாங்குற அருளவேண்டும்' என்று பரமனைப் போற்றி நின்றனர். இறைவனின் திருவருளால் அம்மையார் வேண்டியவாறே பெற்றனர். மலர் மழை பொழிந்தது. துந்துபிகள் முழங்கின. தேவரும் முனிவரும் ஆர்த்தனர். பூதகணங்கள் ஆடின; சுற்றத்தார் தொழுதஞ்சி அகன்று போயினர்.

அம்மையார், "திருவடி போற்றும் நற்கணத்தினில் ஒன்றானேன் நான்" என்ற கருத்துடன் **அற்புதத் திருவந்தாதி** பாடினர்.

இறைவனின் சீர்களை ஆய்ந்து **திருவிரட்டை மணிமாலையும்** அருளிச் செய்தனர்.

அவரைக் கண்டவர்கள் வியப்புற்று அஞ்சி அவ்விடத்தை விட்டு ஓடிப், 'பேய்! பேய்!' என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரல் எழுப்பினர். அறியா நிலையில் உள்ள மக்களைக் கண்டு இரக்கங்கொண்ட அம்மையார் திருக்கயிலை நோக்கிச் சென்று, காலினாற் செல்லுதலைத் தவிர்த்து, தலையினால் நடந்து மகிழ்ச்சி மீதூரச் சென்றனர்.

உமையின் திருநோக்கு அம்மையின் மீது பதிந்து, இறைவனை நோக்கி, "தலையினால் நடந்து வரும் எலும்புடம்பின் அன்பு என்னே?" என்று கேட்க, இறைவன், 'வருகின்ற இவள் நம்மைப்பேணும் அம்மையே யாவள்; இப்பெருமை சேர் வடிவத்தினையும் வேண்டிப் பெற்றனள்' என்றார். அப்போது அம்மையாரும் அருகு வந்தணைய, "அம்மையே!" என்று இறைவன் அருளிச் செய்தனன்.

அது கேட்டு அம்மையார் "அப்பா!" என்று அலறி, அவரது திருவடிகளில் வீழ்ந்தனர்.

இறைவர், 'என்ன வரம்வேண்டும்' என்று கேட்க, அம்மை, "மாறாத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; பிறப்பு உளதாயின் என்றும் உன்னை மறவாமை வேண்டும். நீர் ஆடும்போது நான் பாடி மகிழ்ந்து உன் திருவடிக்கீழ் இருத்தல் வேண்டும்" என்று வேண்டினர்.

இறைவன், அருள் செய்வாராகித் "தென்திசையிலே நீடு வாழ்வினைத் தரும் பழையனூர்த் திருவாலங்காட்டில் நாம் ஆடும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடனத்தைக் கண்டு ஆனந்தத்துடன் எப்போதும் பாடிக்கொண்டிருப்பாயாக" என்றருளினர். அம்மையார் பேரன்போடும் திருவாலங்காட்டினை அடைந்தார்.

அங்கு, ஐயனது பெருங்கோலத்தினைக் காணும் பொழுது "கொங்கை திரங்கி" என்று தொடங்கி மூத்த திருப்பதிகத்தினை அத்திருத்தலத்தில் திருக்கூத்தைப் பாடிப் போற்றினார்.

அந்நாளில் "எட்டி யிலவம்" என்னும் பதிகத்தினைக் "குழகன் ஆடும்" என்ற கருத்துடன் திருநடனம் குறித்துப் பாடினார்.

இவ்வாறு, சிவனது எடுத்த பாத நிழலில் அம்மையார் என்றும் இருக்கும் பேறு பெற்றார்.

இப்படிப்பட்ட காரைக்காலில், தொடர்பற்ற கல்வெட்டுகளாகக் கிடைத்தது, மிகவும் வேதனைக்குரியது. காரைக்கால் கைலாசநாதர் கோயிலில் நான்கும் தொடர்பற்றக் கல்வெட்டுகளும், ஒப்பிலாமணீஸ்வரர் கோயிலில் ஒன்றும் அரங்கநாதர்கோயிலில் ஐந்தும் ஆக பத்து, முடிவு பெறாத கல்வெட்டுகளாய்க் கிடைத்தன.

கி.பி. 1070இல் குலோத்துங்கசோழன் வெற்றி பெற்ற கங்க மண்டலம், பாண்டி மண்டலம், சிங்களம் ஆகியவை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டும், 12ஆம் நூற்றாண்டின் ஸ்ரீ கிருஷ்ணன், திருவாய்க்குல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடையான், இரவீஸ்வரம் ஆகிய பெயர்கள் காணப்பெறும் கல்வெட்டும், 12ஆம் நூற்றாண்டு வெள்ளாளன் கூத்தன் தில்லைவாணன் என்னும் கொடையாளன், இக்கோயில் இறைவனுக்கு நந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு ஊர்ச்சபையாரிடம் நிலம் வாங்கி அவற்றை இக்கோயிலுக்கு இறையிலியாக வழங்கியதைத் தெரிவிக்கும் கல்வெட்டும், கி.பி. 12 நூற்றாண்டு கொடைநிலத்தைத் தெரிவிக்கும் கல்வெட்டுமாக நான்கு தொடர்பற்ற செய்திகள் கிடைத்துள்ளன.

ஒப்பிலாமணீஸ்வரர்க் கோயிலில் கி.பி. 12 நூற்றாண்டில் சிற்றம்பலவன் இசைபோகிய ஆடுவான் என்பவன் திருவாசல் காரியத்துக்கு உதவி செய்ததைத் தெரிவிக்கும் ஒரு கல்வெட்டும்,

அரங்கநாதர் கோயிலில் கி.பி. 12நூற்றாண்டில் இறைவனுக்கு நந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு இறையிலி நிலம் வழங்கியதும், நிலக்கொடைப் பற்றியும், எட்டாங் கட்டளை 36 காசுகள், மடப்புறம் ஆகிய செய்திகள் தெரிவிக்கும் கல்வெட்டொன்றும்,

கொடைநிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் செய்தியுள்ள கல்வெட்டும்,

நித்த நிவேதனங்களுக்கு வழங்கப்பெற்ற நிலக்கொடைபற்றியும் குறிப்பிட்ட அறச்செயலுக்கு

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலதனமாக வழங்கப்பெற்ற காசுகள் பற்றியும் தெரிவிக்கின்ற கல்வெட்டொன்றும்,

அரசனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் பத்து காசுகளுக்குக் கோயிலுக்கு நிலம் விற்றுக்கொடுத்தைத் தெரிவிக்கும் கல்வொட்டொன்றும், ஆக ஐந்து கல்வெட்டுகள் காணக் கிடைத்துள்ளன.

சிங்கத்தூண் - மேல்காசாக்குடி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. திருமலைராயன் பட்டினம்

இரண்டாம் இராஜராஜ சோழன் (கி.பி. 1146-1172) இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு நிலம் விற்ற செய்தியும் மையார்கண்ணி என்னும் தேவரடியா பெயரும், திருநாவுக்கரையன் திருநந்தவனம், நந்தவனப்புறம், உரோகசாந்தி, விழியூருடையான் அரையன் உடைய நம்பியார் ஆகிய பெயர்களும் குறிக்கும் கல்வெட்டும்,

கி.பி. 12 நூற்றாண்டு அரசனின் பட்டப்பெயரும், மூல நட்சத்திரமும் குறித்துள்ள கல்வெட்டும்,

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியன் காலத்து திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்த காரைக்குடி மக்கள் செலுத்திய வரி வகையைக் குறிப்பிடும் கல்வெட்டொன்றும்,

கி.பி. 1392இல் விருப்பண உடையார் காலத்தில் காவிரி ஆற்றுக்கும் முள்ளிவாய் ஆற்றுக்கும் இடையில் உள்ள ஊர்களில் புதிதாக வந்து குடியேறும் மக்களுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு வரி எதுவும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதிக்கப்பெறாமல் அதன் பின்னர் வரி விதிக்கப் பெற்றமையைத் தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளன.

கி.பி. 14 நூற்றாண்டு அரசனின் பட்டப்பெயர்களான பரமேஸ்வரன், வீரப்பிரதாபன், மகாமண்டலீஸ்வரன் கட்டாரி சாளுவன் முதலான பெயர்கள் காணப்பெறுகின்றன.

10 இவை சுப்ரமண்ணியபட்டன் எழுத்து இவை நாராயணபட்டன் எழுத்து இவை திருவாய்க் குலத்துப்பிள்ளை எழுத்து இவை அழகிய வரத

11 ன் எழுத்து உ

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

38

ஊர்	:	திருநள்ளாறு
கோயில்	:	தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம்	:	இராஜமண்டபத்துத் வடக்குச்சுவர்
அரசு	:	பாண்டியர்
அரசன்	:	நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்
ஆட்சியாண்டு	:	6
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 6-9-1323
ஆண்டறிக்கை எண்	:	452 of 1965-66

செய்தி: திருநள்ளாறுடையார்க்கும், நாடுடை நாயகப் பெருமானுக்கும், நாச்சிமார்களுக்கும், போகமார்த்த பூண்முலையார்க்கும், மூத்த நாயனாரான கணபதியார்க்கும், இளைய நாயனாரான சுப்ரமணியதேவர்க்கும், க்ஷேத்ரபால பிள்ளையார்க்கும் (பைரவர்) நாடுடை நாயகன் சந்தி என்னும் பெயரில் நடைபெறும் இரவுக்கால சந்தியின் பொழுது திருவமுது படைக்கவும், வடக்கு வீதியில் எழுந்தருளியிருக்கும் தேவார மூவரான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய நாயன்மார்க்கு உச்சி சந்தியின் பொழுது திருவமுது படைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கோயிலுக்குச் சொந்தமான திருநாமத்துக் காணியின் மீது விதிக்கப்பெற்றிருந்த

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலவரிகள் உள்ளிட்ட அனைத்து வரிகளும் நீக்கப்பட்டு இறையிலியாக மாற்றப்பட்டன. நீக்கம் செய்யப்பெற்ற வரித்தொகையை முதலாகக் கொண்டு மேற்கூறிய அறச்செயல்கள் நிகழ்த்தப்பெற வேண்டுமென்று நாட்டுச் சபையினர் முடிவு செய்துள்ளனர்.

1 ஸவத்ஸிஸ்ரீஉ கோச்சடபன்பர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ஆறாவது கன்னிநாயற்று பூர்வ பக்ஷத்து ஷஷிடியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற அனிழத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டு

2 நாட்டாரோம் உடையார் திருநள்ளாறுடையார்க்கும் பெருமாள் நாடுடை நாயகப் பெருமாளுக்கும் நாச்சிமார்க்கும் நாச்சியார் போகமார்த்தபூண் முலை நாச்சியார்க்கும் முத்தனாயனார்க்கும் இளையனாயனார்

3 க்கும் க்ஷேத்ரப் பாலபிள்ளையார்க்கும் திருவர்த்தசாமம் நாடுடை நாயகன் சந்தி அமுது செய்தருளப் பண்ணவும் வடக்கில் திருவீதியில் எழுந்தருளி இருக்கும் முதலிகள் மூவற்க்கும் உச்சி சந்தி அமுது செய்தருள

4 ப்பண்ணவும் நிச்சயித்த முதலுக்கு இன்னயானார் திருநாமத்து இறுக்கும் நிலத்திலே கழித்து நாட்டில் விழுக்காடு கொண்டு எங்கள் பேரில் கூட்டிகொண்ட திருநள்ளாறு நிலம் சடிப புத்தமங்கலம் நிலம் சவலம்

5 ஆகநிலம் ருஅல இன்னிலம் ஐஞ்சே எட்டுமாவும் காரைக்கால் அளத்து இவர் திருநாமத்துக் காணியில் நாங்கள் இறையிலியாக இறுப்பு நீங்கலாக விட்ட வாய்க்கால் ஒன்றும் ஆறாவது அற்பசி மாத முதுல் இன்னாய

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

6 னார் திருநாமத்து இறுப்பில் கழித்து எங்கள் பேரில் கூட்டிக்கொண்ட இன்னிலமும் இவாய்க்கால் ஒன்றும் இன்னாள் முதல் முதலடங்க இறையிலியாக கொண்டு இன்னிலம் தாங்கள் வேண்டும் பயிர்ச்செய்து கொண்டு

7 இன்னாள் முதல்.....இந்த ஓலையே சாதனமாக கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு நித்தப்படி உட்பட அமுது செய்தருள பண்ணுவது இவை தீபங்குடையான் மலையப்பராயன் எழுத்து இவை புத்தக்குடையான் எழுத்து

8 இவை புத்தகுடையான் செய்தியராயன் எழுத்து இவை குமாரமங்கல முடையான் மழவராயன் எழுத்து இவை கோட்டூருடையான் எழுத்து இவை திருநீலக் குடையான் களப்பாளன் எழுத்து இவை நல்லூர் நெய்யுண்டான் பட்டன் எழுத்து இவை குண்டூர் குலசேகர பிரமாராயன் எழுத்து

9 இவை.....ளென் குடையான் காளைப்பெருமாள் எழுத்து இவை அரசுபையான் களப்பாளன் எழுத்து இவை வேளூர் கிழவன் மன்றில் குனிக்கும் பெருமான் எழுத்து இவைம.....யைக்கு உடையான் எழுத்து இவை நாகமங்கல முடையான் திருவெண்காடு உடையான் எழுத்து.

39

ஊர் : திருநள்ளாறு
கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம் : இராஜமண்டபத்துத் வடக்குச்சுவர்
அரசு : பாண்டியர்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசன் : நான்காம் கடையவர்மன் சுந்தரபாண்டியன்
ஆட்சியாண்டு : 6
வரலாற்று ஆண்டு : கி.பி. 1323
ஆண்டறிக்கை எண்: 454 of 1965-66

செய்தி: திருநள்ளாறுடையார்க்கும், நாடகமாடும் பெருமானுக்கும் (நடராஜர்), நாடுடைய நாயகப் பெருமாளுக்கு மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளில் அபிஷேகம் செய்யவும், உலா எழுந்தருளச் செய்யவும், திருவமுது படையல் சாத்துப்படி உள்ளிட்ட தேவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. காரைக்கால் உப்பளத்தில் இக்கோயிலுக்குச் சொந்தமாக இருந்த தரிசு நிலத்தின் ஒரு துண்டத்தையும், ஒரு கேணியையும் திருத்தி, உப்பு விளைவித்து, அவ்வுப்பைப் புற நாட்டில் விற்று, அதனால் வரும் முதலைக்கொண்டு மேற்கூறிய அறச்செயல்கள் நிகழ்த்தப்பெற வேண்டுமென்று கோயில் தானத்தார்க்கு உத்தரவிடப்பெற்றது.

1 ஸவத்ஸிஸ்ரீ: உ உடையார் திருநள்ளாறுடையார் கோயில் தானத்தார்க்கு சிறுமுறி திருமார்கழித் திருவாதிரைக்கு திருமஞ்சனத்துக்கு உடையார் திருநள்ளாறுடையார்க்கும் முதலியார் நாடகம் ஆடும்.

2 பெருமாளுக்கும் பெருமாள் நாடுடை நாயகப் பெருமாளுக்கும் அமுதுபடி சாத்துப்படிக்கும் திருவுலாச் செய்தருள வேண்டும் குறைவறுப்புக்களும் நாலாவது முதல் ஆறாவது வரையும் மிழலைக் கூற்றத்து நடுவில் கூற்று தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3 ச்ச நென்மலி உடையாரகப்பை ஆழ்வாரான கலிங்கத்தரையர் குறைவறுத்து பொதுகையில் இக்குறைவறுப்புக்கு இவர்க்கு நாங்கள் இறையிலி செய்து குடுத்த காரைக்கால் அளத்தில் ஆறாவது வரையும் பண்டாரத்துக்கு உ

4 ப்பு படுத்து போந்த வாய்க்கால் நீங்கலாக இன்னாயனார் திருநாமத்துக் காணியிலே தரிசு கிடந்த நிலத்திலே ஒரு கண்டமும் ஒரு கேணியும் தருசு திருத்தி உப்புபடுத்து முதலான உப்பு புற நாட்டிலே விற்று இம்முதல்

5 கொண்டு திருமார்கழித் திருவாதிரை திருநாள்த் தாழ்வுபடாமல் எழுத்தருளப் பண்ணவும் இப்படிக்கு சந்திராதித்தவரையும் செய்வித்துக் கொள்ளவும் பார்ப்பது இவைபுத்தக்குடையான் செய்தியராயன் எழுத்து இவை

6 குமாரமங்கல முடையான் மழவராயன் எழுத்து இவை நெய்யுண்டான்பட்டன் எழுத்து இவை குலசேகர பிராமாராயன் எழுத்து இவை அனந்த கோளெரி பட்ட

7 ன் எழுத்து இவை ஆதி

40

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜமண்டபத்துத் தெற்குச்சுவர்

அரசு : பாண்டியர்

அரசன் : நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆட்சியாண்டு : 11
வரலாற்று ஆண்டு : கி.பி. 1328
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: அபிமுத்தீஸ்வரத்து நாயனார்க்குச் சொந்தமான காரைக்கால் உப்பளத்தில், ஒரு வாய்க்காலில் உப்பு விளைவித்து, அதனைப் புறநாட்டில் விற்பதால் வரும் முதலைக்கொண்டு, இந்நாயனார்க்குத் திருப்பணி நடைபெறுதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ உடையார் அபிமுத்தீஸ்வரமுடையார் கோயில் தானத்தார்க்கு சிறுமுறி இந்நாயனார்க்குத் திருப்பணிக்கு உடலாகக் காரைக்கால் அளத்து அடைப்பு நீங்

2 கலான நிலத்தில் இந்நாயனார் திருநாமத்துக் காணியான நிலத்திலே பெருமாள் சுந்தரபாண்டிய தேவர்க்குப் பதினொன்றாவது முதல் ஒரு வாய்க்கால் உப்பு

3 ப்படுத்து முதலடங்க இறையிலியாகக் கொண்டு புற நாட்டிலே விற்று இம்முதலீட்டுத் திருப்பணி தாழ்வறச் செய்விக்கவும் இப்படிக்கு இந்த ஓலை

4 சாதனமாகக் கொண்டு சந்திராதித்தவற் செல்லக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் பார்ப்பது உ இப்படிக்கு இவை புத்தக்குடை

5 யான் எழுத்து உ இப்படிக்கு இவை சேதியராயன் எழுத்து இப்படிக்கு இவை கனகராயன் எழுத்து இப்படிக்கு இவை குலசேக

Public domain. Digitization Muthulakshmi Research Acaden

6 ரப்பிரமாராயன் எழுத்து இப்படிக்கு இவை நெய்யுண்டான் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை சங்கரநாராயண பட்ட

7 ன் எழுத்து இப்படிக்கு இவை குருகுலத்தரையன் எழுத்து இப்படிக்கு இவை நந்தபன்பன் எழுத்து இப்படிக்கு இவை அநந்த

8 கோளரிபட்டன் எழுத்து இப்படிக்கு இவை திருமாலிருஞ் சோலைபட்டன் எழுத்து இப்படிக்கு இவை.....

9 இப்படிக்கு இவை வேளூர் கிழவன் எழுத்து இப்படிக்கு இவை கூடல்கிழார் எழுத்து இப்படிக்கு இவை வழுதி நாட்டுக்கோன் எழுத்து

10 இப்படிக்கு இவை இராசாராயண பிரமாராயன் எழுத்து இப்படிக்கு இவை முனையதரையன் எழுத்து இப்படிக்கு இவை மருதுடையா

11 ன் எழுத்து இப்படிக்கு இவை கங்கைகொண்ட சோழப்புவனிவேளான் எழுத்து இப்படிக்கு இவை திருநீலக் குடையான் எழுத்து

12 இப்படிக்கு இவை நாகமங்கலமுடையான் எழுத்து உ

41

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜமண்டபத்துத் வடக்குச்சுவர்

அரசு : பாண்டியர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரசன் : ஐந்தாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்

ஆட்சியாண்டு : 4

வரலாற்று ஆண்டு : கி.பி. 16-7-1333

ஆண்டறிக்கை எண்: 453 of 1965-66

செய்தி: இடைக்கழி நாட்டுக் குற்றூர் உப்பரீஸ்வரம் என்னும் சிவன் கோயிலில் தொண்டு செய்து வரும் வளத்து வாழ்வித்தான் வாணாதிராஜ பிரமாராயன் என்னும் சிவப்பிராமணனுக்கு, திருநள்ளாறுடையார்க் கோயில் தேவகன்மிகள் சாமுதாயப்பணி ஒன்றை 50 பணத்துக்கு விற்று, அத்தொகையை இறைவனுக்கு அணிகலன்கள் செய்வதற்காகக் கோயிற் கருவூலத்தில் வைப்பாக இட்டமையைத் தெரிவிக்கிறது.

1 ஸவத்ஸிஸ்ரீமது கீர்த்திக்கு மேல் கோச்சடபன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 4வது கற்கடக நாயற்று பூர்வபக்ஷத்து சதுர்தியும் வெள்ளிக்கிழமையும்

2 பெற்ற உத்திரத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டு முழையூர் நாட்டு உடையார் திருநள்ளாறுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளோம் ஜயங்கொண்ட சோழ

3 வளநாட்டுத் திருவிடைக்கழி நாட்டுக் குற்றூர் உடையார் உப்பரீஸ்வரமுடையார் கோயில்க்காணி உடைய சிவப்பிராமணரில் வளத்து வாழ்வித்தான் வாணாதி ராஜபிரமாராயனுக்கு இற்றை நாளால் நா

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4 ங்கள் இவற்க்கு விற்றுக்குடுத்த இன்னாயநார் கோயில்ச் சாமுதாயப்பணி ஒன்று இப்பணி யயொன்றுக்கும் விலைப்படி பணமாய் நாங்கள் இற்றைநாளால் ஒடுக்குவித்துக்கொண்ட பணம் 50 இப்ப

5 ணம் ஐம்பதுக்கும் இப்பணியொன்றும் விலையாக விற்று விலைப்படி பணமைம்பதும் கோயில்ப் பொற்ப்பண்டாரத்துப் பெருமாளுக்குத் திரு ஆபரணம் பண்ணுகிற இதுக்கு உடலாக ஒடுக்குவி

6 த்துக்கொண்டு இப்பணி ஒன்றும் இவற்க்கு காணியாக விற்றுக்குடுத்தோம் வளத்து வாழ்வித்தான் வாணாதராயப் பிரமாராயனுக்கு ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளோம் இப்படிக்கு இவைகாசியபர்

7 பெருமாள்ப்பிள்ளை நாடகமாடும் பெருமாள் பரணிதரன் எழுத்து இப்படிக்கு இவை பாரத்துவாஜி கூத்தப்பிரான் எழுத்து இப்படிக்கு இவை பாரத்வாஜி திருக்கற்றலைப் பிள்ளையான

8 திருநள்ளாறு பரணிதரன் எழுத்து இப்படிக்கு இவை பெருமாள்ப் பிள்ளையான நாடுடை நாயக பண்டிதர் எழுத்து இப்படிக்கு இவை தேவகன் மிசேதியராயப் பிரமராயன் எழுத்து இப்படிக்கு இவை தேவகன்மி காசியபன்.....

9 இப்படிக்கு இவை உள் திருசுத்து மேனிகளில் ஆட்கொண்டார் எழுத்து

10 இப்படிக்கு இவை திருமேனி அம்பலப்பெருமாள் எழுத்து

11 இப்படிக்கு இவை திருமேனி பொன்னம்பலக் கூத்தர் எழுத்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

12 இப்படிக்கு இவை திருமேனி திருச்சிற்றம்பல முடையார் எழுத்து

13 இப்படிக்கு இவை திருமேனி அவிலிங்கத் தேவர் எழுத்து

14 இப்படிக்கு இவை திருமேனி நச்சினார்க்கினியார் எழுத்து

15 இப்படிக்கு இவை திருமேனிக் காட்டிய கையார் எழுத்து

16 இப்படிக்கு இவை மாகெஸ்வரக்கணக்கு திருஆனைக்கா உடையான் எழுத்து உ

17 .....தேவன் வில்லவராயப் பிரமராயன் எழுத்து இப்படிக்கு இவை தே.....பட்டன் எழுத்து உ இப்படிக்கு இவை தேவகன்மி திருநள்ளாறுடையான் பட்டன் எழுத்து உ இப்படிக்கு நாடுடை நாயகபட்டன் எழுத்து

18 இப்படிக்கு இவை தேவகன்மி செயந்துங்கத்தபட்டன் எழுத்து இப்படிக்கு இவை.....த்து இப்படிக்கு இவை கோயில்க்கணக்கு நள்ளாறுடையான் எழுத்து இப்படிக்கு இவை கோயில்க் கணக்கு நாடுடை நாயகபிரியன் எழுத்து

19 இடக்கண்காணி இயாழ்முரிநாயகர் எழுத்து. இப்படிக்கு இவை கொங்கராயப் பிரமாராயன் எழுத்து இப்படிக்கு திருமெய்க்கர்ப்பார்க்கு சாமுதாயம் நாடுடைநாயகப் பல்லவரையன் எழுத்து இப்படிக்கு கோயில்க்கணக்கு மலைமகட்ப்பிரியன் எழுத்து

20 திரு மெய்க்காவல் ஆசை தீரக்குடுப்பான் எழுத்து இப்படிக்கு சீபாதந் தாங்கும் சாமுதாயம் பெரிய நாயகன் திருவலஞ்சுழி பிச்சன் எழுத்து இப்படிக்கு தியாகவினோதப்பிரான் எழுத்து இப்படிக்கு இவர்கள்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

21 திருவுள்ளமாக கல்வெட்டினமைக்கு சிம்ப்பாசாரியன் புவன முழுதும் உடைய ஆசாரியனும்.....னும் கல்த்தச்சிக் கூட்டத்து நாடகமாடும் பெருமாள் தச்சனும் எழுத்து

42

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : மகாமண்டபத்துத் வடக்குச்சுவர்

அரசு : பாண்டியர்

அரசன் : சடையவர்மன் குலசேகர பாண்டியன்

(மாறவர்மன் குலசேகர பாண்டியன் II)

ஆட்சியாண்டு : 22

வரலாற்று ஆண்டு : கி.பி. 1336

ஆண்டறிக்கை எண்: 110 of 1968-69

செய்தி: ஜெயங்கொண்ட சோழவளநாட்டுக் குறும்பூர்நாட்டுத் தெத்தனூர் என்னும் ஊரைச்சேர்ந்த பெரியநாயன் முடிச்சோணாட்டுக் கோனார் என்பவர், பலரிடமிருந்து பல்வேறு காலங்களில் வசூலித்த தொகை வாளால் வழி திறந்தான் பணம் 25000 ஆகும். இத்தொகைக்காகக் கோனாருடைய நிலங்களை உய்யக்கொண்டார் வளநாட்டைச் சேர்ந்த நாட்டவர்கள் சவரிப்பெருமாள் மொண்ணை மாமருதர் அகளங்க

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நாடாழ்வார்க்கு விற்றுக்கொடுத்ததைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டுக் கூறும் செய்தியைக் கூர்ந்து நோக்குமிடத்து அகளங்க நாடாழ்வரை வளநாட்டின் பெரிய அதிகாரியாகவும், முடிச்சோணாட்டுக் கோனாரை அவருக்குக் கீழ்ப்படிந்த சிற்றதிகாரியாகவும் கொள்ளலாம். கோனார் தாம் வசூலித்த தொகையை மேலதிகாரியிடம் ஒப்படைக்காமையால் அவருடைய உடமைகள் விற்கப்பட்டனவாகத் தெரிகிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு 22 ஆவது இருப்பத்திரண்

2 டாவது உய்ய கொண்டார் வளநாட்டு நாட்டாரோம் இந்நாட்டு அம்பரான விக்கிரம சோழபுரத்து சவரிபெருமாள்

3 மொண்ணைமாமருதர் அகளங்க நாடாழ்வார்க்கு தரைய்குவியச் செய்து கையீடு குடுத்த பரிசாவது செயங்கொ

4 ண்ட சோழவளநாட்டு குறும்பூர் நாட்டு தெக்கனூருடையான் பெரியநாயன் முடிச்சோணாட்டுக் கோனார்.....தக்க

5 குடுத்த முதலுக்கு இவர் காணி.....க்கு நாங்கள் விலை குடுத்த ஆவண விளைநிலம் இன்னிலம்நூ

6 ற்று நா.....அரைக்காணி முந்திரிகைக்கும் இவ்வூர்களில் நடத்தமும் படுகையும் கொல்லை

7 .....கமுகும் பட்டபாழ் மணலிடுக்கும் பிரமானபடி வாளால் வழி திறந்தான் பணம் 25000 இப்பணம் இருபத்து ஐயா

Public domain. Digitization Muthulakshmi Research Academ

8 .....இரண்டாவதின் எதிர் எட்டாவது சேரன் சிகைக்கு உடையார் காங்கேய அனுதாரம் ஆடி பணம் 24

8 சங்கரசாமந்தர் பக்கல் முடிச்சோனாடு கோன்ார் வாங்க.....க்க பணம் 2000 இப்பணம் இரண்டாயிரமும்.....

10 க்கன் பணம் 700 இப்பணம் எழுநூறும் நெற்குப்பை உடையார் காங்கேயர் அனுதாரம் உ ஒதி மார்கழி பணம் 26 கா

11 ரைக்காலில் குடி நாயனார் பக்கல் வாங்கி குடுத்த பணம் 1300 இப்பணம் ஆயிரத்து முன்னூறும் சுந்தரபாண்டிய செய்தியரா

12 யர் அனுதாரம் குறும்பபுரத்தூரில் இருக்கு நல்லாற்றூரில் கமுகு வாழை பிடித்து .....பணம் 12 ஆக்கின பணம் 1500இ

13 ப்பணம் ஆயிரத்து ஐஞ்ஞூறும் அழகப்பெருமாள் அனுதாரம் 10 தேதி தைமாத வரை மண்டல வாணராயர் வைத்ததே

14 லுக்கு நாட்டுக் கணக்கர் தரங்கண்டு இப்பேரில் கடமையாக செலவிட்ட பணம் 3700 இப்பணம் மூவாயிரத்து எ

15 ழுநூறும் பங்குனி 8 வரை.....லம் மூலையில் தொண்டைமா .....

16 இட்டு .....8000 இப்பணம் எண்ணாயிரமும்.....த் தராயர் பக்கல் முடிச்சோனாட்டு கோனார் வாங்கின

17 முதல்.....ப் பொலிசை ஏற்றி குடுத்த பணம் 2500. இப்பணம் இரண்டாயிரத்து அநூறும் வாணராயர் எதிர்ப்படை கு

Public domain. Digitization Muthulakshmi Research Academ

18 டுத்த பணம் 1500 இப்பணம் ஆயிரத்து ஐஞ்ஞூறும்..... கப்ப.....கொண்டார் வல்லவதரையர் பக்கல் வீர

19 கங்கன் பணம் 3500 பொலிச்சை ஏற்றி குடுத்த இப்பணம் மூவாயிரத்து ஐஞ்ஞூறும் ஆகபணம் 25,000 இப்பணம்

20 இருபத்து ஐய்யாயிரமும் இட்டமையினால் செலவெறுப்பித்து கொண்டோம் இப்பணம் இருபத்து அயியாயிரத்து

21 க்கும் இந்த பிரமாணபடி விளைநிலமும் படுகையும் கொல்லையும் கமுகும் பட்டபாழ் மணலிடும்

22 இப்பணம் இருபத்து ஐய்யாயிரத்துக்கும் விலையாவதாகவும் .....செலவறுப்பித்துக்கொண்டு

23 தரைய குவியச் செலஅடைய குடுத்தோம் சவரிப்பெருமான் மொண்ணை மாமருதர் அகளங்க நாடாழ்வார்க்கு

24 உய்யக்கொண்டார் வளநாட்டு நாட்டாரோம் இப்படி இவை நள்ளாறுடையார் கங்கைகொண்ட புவனி வேளான் எ

25 ழுத்து இப்படிக்கு இவை ஆமுருடையான் எழுத்து இப்படிக்கு இவை வேளூர் கிழவன் எழுத்து இப்படிக்கு இவை.....

26 .....ல்லருஞ்சுமான் எழுத்து இப்படிக்கு இவை கூடலூர் கிழான் எழுத்து இவை புண்ணாமகிழான் எழுத்து

27 இப்படிக்கு இவை பாவைக்குடையான் எழுத்து இந்த திறை வியஞ்செல்வகைய் எழுதினமைக்கு இவை

28 நாட்டுக்கணக்கு வேளான் நல்லூருடையான் எழுத்துஉ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

43

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜமண்டபத்துத் வடக்குச்சுவர்

அரசு : பாண்டியர்

அரசன் : சடையவர்மன் குலசேகர பாண்டியன்

(மாறவர்மன் குலசேகர பாண்டியன் II)

ஆட்சியாண்டு : 26

வரலாற்று ஆண்டு : கி.பி. 16-4-1340

ஆண்டறிக்கை எண்: 111 of 1968-69

செய்தி: ஜெயங்கொண்ட சோழவளநாட்டுக் குறும்பூர் நாட்டிலுள்ள தெத்தனூர் என்னும் ஊரைச்சேர்ந்த பெரிய நாயன் முடிச்சோணாட்டுக் கோனார் என்பவர், தாம் தண்டிய வாளால் வழி திறந்தான் பணம் 25000யும் சவரிப் பெருமாள் மொண்ணை மாமருதர் அகளங்க நாடாழ்வரிடம் ஒப்படைக்காமையாலும், கோனார் மரபுவழியில் வேறொருவரும் இல்லாமையாலும், அவருக்குச் சொந்தமான 'நூற்றுத் தொண்ணூற்று நாலே எழுமாக்காணி முந்திரிகை' அளவுள்ள நிலங்களை உய்யக்கொண்டார் வளநாட்டு நாட்டவர்கள் நாடாழ்வார்க்கு விற்றுக்கொடுத்தமையைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

முன் கல்வெட்டில் சொல்லப்பட்ட அதே செய்தியை இக்கல்வெட்டும் கூறுகிறது. ஆயினும், கோனார் தண்டிகால அளவு முன் கல்வெட்டில் 'இரண்டாவதின் எதிர் எட்டாவது முதல் பன்னிரண்டாவது வரை' என்றும் கூறப்பெற்றுள்ளது. இவை முறையே கி.பி. 1322, 1326 ஆகியவற்றைக் குறிக்கும்.

1 ஸவத்ஸிஸ்ரீ கோசட்ட பன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு.....

2 மேஷநாயற்று அபரபக்ஷத்து சதுர்தியும் நாயற்றுக்கிழமையும் பெற்ற மூலத்துநாள் உய்யக்

3 கொண்டார் வளநாட்டு நாட்டாரோம் இன்னாட்டு அம்பர் நாட்டு அம்பரான விக்கிரமசோ

4 ழபுரத்து சவரிப்பெருமாளான மொண்ணை மாமருதர் அகளங்க நாடாழ்வார்க்கு நிலவிலைப்

5 பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது ஜயங்கொண்ட சோழ வளநாட்டு குறும்பூர் நாட்டு தெத்தலூருடை

6 யான் பெரிய னாயன் முடிச்சோனாட்டுக் கோனார் தம்பக்கல் எதிர்ப்பை வாங்கின முதலுக்கும்

7 இரண்டாவதின் எதிர் எட்டாவது முதல் பன்னிரண்டவது வரையும் தம்மை புணைப்படுத்திவே

8 லை நில்லாமல் ஓடிப்போகயில் இவர் பேரால் கடமைக்கு பண்டாரத்தார் செலவறுப்பித்து கொண்ட

Public domain. Digitization Muthulakshmi Research Academ

9 மைக்கும் முன்னாள் மண்டல வாணராயர் புணைப்பட்டு இவர்க்கு இறுத்த முதலாய் இவர்க்கு தர குடுத்த முதலுக்கு

10 நில்லாமயால் இவர் காணியான ..... ஈழத்தரையர் பக்கல்.....

11 வன் வாங்கின முதலாய் தாம் குடுத்த முதலுக்கு இந்த முடிச்சோணாட்டு கோனார் பலர் பக்கலிலும் எதிர்ப்பை வாங்கின முத

12 லுக்கு தர செலவாக்கின முதலுக்கும் இந்த முடிச்சோணாட்டுக் கோனார் வழியில் ஒருத்தர் இல்லாத படியாலே இம்முதலுக்கு

13 இவர் காணி னிலைப்பற்றிக்கொண்டு இந்த அந்தராயம் நீக்கி தள்ளிதரவேணும் என்று தாம் சொல்லுகையில் எங்களால் இந்த அந்தராயம்

14 எடுக்கச் செயப்படாதபடியாலும் வேறு இந்த காணிகொண்டு இந்த அந்தராயம் எடுக்க ஒருத்தர் இல்லாதபடியாலும்

15 .....இ.....அந்தராயத்துக்கு இந்த காணியைக் கொள்ளவேணும் என்று நாங்கள் சொல்லுகையில் இப்படிக்கு இவர்

16 காணியாய் இவர்க்கு நாங்கள் விற்றுக்குடுத்த அடைப்பின்படி நல்லாற்றூர் நிலம் 48½ நெல்வானார் நாயனார் மா

17 பூசை திருவாராதன நிலம் 4½ நீக்கி நிலம் 478 மா இதில் வங்கனூர் கொ.....பட்ட.....நல்லூற்றூரு

18 டையார் நச்சினார்க்கினியரும் அரியலூருடையாகும் பேரால் அடைப்பின்படி நிலம்.....நிலம் 378 மா

Public domain. Digitization Muthulakshmi Research Academ

19 இன்னிலம் முப்பத்தேழே எட்டு மா முக்காணியும் இவ்வூர் நத்தமும் படுகையும் கமுகும் கொல்லையும் பட்ட பாழு

20 ம் இன்னமும் இவர்கள் காணியான பலர் குடி நிலம் 16½ இன்னிலம் பதினாறரையும் உள்ளூர் நத்தமும் படுகையும் இ.....

21 ானி பூபால சுந்தரசோழநல்லூர்.....பற்று கழிப்பற்று உட்பட நிலம் ...:.....கொண்ட ..... ப

22 திற்று வேலியும் ஊர் நத்தமும் படுகையும் மணலிடும் இன்னமும் இவர் காணியான நத்தம் நிலம் நிலம் 7 வேலி

23 இன்னிலம் ஏழு வேலியும் நத்தமும் படுகையும் இன்னமும் இவர் க்காணியான வாசல் தலைவெளி நிலம் 22 வேலி

24 இன்னிலம் இருப்பத்திரு வேலியும் இன்னமும் இவர் காணியான போதிமங்கலம் நிலம் 73 வேலி இதில் உள்ளூர் நிலம்

25 நாயன்மார் பூசைத் திருவாராதனம் நிலம்.....நீக்கி 72 8 மா இன்னிலம் எழுபத்திரண்டே எண்மா

26 வரையே அரைக்காணி முந்திரிகையும் உள்ளூர் நத்தமும் கொல்லையும் ஆகபல ஊர்களாலும் விளைநிலம் 26.....

27 வேலி இதில் உள்ளூர் நாயன்மார் திருவாராதனம் நிலம்.....நீக்கி நிலம் 240 .....இந்நிலம் கோவிந்தப .....

28 பணம் 5ம் நல்லாற்றூருடையார் நச்சினார்க்கினியாகரும் அரியலூருடையாரும் பேரால் நிலம் 10 வேலி நீக்கி நிலம் 194-எ 7 மா ½ காணி

CC-0. Public domain. Digitization Muthulakshmi Research Academ

29 இன்னிலம் நூற்றுத் தொண்ணூற்று நாலே எழுமா காணி அரைக்காணி முந்திரிகையும் இவ்வூர்களில் ந

30 ான் கெல்லை உட்பட ஊர் நத்தமும் படுகையும் கமுகும் கொல்லையும் பட்ட பாழும் மணலிடும் விற்று குடுத்

31 தோம் உய்யக்கொண்டார் வளநாட்டு நாட்டாரோம் சவரிப்பெருமாள் மொண்ணை மாமருதர் அகளங்க நாடாழ்வார்க்கு இப்படி

32 விற்று குடுத்த விளைநிலம் நூற்றுத் தொந்நூற்றுநாலே எழுமாக்காணி அரைக்காணி முந்திரிகையும் இவ்வூர்களில் நத்த

33 மும் கொல்லையும் படுகையும் கமுகும் பட்ட பாழ் மணலிடும் இற்றை நாள் விற்றுக்குடுத்து எம்மிலிசைந்த விலைப்பொருள்

34 அன்றாடு நற்காசினால் வாளால் வழி திறந்தான் பணம் 25,000 இப்பணம் இருபத்து அய்யாயிரத்துக்கும் இன்னிலம் நூற்றுத்

35 தொண்ணூற்று நாலே எழுமாக்காணி அரைக்காணி முந்திரிகையும் நத்தமும் படுகையும் கொல்லையும் கமு

36 கும் பட்டப்பாழும் மணலிடும் விற்றுக்குடுத்தோம் இவ்வூர்களில் மேல் நோக்கின மரமும் கீழ் நோக்கின

37 கிணறும் பொதுவும் பொதாதியும் ப.....கமும் பாதா சரிமும் மற்று எற்பல பட்டனவும் உள்பட தமக்குதானாத

38 ானவில் ஒற்றிக் கிறயங்களுக்கு.....உரித்தாகவும் இப்படி சம்மதித்து விலைக்குற விற்று பொருளறக்கைக்கொண்டு விற்றுவி

Public domain. Digitization Muthulakshmi Research Academ

39 லை பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பரான விக்கிரம சோழபுரத்து

40 சவரிப்பெருமாள் மொண்ணை மாமருதர் அகளங்க நாடாழ்வார்க்கு

41 உய்யக்கொண்டார் வளநாட்டு நாட்டாரோம் இப்படிக்கு இவை சாத்தனுடைய

42 ார் கங்கைகொண் புவனிவேளான் எழுத்து இப்படிக்கு இவை வேளூர் கிழ

43 வன் எழுத்து இப்படிக்கு இவை நல்லிருஞ்சு கிழான் எழுத்து இப்படிக்கு இவை

44 கூடல்கிழான் எழுத்து இப்படிக்கு இவை நாகமங்கலமுடைய எழுத்து இப்படி இவை

45 சுரைக்குடையான் எழுத்து இப்படி இவை காரையூர் வேளார் எழுத்து இப்படி இவை ஆமுருடை

46 யான் எழுத்து இப்படி இவை புண்ணகிழவர் எழுத்து இப்படி அறிவேன் குறும்பர்புற

47 த்தூர் காமக்காணி பொற்கோயில் நம்பியேன் இப்படி அறிவேன் காட்டபொ

48 ன்னம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை பரம்பை குடையார் எழுத்து இப்படிக்கு

49 இவை புத்தக்குடையார் நெடுந்தவன் பெருமாள் திருநள்ளாறுடையார் எழுத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

50 இப்படிக்கு இவை அம்பர்புறத்தான் நகிரீஸ்வரச்சருப்பேறி மங்கலத்து.....

51 .....ஆரூருடையான் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கௌதமன் மண.....

52 ன் எழுத்து இப்படி அறிவேன் று கடமுடையார் சோழ கோனெழுத்து உ இப்படி

53 அறிவேன் அம்பர்புறத்து நகரீஸ்வர சருப்பேதி மங்கலத்து பாரத்துவாசி

54 .....இப்படிக்கு கோட்டுச்சேரி நெற்குணத்து.....

55 .....நாகபட்.....இப்படி அறிவேன் உடையார் திருநள்ளாறு உடையார் கோயில்

56 தேவர் கன்மி.....பிரமமாராயனேன் இப்படி இவை

57 புத்தக்குடையான் எழுத்து இந்த பிரமாணம் எழுதினமைக்கு

58 இவை திரு.....வெண்ணை நல்லூருடையார் எழுத்து.

44

ஊர்	:	திருநள்ளாறு
கோயில்	:	தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம்	:	இராஜமண்டபத்துத் தெற்குச்சுவர்
அரசு	:	பாண்டியர்
அரசன்	:	மாறவர்மன் வீரபாண்டியன்
ஆட்சியாண்டு	:	21
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 22-12-1354

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: திருநள்ளாறுடையார்க் கோயிலில் ஸ்ரீபாதம் தாங்கும் பணி, கேரளாந்தகன் எடுக்கும் பணி ஆகிய சாமுதாயப் பணிகளைச் செய்துவந்த 20 பேர்களுக்கு, இக்கோயில் தேவகன்மிகள் சில நிலங்களை விற்று, அவற்றால் கிடைத்த 200 பணங்களை இறைவனுக்குப் பொன்மாலை செய்தற்பொருட்டுக் கோயிற் கருவூலத்தில் இருப்பாக வைத்தமையைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 21

2 இருபத் தொன்றாவது தநு நாயற்று பூர்வபக்ஷத்து அஷ்டமியும் திங்கட்கிழமையும் பெற்ற.....தி நாள் உய்ய கொ

3 ண்டார் வளநாட்டு முழையூர் நாட்டு உடையார் திருநள்ளாறுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்

4 மிகளோம் இன்னாயனார் கோயில் ஸ்ரீபாதந்தாங்குவார்க்கு சண்டேஸ்வரப் பெருவிலையாக பிரமாணம் செய்து குடுத்தபடிக்

5 காவது பெருமாள் ஸ்ரீபாதம் தாங்கும் பணிக்கும் திருக்கேளராந்தகன் எடுக்கும் பணிக்கும் நிச்சயித்த பேர் 20க்கு சாமுதாயம் ஆ

6 னுடையான் கோயில்ப் பிள்ளையான பெரிய நாட்டு விழுப்பரையனும் இவன் மகன் பேராயிரமுடையான் விழுப்பரையன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

7 ஆலதுடையான் உமையன் திருநிலை அழகிய விழுப்பரையனும் இவன் மகன் வண்டுவார்ப் பெருமாளான போக மார்த்த பூண்முலை

8 விழுப்பரையனும் மாங்குடையான் தித்திச்சான் சிவதவன் விழுப்பரையனுக்கும் ஆகப்பேர் 5ம் சாமுதாயம் சறுவக்குடையான் திருநள்ளா

9 றுடையானான நாற்பத்தெண்ணாயிர விழுப்பரையனுக்கும் இவன் தம்பி உடையாண்டா.....ளிடும் பெ

10 ருமாள் விழுப்பரையனும் இவன் தம்பி அழகியானான நாடுடைநாயக விழுப்பரையனுக்கும் இவன் தம்பி சிவதவன் பெருமாளான முன்ன

11 வன் அழகிய பெருமாள் விழுப்பரையனுக்கும் இவன் தம்பி நாடுடைப்பெருமாளான நாவிலூறும் பெருமாள் விழுப்பரையனுக்கும் ஆக

12 பேர் 5ம் சாமுதாயம் மருகலுடையான் திருநள்ளாறுடையான் ஸ்ரீமாகேஸ்வர விழுப்பரையனும் இவன் மகன் தாயிலும் நல்ல பெருமா

13 ளான சான்றுபோன பெருமாள் விழுப்பரையனும் அயிற்காடு கிழான் ஆழ்வான் பிள்ளையான நாடுடை நாயகப்பேரிளமை விழுப்பரை

14 யனும் இவன் மகன் ஆண்டான் பிள்ளையான நடுவுரைக்கும் பெருமாள் விழுப்பரையனுக்கும் அம்பருடையான் திருவாய்க்குல

15 முடையான் பல்கிவல்ல தொண்டர் விழுப்பரையனுக்கும் ஆக பேர் 5ம் கூமூர் உடையான் திருக்கழும்பகத்து அழகியபெருமாள் விழுப்பரையனுக்கும்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

16 குறுக்கை உடையான் தித்திக்கும் தேனான காலிங்கராயர் விழுப்பரையனுக்கும் வி.....ம்பு முடையான் திருநள்ளாறுடையான் குருகுலத்தரைய விழுப்பரையனுக்கும் இவ

17 ன் தம்பி நடுவுரைக்கும் பெருமாளான சந்திரமௌலி விழுப்பரையனுக்கும் ப.....காப்பங்குடையான் தாமோதப் பிள்ளையான பலகால் நடந்தபெருமாள்

18 விழுப்பரையனும் ஆக பேர் 5ம் ஆக பேர் 20 இப்பேர் இருபதுக்கும் ஸ்ரீபாதம் தாங்கும் பணி காணியாக விற்றுக்குடுத்து கொள்வதான விலை பணம் 200 இப்பண

19 ம் இருநூறும் செம்பொன் செய்மாலை திருவாபரணத்துக்குடலாக கோயில் பண்டாரத்து ஒடுக்குகையில் தங்களுக்கு இலக்கைக்கு சாமுதாயம் பேர் நாலுக்குபே

20 ர் ஒன்றுக்கு நாள் 1க்கு பதக்காக வந்த நெல்லும் ஆகப்பேர் பதிநாலும் திருக்கேரளாந்தகன் எடுக்கும் பேர் இரண்டும் ஆகப்பேர் 16க்கும் ஆள் ஒன்று

21 க்குறுணி நானாழியால் வந்த நெல்லும் பெற்று சிபாதம் தாங்கப்பேர் 8ம் இப்படி பெறுமிடத்து பண்ணிரண்டு .....பெறவும் இப்படி

22 செய்யுமிடத்து இபணி காணியாக கொண்டு விற்றும் ஒற்றி வைத்தும் கொள்ள கடவதாகவும் இப்படி சம்மதித்து பிரமானம் பண்ணிக்குடுத்தோ

23 ம் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளோம் இப்படிக்கு இவை போகமார்த்தபூண்முலை பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கோயில் சாமுதாயம் .....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

24 மாராயன் எழுத்து இப்படிக்கு இவை திருப்பணி சாமுதாயம் காசியபன் சூரியதேவன் நாற்பத்தெண்ணாயிர பிரமாராயன் எழுத்து இவை திருநள்ளாறுை

25 யான்பட்டன் எழுத்து இவை செயத்து வாழ்வித்த பட்டன் எழுத்து இவை குருகுலத்தரைய பிரமாராயன் எழுத்து இவை மாடாபத்தியம்.....

26 வூர் கிழவன் சுந்தரப்பெருமான் எழுத்து இவை வடக்கண் காணி.....திருக்கையொட்டிக்கா

27 ணியுடைய காட்டூருடையான் நடுவுரைக்கும் பெருமாள் எழுத்து இவை போகமார்த்த பூண்முலை.....

28 .....ய வன்னியூர் கிழவன் நள்ளாறு நாளும் பணிவான் எழுத்து இவை கோயில் கணக்குப்பிள்ளை.....

29 இவை கோயில் கணக்கு வித்தகை உடையான் நாடுடை நாயகப்பிரியன் எழுத்து இவை .....எழுத்து

45

ஊர்	:	திருநள்ளாறு
கோயில்	:	தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம்	:	மேற்குத் திருச்சுற்றுமாளிகையின் அதிட்டானம்
அரசு	:	பாண்டியர்
அரசன்	:	சுந்தரபாண்டியன்
ஆட்சியாண்டு	:	இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வரலாற்று ஆண்டு : கி.பி. 14ஆம் நூற்றாண்டு
எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: திருவலஞ்சுழி உடையார் கோயில், திருவலஞ்சுழி உடையான் ஆகிய பெயர்கள் காணப்பெறுகின்றன. இது நிலக்கொடைபற்றிய கல்வெட்டாக இருக்கலாம்.

1 ஸவத்ஸிஸ்ரீ திருவெண்..... சுழிபட்டனுக்கும் நாடுடைய பெருமாளா.....உடையார் திருக்கோயில் ஆஸ்ரீய மாக எங்கள் தமயனார் முதலியார் .....

2 செய்த்து வாய்த்த ..... பட்டனுக்கு .....சுழி உடையான் மகன் திருநள்ளாறுடையானு .....யார் எழுந்தருளப் பண்ணின உடையார் திருவலஞ்சுழி உடையார் கோயி .....

3 க்கும் சம்பத்தின் மகன் .....ர் திருவலஞ்சுழி உடையானுக்கும் சொல்லும்படி உடையார் திருநள்ளாறு .....

4 .....சிவப் பிராமணக்காணி பெருமாள் சித்ரபாண்டிய தேவர்க்குயாண்டு .....

5 .....னெட்டா..... ஏற்றியருளினனாள் முதல் தங்களுக்குக் காணியாக முதலியார் நிச்சயித்து .....

6 .....படியே நாங்கள் நால்வரும் பேற்க்கு ஏழரையாக வந்தனாள்க் காணியாகக் கொண்டு .....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

46

ஊர் : திருநள்ளாறு
கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம் : இராஜமண்டபத்துத் தெற்குச்சுவர்
அரசு : விஜயநகர்
அரசன் : விருப்பண உடையார்.
ஆட்சியாண்டு : சகம் 1313
வரலாற்று ஆண்டு : கி.பி. 20-10-1391
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: திருநள்ளாறுடையார்க் கோயிலில் கணக்குக்காணி என்னும் பெயரில் மான்யம் பெற்று கணக்கர்களாகப் பணியாற்றி பலர் இறந்து போனார்கள். வேறு சிலர் ஊரைவிட்டுச் சென்று விட்டனர். அன்றியும் பிரமாதூத வருடத்தில் நெல்விளைவு ஏதுமின்றி நாட்டில் பெரும்பஞ்சம் தோன்றியது. இதன் விளைவாக மக்கள் பெருமளவு இறந்து போனார்கள். இக்காரணங்களால் நிலையான முதல் இல்லாமையால் திருநள்ளாறுடையார்க்கு நடைபெறவேண்டிய நித்த நிமந்தங்கள் தடைபட்டு நின்றன. எனவே கோயில் தேவகன்மிகளும், ருத்திர மாகேஸ்வரர்களும் அரசனின் அனுமதிபெற்று புறங்கரம்பை நாட்டைச் சேர்ந்த கணக்கர்களில் ஒருவனான எழிலூருடையான் சூரிய தேவன் என்பவனுக்கு குறிப்பிட்ட நிலத்தை 80

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆகுவராமன் பணத்துக்கு விற்றுக்கொடுத்தமையைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ மநுமகா மண்டலேஸ்வரநீ ஹரி ராய குமாரன் வீர விருப்பண உடையார் பிறுதுவிராச்சியம் பண்ணியருளானிந்ற சகப்தம் 1313ன் மேல் செல்லாநின்ற

2 பிறசாபதி வருஷம் துலாநாயற்று பூர்வபக்ஷத்து வெள்ளிக் கிழமையும் பெற்ற பூசத்து நாள் இராசேந்திர சோழ வளநாட்டு புறங்கரம்பை நாட்டுக் கணக்கப்பிள்ளைகளில் எழிலூ

3 ருடையான் சூரிய தேவற்க்கு உய்யக்கொண்ட சோழவளநாட்டு முழையூர் நாட்டு திருநள்ளாறுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுர தேவகன்மிகளும் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுரரும் விண்

4 ணப்பஞ்செய்ய திருவாய் மலர்ந்தருளின படிக்கு ஆதிசண்டேசுர தேவர் அருளிச் செய்தபடிக்கு காணிவிலை குடுத்தபடி இக்கோயில் கணக்குகாணி உடைய ஜந-கள் பிராதபிமானது.

5 கள் உள்ளவர்களும் நேராகச் செத்தும் கெட்டும் நிருமூலத்தும் போநபடியாலும் பிரமாதூத வருஷம் மண்டலமாக விளையாமல் பஞ்சமாய்த் தேசத்தில் மநித்தரும் செத்து உடையார் திருநள்ளாறுன.

6 டயார் பரிகரமும் அலகி கோயிலுக்கு பூசைக்கும் குடுத்த தொகை நீக்கி நிலைக்கு குடுத்த முதல் இல்லாதபடியாலே இக்கோயில் கணக்கு காணிக்கும் பத்தன் நள்ளாறுடையாந் காணியாக நீக்கி கணக்கு காணி எ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

7 ழூலூருடையான் சூரிய தேவற்கு சண்டேசுர தேவர் விலையாக விற்றுக்கொண்ட ஆகுவராமன் பணம் 80 இப்பணம் எண்பதுக்கும் கோயில் கணக்கு காணியும் காணியாலுள்ள சுவந்திரங்களும் மனையும் ெ

8 பற்று மற்றும் உள்ள சுவந்திரங்களும் பெற்று நாடுடை நாயகப் பிரியந் என்று பெற்று சந்திறாதித்தவரையும் அனுபவித்துப் போகக் கடவனாகவும் இப்படி திருவாய் மலர்ந்தருளின படிக்கு ஆதி சண்டேசுவர தேவர் அருளிச்செய

9 ல்படி ஆதிசண்டேசுர தேவகன்மிகளும் ஸ்ரீருத்திற ஸ்ரீமாகேசுரரும் காணி விலை குடுத்தமைக்கு இப்படிக்கு இவை மாடாபத்தியம் வன்னியூர்க் கிழவன் சாமுண்டிதேவன் எழுத்து இவை கோயில் நாயகம் சடையநாயகப்பிர

10 மாராயன் எழுத்து இவை தேவகன்மி இனிமைநாயன் எழுத்து இப்படி அறிவேன் வெண்ணை நல்லூருடையாந் கூத்தர்ணாயனேன் இப்படி அறிவேன் வேளூர் கிழவன் திருக்கைவேல் அழகியானேந் இப்படி அறிவேன் பாலாறுடையாந்த பசுவா.

47

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : நடராஜர் செப்புத்திருமேனியின் பீடம்

வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆண்டறிக்கை எண்: 115, 1968-69.

செய்தி: இச்சாசனம் அமைந்துள்ள நடராஜரின் செப்புத்திருமேனி, அகளங்கன் என்னும் ஊரைச்சேர்ந்த குப்புசாமி நடேசன், ஸ்ரீவைத்திநாதசுவாமி நடேசன் ஆகியோரால் உருவாக்கப்பட்டமையைக் குறிப்பிடுகிறது.

1 அகளங்கண் குப்புசாமி நடேசன்

2 அகளங்கன் ஸ்ரீவைத்தினாதசுவாமி நடேசன்

48

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : மேற்குத் திருச்சுற்றுமாளிகையில் உள்ள சிற்பம்.

வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டி எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: இச்சிற்பம் பாவாடை நாயக்கரின் உருவம் என்பதை இச்சாசனம் சுட்டுகிறது. இவருக்கும் இக்கோயிலுக்கும் உள்ள தொடர்பு விளங்கவில்லை.

1 உ

2 ரா

3 யஸ்ரீ

4 பாவா

Public domain. Digitization Muthulakshmi Research Academ

5 டை
6 னாய
7 க்கர் அ
8 வர்க
9 ள்

49

ஊர் : திருநள்ளாறு
கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம் : உண்ணாழியில் மேற்குச்சுவர்
அரசு : -
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள்

ஆண்டறிக்கை எண்: 443 1965-66

செய்தி: வாகளூர் நாடுடையான் பட்டன் என்பவனிடம் 560 கலம் நெல்லை மூலதனமாகப் பெற்றுக்கொண்டு ஆண்டுதோறும் அவற்றுக்கு வட்டியாக வரும் 280 கலம் நெல்லைக்கொண்டு, வழிவரும் சிவயோகிகளுக்கு (வாகளூர் நாடுடையான் பட்டன் மடத்தில்) உணவளிக்க ஏற்பாடு செய்யப்பெற்றமையைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 இறையிலி செய்
2 துகொடுத்து இவா
3 களூர் நாடுடையாந்தபட்ட
4 ர்பக்கல் நாங்கள் கொ
5 ண்ட நெல்லு 560
6 ளம் இந்நெல்லு 5
7 60 ளத்துக்குங் கல
8 த்தூப் பதக்காகப் பொ
9 லிந்த பலிசை நெல்லு
10 இருநூற்றெண்பதிந்
11 கலம் இந்நெல்லிருநூ
12 ற்றெண்பதிந் கலமும்
13 ஆவஹதாரம் இறையிலி
14 யனுபவித்திந் நாடுை
15 டயாந் பட்டந் வாவ
16 த்தாருை-மட-ை
17 கக்கொண்டு சிவயோ
18 கிகளை அமுது செய்விக்
19 கக் கடவர்களாகவும் இ
20 நிலம் வேலியும் ஆறு
21 Damaged

Public domain. Digitization Muthulakshmi Research Academ

50

ஊர் : திருநள்ளாறு
கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்
இடம் : உண்ணாழித் தெற்குச் சுவர் வரிமானம்.
அரசு : இல்லை
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள்
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: ஒப்பமிட்டோரின் ஊர்களும் பெயர்களும் காணப்பெறுகின்றன.

1 துநாள் னூற்று எழுபத்தைஞ்சி..... சொ.....தாப.....ள ஓலை உய்ய கொண்டார் வளநாட்டு முழையூர் நாட்டு திருநள்ளாறுடையார் தேவர்க்கன்மிக.....

2 தற்கும் நிமந்தக்காற்கு உடையார் திருநள்ளாறு உடையார் ஸ்ரீ கோயிலிலே கல்லு வெட்டுவிக்க இவை அறிஞ்சய சோழ மூவேன்த வேளான் எழுத்து இவை.....

3 வேளான் நெற்க்குப்பையுடையான் முகவெட்டி கண்டியூர் உடையானும் வாசித்தான் விலங்களூர் உடையானும் வரியிலார் முழையூர் உடையானும்....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4 .....மங்கலமுடையான் கணபுரத்தேவனும் இநாட்டு-னூர் கூற்றத்து பாவையுடையான் மூவேன்த வேளான் தாமோதிரனும் ராஜேந்திர சிங்க வளநாட்டு திரு... ஆர்காட்டு கூற்றத்து ஆலத்தூர் உடையான் சீராளன் சந்திர சேகரனும் பட்டோலை ஜயங்கொண்ட சோழமண்டலத்து..... கொட்டத்து நீர..... நாட்டு சோழவள நல்லூராதித்.....

5 .....சோழ நல்லூர் உடையார் கோளட்டியும் முகவெட்டி அருமொழி தேவ வளநாட்டு சேற்றூர் கூற்றத்து சிறுகுடவாயிலுடையான்... ராஜேந்திரசிங்க வளநாட்டு சேற்றூர் நாட்டு கண்டியூர் உடையான் பொற்காரி அரங்கனும் அருமொழி தேவவளநாட்டு புலியூர்நாட்டு.....

51

ஊர் : திருநள்ளாறு

கோயில் : தர்ப்பாரண்யேஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜமண்டபத்து வடக்குச் சுவர்

அரசு : பாண்டியர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: திருநந்தவனத்துக்கு இறையிலியாக நிலக்கொடை வழங்கியது பற்றி இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 .....நாயனார்க்கு திருச்சுற்றில் இவர் செய்விக்கிற திருநந்த

2 .....பதின்மூன்றாவது எதிராவது தைம்மாத முதல் தேவதா.....

3 .....நெல்வரி பொன்வரி காசு கடமை.....

4 .....களும் தேவைகளும் வரியிலார் கணக்கிலும் கழித்து..... இவ்வோலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்த வரையும் இந்.....

5 .....தார் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் இன்னிலம் காரும் மானமும் வம்பும் கடைப்பூவும் மஞ்சளும் இஞ்சியும்.....

6 .....ழைக்.....கொழுந்து மற்றும் ஏற்பேர்பட்ட பயிர் செய்து கொண்டு இன்னாள் முதல் முட்டங்க இறையிலியாக.....

7 .....அனுபவித்துப் போக தேவற்குயாண்டு .....து எதிராமாண்டு நாள் 182 இவை இளாயாகுடி உடையார்.....

8 .....எழுத்துஉ இவை.....யென் எழுத்து உ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

52

ஊர் : நல்லம்பல்
கோயில் : தான் தோன்றீஸ்வரர்க் கோயில்
இடம் : அர்த்தமண்டபத்துத் தெற்குச்சுவர்
அரசு : சோழர்
அரசன் : முதற்குலோத்துங்க சோழன்
ஆட்சியாண்டு : 47
வரலாற்று ஆண்டு : கி.பி. 1117
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: கொடையாளன் ஒருவன் நல்லம்பர் தான்தோன்றி மகா தேவர்க்குச் சனிக்கிழமை தோறும் எண்ணெய்க் காப்புச் சாத்தி அருளவும், அமாவாசை நாட்களிலும், விழா நாட்களிலும் அவரை உலாவாக எழுந்தருளச் செய்யவும், திருவமுது படைக்கவும், விழா நாட்களில் அடியார்களுக்கு உணவு வழங்கவும் வேண்டி, 18 காசுகளுக்கு எட்டுமா அரையே அரைக்காணி முந்திரிகைக் கீழரை அளவுள்ள நிலங்களை விலைக்கு வாங்கிக்கொடையாக வழங்கினான். தனித்தனியே மூன்று இடங்களில் இருந்த இந்நிலங்களின் அளவுகளும் எல்லைகளும் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளன.

1 ஸவத்ஸிஶ்ரீ புகழ் சூழ்ந்த புணரி அகழ் சூழ்ந்தபுவியில்
பொன்னேமி அளவுந் தன்னேமி நடப்ப விளங்கு

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஐயமகளை இளங்கோபப்பருவத்துச் சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழிலாற் புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்து வாரி அயில் முனைக் கொந்தள வரைசர் தந்தளம்மிரிய வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்திக்

2 கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகைசூடித் தெந்திசைத் தேமருகமலப் பூமகள் பொதுமையும் பொன்னியாடையும் நன்னில பாவையுந் தனிமையுந் தவிர்த்து புநிததன் திருமணி மகுடம் உரிமையிற்சூடி தந்னடி இரண்டும் தடமுடியாகத் தொந்நில வேந்தர் சூடமுன்னை மனுவாறு பெருகக்கலியாறு வறுப்பச் செங்கோல் திசைதொ

3 றுஞ் செல்ல வெண்குடை யிருநில வளாக மெங்கனுந் தனாதுதிரு நிழல் வெண்ணிலாத் திகழ ஒருதனி மேருவிற் புலி விளையாட வார் கடற்றிவாந்தரத்துப் பூபாலர் திறைவிடு தந்த கலஞ்சொரிகளிறு முறை நிற்ப விலங்கிய தென்னவன் கருந்தலை பருந்தலைத்திட தந்பொன் நகரம் புறத்திடைக் கிடப்ப

4 வின்னாள் பிற்குலம் பிறைபோல் நிற்பிழையெனினும் சொல்லெதிர் கொடிற்றல்லது தங்கை வில்லெதிர் கோடா வேழ்குலத்தரைசர் களத்தியில் பட்ட களிற்றின தீட்டமும் பட்டமும் பரியும் விட்ட தந்மாநமும்..... ஏறின மலைகளு முதுகு நெளிப்ப இழிந்த நதிகளுஞ் சுழன்றுடைந்தோட

5 .....தலை விரிந்தலமர குடதிசைத் தன்னுளுகந்து தாநுந் தானையும் பன்னாலீட்ட பலபல முதுகு பயந்தெதிர் மாறிய ஜயப்பெருந்திருவும் யழியுகந்து கொடுத்த புகழுஞ்செல்வியும் வாளாரொண்கண் மடந்தைய

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ரீட்டமும்..... கொடுத்த வெங்கரி நிரையுங்கங்க மண்டலமும் சிங்கண மென்னும் பாணியி

6 ரண்டும் ஒரு விசைக் கை கொண்டிண்டிய புகமொடு பாண்டி மண்டலமுங் கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளவரு பரித்தரங்கமும் பொருகரித் தரங்கமுந் தந்திர வாரியுமுடைத்தாய் வந்து வடகடல் தெந்கடல் பாய்வது போலத் தந்பெருஞ்சேனையேவிப் பஞ்சவரையவமும் பொருத மொய்க்களந் தஞ்சி அ.....ளித்தங்கொடி

7 அரணெனப் புக்கக் காடறத்- துடைத்து நாடடிப்படுத்து மற்றவர் தம்மை வனசரர் திரியும் பொந்சை வெம்சுர மேற்றிக்கொற்ற விஜய ஸதம்பம் திசைதொறுந் முத்தின் சலாபமும் முந்தமிழ்ப் பொதியினும் மத்தவந் கரிபடுகைச் சயமுங்கனியுங் கைக்கொண்டருளி தென்னாட்டெல்லை காட்டி குடமலை நாட்டுள்ள சாவெ

8 ரெல்லாந் தனி விசும்பேற மாவேறிய தனிவருதனித் தலைவர் குறுக்கலர் குலையக் கோட்டாறுட்பட நெறிதொறு றிலைகளிட்டருளித் திறைகொள ஸிம்ஹாஸனத் திரித்தருளிப் பொங்கொளியாரமும் திருப்புயம் தலங்களும் போல வீரமுந்தியாகமும் விளங்கப் பாகர் தொழச் சிவனிடத்துமையென

9 தியாகவல்லிப் புவனமுழுதுடையாளிருப்ப அவளுடன் கங்கை வீற்றிருந்தென மங்கையர் திலதம் ஏழிசைவல்லபி ஏழுலகுடையாள் வாழி மலர்ந்தினி திருப்ப ஊழியும் உலகுடையாளொடும் வீரஸிங்காசனத்து வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரிபந்மரான ஸ்ரீ புவனசக்கரவத்

10 திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்குயாண்டு 47வது உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு நல்லம்பர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

உடையான் அம்பலவன் அனந்தந் இன்நாட்டு நல்லழுந்தூர் ஊற்குச் சமைந்த நல்லழுந்தூர் உடையான்.....ன் கண்ணபுரதேவனான இர

11 .....ழ அம்பர் நாட்டு வேளானும் நல்லழுந்தூர் உடையான் நகுலந் திருவாய்க்குல முடையாநான அழகிய சோழ அம்பர்நாட்டுக்கோனும் நல்லழுந்தூர் உடையான் கண்ணந் கண்ணபுரதேவனும் நல்லழுந்தூர் உடையான் .....ம் நல்லழுந்தூர்

12 .....க்கன் வெண்ணைக் கூத்தனும் மாயிலங்கிழவன் ம.....த்தன் பிச்சனும்.....உடையான் சென்.....றையனும் இவ்வனைவர் பக்கல் ஊர் விலையாக நாற்பத் தேழாவதும் நாற்பத்தெட்டாவதும் ஐயம்பதாவதும் இன்நாட்டு.....தான் தோன்றி மஹா தேவர்

13 சனிக்கிழமை தோறும் திருவெண்ணைக்காப்புச் சாத்தி அருளுகைக்கும் இ.....ய் திருநாள் எழுந்தருளுவித்து ஆண்டார்கள் அமுது செய்தருளுகைக்கு மடப்புறமும் இத்தேவற்கேய் அமாவாஸிதோறும் மாஸை.....ஆக நான் இட்ட

14 அன்றாடு நற்காசு பதிநெட்டுங் குடுத்துக் கொண்டநிலம் எட்டுமாவரையே அரைகாணி முந்திரிகைக் கீழரை இநிலம் மாவுக்குக் கீழ்பாற்கெல்லை நல்லம் பருடையான் அம்பலவன் கம்பன் இத்தேவற்குத் திருநாயற்றுக் கிழமை புறமாக கொண்டு

15 விட்ட நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை இராஜேந்திர சோழந் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை இத்தேவர் திருவிழாப் புறத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை பவித்ரமாணிக்கப் பேரேரிக்குத் தெற்கும்..... பெருநான் கெ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

16 ல்லையுள் நடவுபட்ட நிலம் நாலுமாவும் இந்நிலம் இத்தேவற் கெய் இவ்வறுதடி ஊர் பொதுவாய் இட்ட நிலம் இருமாவரை அரைகாணியும் இந்த இத்தேவற்கேய் ஊரார்க்குக் கிழக்கு ஊர் பிரமாண நிலத்துக்குத் தெற்கு ஊற் பொதுவாய்க் கிடந்த நிலம் ஒருமாவரை முந்

17 .....ய் கொண்டு குடுத்து இதுக்குத் தலைமாறு ஊர்க்கு மேற்கு ஊர்ருடன் பரிவத்தனை செ..... ஒருமாவரை முந்திரிகைக் கீழரையும் ஆக நிலம் ஒருமாவரைக் காணி முந்திரிகைக் கீழரைக்கு கீழ்பாற் கெல்ல நல்லழுந்

18 தூர் உடையான் கண்ணன் கண்டர்தேவர் நிலத்துக்கும் இவ்வூர் பிடாரியார் நிலத்துக்கு மேற்கும் தெந்பாற்க்கெல்லை இவ்வூர் திருத்தான் தோன்றீஸ்வரமுடைய மஹாதேவர் தேவதான நிலத்துக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை மனற்குளவாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்

19 கெல்லை மேற்படி வாய்க்காலுக்கு தெற்கு ஆக இவ்விசைத்த பெருநான் கெல்லை..... கைக்கீழரையும் ஆகத்தடி இரண்டினால் நிலம் ஒருமாவரைக்காணி முந்திரிகை கீழரையும் இ.....

20 ஆக இப்படி நிமந்தம் சந்திராதித்வற் செல்லக்கடவதாக நிலங்கொண்டு.....கட்டொன்றுக்கும் மஞ்.....க்கும் எரிப்பிதுக்கும் சனி ஒன்றுக்கு நெல் ஐய்குறு.....இத்தேவற்கு அமாவாஸி எழுந்தருளுகைக்கு எழுந்தருளிப் புகுந்தால் அமுது செய்தருள அரிசி குறுணி நானாழியும் கறியமுதும் தயிரமுதும் அடைக்காயமுது பாக்குப்பதி.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

53

ஊர் : நல்லம்பல்

கோயில் : தான்றோன்றீஸ்வரர்க்கோயில்

இடம் : அர்த்தக மண்டபத்தின் வடக்குச்சுவர்

அரசு : பாண்டியர்

அரசன் : நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்

ஆட்சியாண்டு : 9

வரலாற்று ஆண்டு : கி.பி. 22.4.1326

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: நல்லம்பர் தான் தோன்றீஸ்வரத்து தேவகன்மிகளும், ஊர்ச்சபையினரும் செய்துகொண்ட நிலப்பரிவர்த்தனை பற்றியது இக்கல்வெட்டு.

இருங்கண்டி சவரிபட்டர் என்பவர் நல்லம்பரில் இருந்த ஊர் நத்தத்துக்கு வடக்குப் பகுதி வெற்றிடத்தில் 64 பட்டர்களைக் குடி ஏற்றுவித்தார். இவர்களின் தேவைக்காக ஊர்மக்கள் குளம் வெட்டிக் கரையமைத்துக் கொடுத்தனர். இக்குளமும் குடியிருப்புமாகச் சேர்ந்து 400 குழிகொண்ட 4 மாநிலமாகும். இந்நிலத்துக்காக இதே ஊரில் வேறோர் இடத்தில் அமைந்திருந்த 4மா அளவுள்ள நிலங்களைத் தேவகன்மிகள் ஊரவர்க்குத் தலைமாறாக வழங்கியுள்ளதைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 ஸவத்ஸிஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவநச்சக்கரவர்த்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது மேஷ நாயற்று அபரபக்ஷ

2 த்து சதுர்த்தியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற மூலத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு நல்லம்பர் ரூரவர்க்கு இவ்ரூ

3 டயார் திருத்தாந் தோன்றீஸ்வரமுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளோம் பரிவத்தனை பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது

4 இநாட்டு அகரம் ஸ்ரீ நெற்குன்றங்கிழான் பிரமதேயத்து இருங்கண்டி சவரிப்பட்டர் இவ்வூர் நத்தத்துக்கு வடக்கில்க் கீள்ப்பார் வெளிபட்டப் பாழில்ஏ

5 ற்றிவித்த அகரபட்டர்கள் பேர் அறுபத்து நால்வர்க்கு இநல்லம்பரில் ஊரவர் தன்மம் தானமாக கல்லுவித்து குடுக்கிற குளமான இவ்வூர் நூல்வாயா

6 ற்றுக்கு தென்கரைப்பட்ட நிலத்து இந்நாயனார் திருநாமத் துக்காணி இநெற்க்குன்றங் கிழான் பிரமதேயத்து பிணம்போகும் பெருவழிக்கு.....

7 இவ்வூர் வர முன்னாள் இவ்வகரப்பட்டர்களுக்கு கல்லுவித்துக் குடுத்த குளத்துக்கு மேற்க்கும் இநெற்குன்றங் கிழான் பிரமதேசத்து அகரப்பட்டர் க

8 முகு வய்ப்புப் பட்டப் பாழுக்கு வடக்கில்ப் பெருவழி வரம்புக்கு வடக்கும் மேற்படியார் கமுகு வய்ப்புப்பட்டப் பாழுக்குத்தெ.....

9 லுக்குத் தெற்க்கும் ஆக இன்னான் கெல்லையுள் நடுவு பட்டதடி ஒன்றிநால் நிலம் நாலு மாவினாற்குழி நாநூற்றுக்கும் தலைமா.....தெ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

10 காண்ட இநூல்வாயாற்றுக்கு தெந்கரைப்பட்ட நிலத்து ஊர்ப் பொதுவாய் இவர்கள் காணியான நெற்குன்ற முடையாரும் பட்டரும் கிழாரும்மெ.....

11 க்கு கிழக்கும் தச்சன் குண்டுக்குத் தெற்க்கும் ஊர்ச் சிறுவாய்க்காலுக்கு மேற்க்கும் கொக்கரையான் நிலத்துக்கு வடக்கில் வாய்க்காலுக்கு வடக்கும் இநாந்கெல்லை

12 யுள் நடுவுபட்ட நிலம் நாலுமாவினால் குழி நாநூறும் நாங்கள் திருநாமத்துக் காணியாக பற்றிக்கொண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவோமாகவும் இப்ப

13 டி நாங்கள் பற்றிக்கொண்டு இவர்களுக்கு பரிவத்தித்து குடுத்த இநிலம் நாலுமாவும் குளமும் வெட்டிக்கரையும் ஆக்கி இக்குளக்கரையில் தாங்கள் வேண்டும்

14 மரமும் ஆக்கி இநிலத்து மேல் நோக்கின மரங்களும் கீழ்நோக்கின கிணறுகளும் பாகமும் பாகாஸ்ரீயங்களும் மற்றும் எப்பேற்ப்பட்ட உரிமைகளும் உள்

15 ப்பட அனுபவித்துக் கொள்ள கடவர்கள்ளாகவும் இப்படி தம்மதானப் பரிவத்தினை பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் நல்லம்பரில் ரூரவற்கு உடையார் திரு

16 தாந்தோன்றீஸ்வரமுடையார் கோயிலில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மிகளோம்உ இவர்கள் சொல்ல இப்பரிவத்தனை பிரமாணம் எழுதினமைக்கும் இநிலம்

17 நாலுமாவும் பரிவத்தித்து குடுத்தமைக்கும் இக்கோயிலில் சிவப்பிராமணர் காணியுடைய நல்லம்பர் பட்டர் மகன் அடியார் இச்சை அறிவான் எழுத்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

18 இப்படிக்கு இவை நல்லம்பர் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை இக்கோயில்க்காணியுடைய.... டரமணிபண்டிதர் எழுத்து இக்கோயில் கணக்கு விழியூர்

19 உடையான் எழுந்து இப்படிக்கு இவை இக்கோயில் ஆண்டார் சாலையார் தற்குறியானமைக்கு..... மகன் புற்று இடங்கொண்டார் எழுத்து இப்படி அறி

20 வேன் கீரனூர் உடையார் சிவபுரமுடையார் கோயில் பூசைக்காணி உடைய மாலென்னை..... தேவந் ஈஸ்நாந சிவநேன் இப்படி அறிவேன்.....

21கொளல் சாமுதாயம் அழகிய திருச்சிற்றம் பலமுடையாநேன் இப்படி அறிவேன் அருக்க.....லில் உறத்தூருடையான் கூத்தப்பிரான்.....

54

ஊர்	:	நல்லம்பல்
கோயில்	:	தான்தோன்றீஸ்வரர்க்கோயில்
இடம்	:	அர்த்தமண்டபத்தின் தெற்குச்சுவர்
அரசு	:	இல்லை
அரசன்	:	இல்லை
ஆட்சியாண்டு	:	இல்லை
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்துகள்
ஆண்டறிக்கை எண்	:	இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: இறைவனுக்குத் திருவமுது படைக்கவும், உலா எழுந்தருளச் செய்யவும், அடியார்களுக்கு உணவு வழங்கவும், மடப்புறமாக நிலக்கொடை வழங்கியது பற்றிக் குறிப்பிடுகிறது.

1 .....துக்கும்.....

2 .....க்கலனெ இருதூணி முக்குறுணி முன்னாழியும்.....

3 .....ஆண்டார்களமுது செய்ய. மடத்துக்கு பிர.....

4 .....ன்பதிந்மருக்.....அரிசி கலத்து.....

5 .....யமுது பொ.....

6 .....மவிற்கும் மட.....

7 .....கு நெல்லு இரு.....

8 .....அமாவாஸி.....

9 .....நாற்கலநேயி.....

10 .....கு திருநாள் எழுந்த.....

11 .....ஆண்டார்கள் அமுது செய்ய.....

12 .....கறிய முதுக்கும் மொரமுதுக்கும் .....

13.....துக்கும் பெற்கும் உள்பட.....

14.....பத்தறு கலநேய் முக்குறுணி.....

15.....ழியும் குசவநுக்கு நெல்லுக்கல.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

55

ஊர் : மாதூர்
கோயில் : சிதைந்துள்ள சிவன்கோயில்
இடம் : தெற்கு அதிட்டானம்
அரசு : சோழர்
அரசன் : இரண்டாம் குலோத்துங்கன்
ஆட்சியாண்டு : 7
வரலாற்று ஆண்டு : கி.பி. 16.8.1139
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: செயங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் நாட்டிலுள்ள போதிமங்கலம் என்னும் ஊரைச்சேர்ந்த அருளீஸ்வரமுடையானான அழகிய சோழக் குறும்பூர் நாட்டு வேளான் என்பவன், மாதவூர் என்னும் இவ்வூரின் சிவன்கோயில் இறைவனான மாதரணீஸ்வரமுடையார்க்கு 23 காசுகளுக்கு நிலம் விற்றுக்கொடுத்தமையைக் குறிப்பிடுகிறது. சோழர்களின் திருக்குலம் வளரவும், அவர்கள் பகைவர்களை வெற்றிக்கொள்ளவும் இக்கொடை வழங்கப்பெற்றுள்ளது.

1 ஸவத்ஸிஸ்ரீ பூமந்நு பதும
2 ம்பூத்த வேழுலகுந் தாமுந்
3 தவத்தால் பருதி வழித் தோ
4 ன்றி நெடுமா லிவநெனச் சுடர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

5 முடி சூடி இருநில மகளை உரிை

6 மயிற் புணர்ந்து திருமகள்

7 பணைமுலைச் செஞ்சாந்த

8 ணைந்து பருமணி மார்வ

9 ம்பனிவரை நிகற்பச் செய

10 மகள் செழு செஞ்சந்தந

11 சுவட்டால் பட இரு கயி

12 லைப் பொருப்பெருத்தோ

13 ன்றி நாமகள் தானுமெங்

14 கோமகந் கெவ்வாய்ப்பவ

15 ழச் சேயொளி படைத்தந

16 நியயாமேநத் தவள நந்நிற

17 ந்தநித்துடையே நெநப்புகழ்

18 மகள் சிந்தைம

19 கிழு நாளிலும் ஒரு குடை

20 நிலவு மொருபடை

21 திகிரி வெயிலெனுங்

22 கருங்கலி இருளிளைத் துரப்

23 ப நீடுபல்லூழி ஏழ்கடற்புறத்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

24 துங் கோடாச் செந்தநிக்கோ

25 லீநிதுலாவ மீநமும் சிலை

26 யுஞ் சிதைத்து வானுயர்

27 பொன்னெடு மேருவிற் புலி

28 வீற்றிருப்ப உம்பர்

29 யானை ஓரெட்டினுக்கு

30 தம்பமென்னத் தநித்தநி

31 திசைதொறும் விசைய

32 ஸ்தம்ப நிற்பப் பசிப

33 கையாதியாநதிநீங்க

34 மந்நுயிர் தழைப்ப ம

35 னுவாறு விளங்க மா

36 தவர் தவமும் மங்கையர்

37 கற்பும் ஆதியந்தணர்ஆ

38 குதிப் புகையும் மிடி

39 தழு கொண்டல் வீசு

40 தண் புநலும் மேதி

41 நிவளநுஞ் சாதி

42 யொழுக்கமும் நிதி

43 அறமும் பிறழாது

Public domain. Digitization Muthulakshmi Research Academ

44 நிகழப் பாவும் பழந

45 ப்பரப்பும் பணைக்கைம்

46 மாவும் அல்லது வன்ற

47 லைப்படுதல் கனவிலுங்

48 காண்டற்கரிதென வருநதிப்பு

49 டையினும் பல்வேறுபுள்

50 ளிநு மல்லது சிறையெந

51 ப்படுதலின்றி நிறைபெரு

52 ஞ்செல்வ மொடவநிவாழ

53 பல்லவர் தெலுங்கர் மாள

54 வர்க.....ங்ர் கோசலர் கன்னடர்

55 கடாரர் தென்னர் சேரலர்

56 லர் சிங்கணர் கொ

57 ங்கணர் திரிகத்தர்

58 வங்கர் அங்கர் மத்

59 திரர் கங்கர் சோநகர்

60 கைய்கையர் ஜீந

61 ரறை கழல் வேந்த

62 ரும் எல்லா வரைசரும் முறைை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

63 மயில் வருருத் திறை குணர்ந்திறை

64 ஞ்ச அம்பொன் மலற்குடி செம்பி

65 யங்கிழா நடி ஒருங்குட நமர்ந்

66 திருப்ப அருள்புரி இமைய பாை

67 வயுஞ்சிவனும் போலச் செம்பொந்த

68 வீரஸிம்மாசனத்துப்புவ

69 நமுழுதுடையாளொடுந்

70 வீற்றிருந்தருளிய கோவிராஜே

71 கசரிபந்தமரான திரிபுவநச் சக்ரவத்திகள்

72 ஸ்ரீ கொலோத்துங்க சோழ

73 தேவர்க்கு யாண்டு 7வது

74 .....சிம்.....த்து பூ

75 ர்வ பக்ஷத்து புதன்கிழமை

76 பெற்ற அஸ்வதியும்.....

77 .....செயங்கொண்ட

78 சோழ வளநாட்டுக் குறும்பூர் நாட்டு

79 போதி மங்கலத்துப் போதி மங்கல

80 முடையாந் வேளான் அருளீஸ்வ

81 ரமுடையானாந அழகியே

Public domain. Digitization Muthulakshmi Research Academ

82 சாழக் குறும்பூர் நாட்டு வேளானேந்உய்

83 யக்கொண்டார் வளநாட்டு மருகல் நாட்

84 டு மாவூர் உடையார் மாதரநீஸ் வ

85 ரமுடையார் மூலஸ்தான ஆதிசண்டே

86 ஸ்வரதேவர் பக்கல்பெ

87 ாந் கொண்டு இறையிலி செய்

88 து குடுத்த பரிசாவது எந்நுடைய கா

89 ணியாந இந்நாட்டு.....

90 .....ளங்குடியாந் இர.....

91 வரில் இத்தேவர்க்குத்திருவீதி மடப்

92 புறமாக இறையிலி செய்து குடு

93 க்கிற நிலத்துக் கீழ்பாற் கெல்லை எக்கா

94 ணியாந நிலத்துக்கு மேற்கும் தெந்பாற்

95 கெல்லை தெந்மணற்பாக்கத் தெல்லைக்கு

96 வடக்கும் மேல்பாற்கெல்லை விற்கிந்றே

97 ன்நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ெ

98 .....ர வாய்க்காலுக்குத் தெற்கும் ஆ

99 க இவ்விசைந்த பெருநான் கெல்லை

100 யு நடுவுபட்ட அவைய் காரை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

101 மயக்கல் லென்று பேர் கூவப்பட்ட நிலம்..... வுள்ளிட.....இநிலம் அரையும் இதேவர்க்குத் திருவீதி மடப்புறமாக இறையிலி செய்து குடுத்து இதேவர் கோயிலில் ஸ்ரீமகேஸ்வரரில் நற்குந மாணிக்க தேவந்நாந திருவீதித்திருநீறு பரப்பிநாந்பக்கல் கொண்ட அந்றாடு காசு 23.....

102 இக்காசு இருபத்து மூன்றுங்கொண்டு இறையிலி செய்து குடுத்தேந் இப்பூமி சோழர்கள் திருக்குலம் வதிக்கவும் ஸாஸ்வதிகமாக இக்காசு 23 இருபத்து மூந்றுங்கொண்டு இந்நிலம் அரையும் யிறையிலி செய்து குடுத்தேந் போதிமங்கலமுடையாந் வேளாந் அருளீஸ்வரமுடை

103 யானாந அழகிய சோழக் குறும்பூர் நாட்டு வேள்ளான் நேந்இ நிலத்துக்கு நீர்நி.....க்கப் பெறுவதாகவும் இப்படி சம்மதித்து இக்காசு இருபத்து மூன்றுங் கொண்டு.....வும் உடையார் மாதரநீஸ்வர முடையார் ஸ்ரீ மாஹேஸ்வரரில் நற்குந மாணிக்கதேவன் நாந திருவீதி திருநீறு பரப்பி நான் நுக்ககுத்தி.....

104 .....இறையிலி செய்து குடுத்தே ந் உடையார் மாதரநீஸ்வரமுடையார் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு போதிமங்கலமுடையாந் வேளாந் அருளீஸ்வர முடையாநான அழகிய சோழக்குறும்பூர் நாட்டு வெள்ளாநேன். இவை எழுதினான் நல்ல ஆவூருடையாந் பச்சைப்பதியஞ்சோறுடையாநேந் இவை எந் எழுத்து

105 இப்பரிசு இறையிலி செய்து குடுத்தேந் போதி மங்கலமுடையான் வேளான் அருளீஸ்வரமுடையானாக அழகிய சோழக்குறும்பூர் நாட்டு வெள்ளாநேந் இவை எந்எழுத்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

106 இப்படிக்கு இவை புவனமுழுதுடைய ஆசாரியநேந் இவை என் எழுத்து உ.

56

ஊர் : மாதூர்

கோயில் : சிதைந்துள்ள மாடக்கோயில்

இடம் : வடக்கு அதிட்டானம்

அரசு : சோழர்

அரசன் : மூன்றாம் இராஜராஜ சோழன்

ஆட்சியாண்டு : 14

வரலாற்று ஆண்டு : கி.பி. 1230

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: இவ்வூர் மாதரணீஸ்வரமுடையார்க்குத் திருநந்தவனம் அமைக்கும் பொருட்டு, கூத்தனூர் என்னும் ஊரைச்சேர்ந்த நின்றான் சேர்வார் கற்பகத் தாழ்வார் என்பவர், நிலக்கொடை வழங்கியதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அத்துடன் அந்நிலத்தின் அளவுகளும் எல்லைகளும் குறிப்பிடப்படுகின்றன.

1 திரிபுவநசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு பதினாலாவது உய்யக்கொ

2 ண்டார் வளநாட்டு மருகல் நாட்டு மாதவூருடையார் மாதரணீசுர முடையார்க்கு திருநந்தவனமாக குலோத்து

3 ங்க சோழவளநாட்டு வடகால் கூத்தனூருடையான் நின்றான் சேர்வார் கற்பகத்தாழ்வார் நீர்வாத்து குடுத்த இ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4 ந்த மாதவூரில் மேலைதெரு மேல் சிறகில் பொன்னார் மங்கலத்து விளை நிலத்துக்கு கிழக்கும் இவ்

5 வூர்க் கொல்லைக்கு மேற்கு தோட்டமும் பொன் ஒழுக்கைக்கு வடக்கும் செயங்கொண்ட சோழ விண்ணகராழ்வ

6 ார்கோயில் திருமதுநம் ஆதனூர் கொல்லைக்கும்புத்தக் குடிக்கொல்லைக்கும் தெற்கு

7 ம்.....மேற்கும் நடுவுபட்ட.....ண கொள்வாய் நாகலைக் குளமும் ம... மற்றை மரமும் இந்நிலம் அரைக்கு .....நீர் வாத்து குடுத்த உ

8 டையார் கோயில் கல்வெட்டு

57

ஊர் : நெடுங்காடு

கோயில் : தான்தோன்றீஸ்வரர்க்கோயில்

இடம் : மகாமண்டபத்தின் தெற்குச் சுவர்வரிமானம்

அரசு : சோழர்

அரசன் : இரண்டாம் இராஜராஜசோழன்

ஆட்சியாண்டு : 4

வரலாற்று ஆண்டு : கி.பி. 1150

ஆண்டறிக்கை எண்: 431 of 1965-66

செய்தி: இவ்வூர்த் தான் தோன்றீஸ்வரமுடையார்க் கோயிலில் நந்தா விளக்கு ஒன்று எரிக்கும் பொருட்டு,

Public domain. Digitization Muthulakshmi Research Academ

காரைக்குடி என்னும் ஊரைச்சேர்ந்த 'பொன்னாழ்வி அறமுடையாள்' என்னும் வெள்ளாட்டி மூலதனமாக 300 காசுகள் வழங்கியதைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 திரிபுவனச் சக்கரவந்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவற்க்கு யாண்டு 4வது புரட்டாதி மாதத்து காயாக்குடியில் இருக்கும் வெள்ளாட்டி பொன்னா

2 ழ்வியான அறமுடையானேன் நெடுங்காட்டு உடையார் திருத்தான் தோன்றீஸ்வரமுடையார் கோயிலுக்கு உபையமாக வச்ச விளக்கொ ஒன்றுக்கு காசு

3 முன்னூறுங் கொண்டு பொலிசையால் வன்தாது கொண்டு ஸன்திராதித் தர்வ.....

58

ஊர்	:	நெடுங்காடு
கோயில்	:	தான்தோன்றீஸ்வரர்க்கோயில்
இடம்	:	மகாமண்டபத்து மேற்குச்சுவர் தென்புறத்து வரிமானம்
அரசு	:	சோழர்
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்க சோழன்
ஆட்சியாண்டு	:	37
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 30.1.1215
ஆண்டறிக்கை எண்	:	432 1965-66

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: இவ்வூர்த் தான்தோன்றீஸ் வரமுடையார்க் கோயிலில் சந்தி விளக்கு எரிக்கும் பொருட்டு, திருநீலகண்டத்தார் என்னும் குழுவினருள் ஒருவனான முழையூரைச் சேர்ந்த நம்பி வீரந்.....என்பவன் 300 காசுகள் மூலதனமாக வழங்கினான். இம்மூலதனத்திற்கு ஆண்டுதோறும் வரும் வட்டியைக்கொண்டு இவ்வறச்செயல் நிகழ்த்தப்பெற்றதைத் தெரிவிக்கிறது.

1 ஸவத்ஸிஸ்ரீதிரிபுவநவீர தேவற்கு யாண்டு 37 கும்ப நாயற்று.....

2 ம் வெள்ளிக்கிழம்மையும் பெற்ற திருவோணத்து நாள் நெடுங்காட்டு உடையார் திருத்தான தோன்றி ஈ

3 சுரம் முடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவர்கன்மிகள்ளோம் இன்நாயனார் கோயிலுக்கு நாங்கள் உ

4 பையம் பண்ணி குடுத்த பரிசாவது திருநீல கண்டத்தாரில் முழையூர் உடையான் நம்பி வீரந.....

5 சந்தி விளக்குக்கு சீ பண்டாரத்து ஒடுக்கிந காசு 300 இக்காசு முன் நூற்றுக்கும் பொலிசைக்கு ஒரு விளக்கு...

59

ஊர் : நெடுங்காடு

கோயில் : தான்தோன்றீஸ்வரர்க்கோயில்

இடம் : மகாமண்டபத்துத் தெற்குச்சுவர் வரிமானம் வாயிலின் தென்புறச்சுவர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரசு : சோழர்
அரசன் : மூன்றாம் குலோத்துங்க சோழன்
ஆட்சியாண்டு : 37
வரலாற்று ஆண்டு : கி.பி. 1215
ஆண்டறிக்கை எண்: 433 of 1965-66

செய்தி: நெடுங்காட்டு உடையார்க்குச் சந்திவிளக்கு ஒன்று எரிக்கும் பொருட்டு, மூலதனமாக 300 காசுகள் வழங்கப்பெற்றன. இக்காசுகளுக்கு ஆண்டுதோறும் வரும் வட்டியைக்கொண்டு இவ்வறச் செயல் நிகழ்த்தப்பெற்றது.

1 ஸ்ரீதிரிபுவனச் சக்கரவர்த்திகள் மதி
2 ரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடி
3 தலையும் கொண்டு வீரா அபிழசேகமும் விசையா
4 பிஷேகமும் பண்ணியருளிய ஸ்ரீதிருபுவனவீர
5 தேவற்கு யாண்டு 37 தைம்மாதத்து நெடுங்கா
6 ட்டு உடையார் உபையம் ஆக சந்திவிளக்கு ஒன்றுக்கு
7 இந்நாயனார் சீ பண்டாரத்து முதலாக ஒடுக்கின
8 காசு 300 இக்காசு முன்னூற்றில் பொலிசை
9 செலவாக சந்திராதித்தவரை சந்தி விளக்கு எரி
10 க்க கடவுதாக

Public domain. Digitization Muthulakshmi Research Academ

60

ஊர் : நெடுங்காடு

கோயில் : தான்தோன்றீஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜகோபுரத்துவாயிலின் தென்புறச் சுவர்

அரசு : -

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள்

ஆண்டறிக்கை எண்: 434 of 1965-66

செய்தி: சந்தியா தீபம் எரிக்க நிலக்கொடை வழங்கியது பற்றிக்குறிப்பதாக இருக்கலாம்.

1 .....ல்லும்.....

2 .....துஆனிபுத.....

3 .....நிம்மப்ப.....

4 .....கர் அய்யன்.....

5 .....துக்கு கற்.....

6 .....க்கியப்பர்.....

7 .....சந்தியா.....

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

8 .....ல்பற்று.....

9 .....லியும்ம.....

10 .....இந்த நிலம்.....

11 of 15 .....Damaged.....

61

ஊர் : கீழ்க்காசாக்குடி

கோயில் : ஆதியப்பர்க்கோயில்

இடம் : வடக்குச் சுவரின் ஜகதி

அரசு : சோழர்

அரசன் : இரண்டாம் இராஜராஜ சோழன்

ஆட்சியாண்டு : 10

வரலாற்று ஆண்டு : கி.பி. 1156

ஆண்டறிக்கை எண்: 392 of 1902

முன் பதிப்பு : South Indian Inseriptions Vol. VII. No. 1024

செய்தி: சேரகுட்டனூர் திருவாதீஸ்வரமுடைய நாயனார் நந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு, காயாக்குடியான உதையசந்திரச்சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சங்கர நாராயண பட்டர் என்பவர், 4மா அளவுள்ள நிலங்களை விளக்குப்புறமாக நல்கியதைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 .....ராஜராஜ தேவற்கு யாண்டுபத்தாவது மேஷ நாயற்று அபரபக்ஷத்து அஷ்டமியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற அவிட்டத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டுக் குறும்பூர் நாட்டு பிரம்மதேசம் காயாக்குடியான உதயசந்திர சதுர்வேதி மங்

2 .....ர நாராயண பட்டனேன் இவ்வூர்பிடாகை சேரகுட்டநூர் உடையார் திருவாதிஸ்வரமுடைய நாயநாற்கு நான் திருநந்தா விளக்குப்புறமாக குடுத்த கொல்லையாவது குண்டூர் ஆள்கொண்ட வில்லி கொண்டபட்டன் பக்கல்முன்னா

3 .....கட்டளையில் திருநந்தாவிளக்குப் புறமாகக் குடுத்ததற்கு கீழ்பாற்கெல்லை தூர்ப்பில் மூத்த நாராயண பட்டன் உள்ளிட்டார் கொல்லைக்கு மேற்கும் தென்பாற் கெல்லை கடலாடு பெருவழிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை தூற்பில் இ

4 .....லைக்குக் கிழக்கும் வடபாற் கெல்லைபுன் செய் வாய்க்காலுக்கு தெற்கும் ஆக இசைத்த பெருநான் கெல்லையுள் நடுவுபட்ட உழவனடைப்படி நிலம் சின்னம் இன்னிலம் நாலுமாச்சின்னமும் உடையார் திருவாதிஸ்வரமுடையாற்குத் திருநந்தா விள

5 .....ணிக்குடுத்தேன் இச்சங்கர நாராயணபட்டனேன் இப்படிக்கு இவை சங்கரநாராயண பட்டன் எழுத்து இப்படி அறிவேன் இழக்கந்திறந்து ஜாதவேதபட்டனேன் இப்படியறவேன் உறுப்புட்டூர் நிரப்பிய ஊரனேன் இப்படி அறிவே

6 .....தோன்றி பட்டனேன் இப்படி அறிவேன் குண்டூர் இளைய திருநள்ளாறு உடையான் பட்டனேன்.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

62

ஊர் : கீழ்க் காசாக்குடி
கோயில் : ஆதியப்பர்க் கோயில்
இடம் : வடக்கு, மேற்கு, தெற்குச் சுவர்களின் ஜகதிகள்
அரசு : சோழர்
அரசன் : இரண்டாம் இராஜராஜ சோழன்
ஆட்சியாண்டு : 10 + 1
வரலாற்று ஆண்டு : கி.பி. 1156 + 1
ஆண்டறிக்கை எண்: 393 of 1902

செய்தி: பெரிய தேவரான முதலாம் இராஜாதிராஜ சோழனின் 11ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1029) வரைத் திருவாதீஸ்வரமுடையார்க்குச் சொந்தமாக இருந்த தேவதான நிலங்களும், இறையிலி நிலங்களும், அளந்து கணக்கெடுக்கப் பெற்றன. அவை இரண்டாம் இராஜராஜ சோழனின் 11ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1157) இக்கோயிலில் கல்வெட்டாக வரையப்பெற்றன. இவ்வாறு கணக்கிடப்பெற்ற தேவதான நிலங்களில் ஸ்ரீகோயில், திருமுற்றம், திருமடைவிளாகம் ஆகியவையும், கீழ் சிறகு திருநந்தவனம், காழிக்கற்பகம், திருமுகை திருநந்தவனம், திருஞானசம்பந்தர் திருநந்தவனம், நாற்பத்தெண்ணாயிரவன் திருநந்தவனம், சோம்பநாதன் திருநந்தவனம் முதலான நந்தவனங்களும்,

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிறுத்தொண்டர் விளாகம், திருஞான சம்பந்தர் விளாகம், திருக்குறிப்புத் தொண்டர் விளாகம், திருநாவுக்கரசு விளாகம், சேய்ஞலூர் விளாகம், காடுவெட்டியான் கொல்லை, திருவிளக்குப்புறம், நன்னிக்குழி முதலான நிலப்பகுதிகளும், திருஞான சம்பந்தன் திருமடம், பொன்னம்பலமடம் ஆகிய மடங்களுக்குரிய மடப்புற நிலங்களும் அடங்கியிருந்தன. இவை அனைத்தும் 10 ஆயிரம் குழிகளுக்கும் அதிகமானவை என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

1 ஹரஸவத்ஸ்ரீஉ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜ ராஜ தேவற்குயாண்டு 10வது எதிரா மாண்டு உடையார் திருவாதீசுரமுடையார் தேவதானங்களும் இறையிலிகளும் கல்வெட்டின படி பெரிய தேவர் இராஜாதிராஜ தேவற்கு 11வது அளந்த பிராமஸாத நப்படி உதையசந்திர வாய்க்காலுக்கு தெற்கு மேலைத் தெருவில் கீழ் சிறகில் திருநந்தவனம் நிலம் நாலுமாமுக்காணி அரைக்காணியும் இதந் கிழக்கு சிறுத்தொண்ட விளாகம் நிலம் இரண்டுமா இதன் தெற்கு ஸ்ரீ கோயிலுந் திருமுற்றமும் திருக்குளமுந் திருமடை விளாகமும் நிலம் எட்டும் ஆக நிலம் அரையே நாலுமா முக்காணி அரைக்காணி இதில் ஓட்டில் நீங்கலாக கழித்த ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் நிலம் அரையே மு...றும் இதன் தெற்க்குமேலை கிழக்கில் நடுவில் தெருவுக்கும்.....பட்டர் வங்கிப்புறத்து திருஞான சம்பந்தன் உள் இட்டார் பக்கல் விலைகொண்ட காழிக்கற்பகம் திருநந்தவனம் குழி இருநூற்றெழுப..... இந்நாயனார் திருக்குளத்துக்கு வடகரையில் திருஞானசம்பந்தன் திருமட்மு.....விலை கொண்டு.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

2 மன்றுக்கு தெற்கு நடுவில் தெருவுக்கு கிழக்கு இராயூர் ஜாதவேத, பட்டன் குண்டூர் நாராயணபட்டன் வங்கிபுறத்து எடுத்து பாதபட்டன் வங்கிபுறத்து செம்பியன் பிரமாராயர் உள் இட்டார் பக்கல் கொண்ட நூற்றிருபத்திருவன் நந்தவனம் குழி முன்னூற்றிருபத்து ஒன்றரையும் கீழைத் தெருவுக்கு கிழக்கு கடலாடு பெருவழிக்கு தெற்கு திருமுகை திருந்தவனம் உள்பட வங்கிபுறத்து எடுத்த பாதபட்டன் நள்ளாறு தேவபட்டன் குண்டூர் பசுபதி பட்டன் தக்ஷிணாமூர்த்தி பட்டன் தூர்ப்பில் பஞ்சநதிவாணபட்டன் வங்கிபுறத்து நடுவில் கண்ணபுர தேவபட்டனும் உள் இட்டார் பக்கல் விலைகொண்ட நன்னிக்குழி உள்பட்ட நானென்று போவான் திருக்.....குழி ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தேழும் இதன் கிழக்கு வங்கி புறத்து இளய சுப்பிரமண்ணிய பட்டன்.....தொண்டடெ..... திருநந்தவனம் குழி இருநூற்று நாற்பத்தேழரையும் கருணாகரப் பட்டினத்து கிழக்கு வங்கிபுறத்து சந்திரபூஷணபட்டன் உள் இட்டார் தா... ட்டன்டெ.....தம்பிரான் தோழர் நடுவில் தெருவில் மேல் சிறகில்இ...துக்கு விட்ட குழி இரு... ஞ்சும் இவிடத்து குண்டூர் கருமாணிக்க.....கற்பகம் திருநந்தவனத்து.....

3 திருஞானசம்பந்த விளாகம் குழி நானூற்று இருபத்து நாலும் இங்கே வங்கிபுறத்து வேதத்தபட்டன் பக்கல் கொண்ட திருக்குறிப்புத் தொண்டவிளாகம் குழி நூற்றெழுபத்தொன்பதே காலும் இதன் கிழக்கு திருத்தெளிச்சேரி எல்லையுற வங்கிப்புறத்து திருஞானசம்பந்தர் குண்டூர் இளைய கருமாணிக்க பட்டன் கலிகடிந்தான் பட்டன் தூர்ப்பில் நித்த விநோத

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பிரமாராயன் உள் இட்டார் பக்கல் விலைகொண்ட திருநாவுக்கரசு விளாகம் குழி எழு நூற்றைம்பதும் கடல்லாடு பெருவழிக்குத் தெற்கு வங்கி புறத்து வந்தான் தேவர்கள் தேவர் பக்கல் கொண்ட காவட்டியான் கொல்லை குழி நூற்றிருபதஞ்..... திருக்கோயிலுக்கு ஸபையார் நியோகப்படி புன்செய் ஒட்டுக்கு.....க்கும் சிவகாமசுந்தரன்-கும் கல்லு.....னூற்றறுபத்தெட்டும் இதன் கிழக்கு வங்கிபுறத்து சந்திரபூஷணபட்டன் உள்ளிட்டார் பக்கல்கொண்ட குழி நூற்றுபத்தேழும் .....தெற்கு குண்டூர் திருவெண்காடுபட்டர் இம்மடத்துக்கு இட்டகுழி முப்பதும் நூற்று..... இருவன் திருநந்தவனத்துடன் கூடி கொண்டு.....ற்றி பரிவவற்றித்தகுழி நூ.....

4 காலுக்கு வடக்கு மேலைப் பெருவழிக்கு மேற்கு நெடுங்குளத்துக்கு தெற்கு வங்கிபுறத்து ஈஸ்வரபட்டன் உள்ளிட்டார் பக்கல்கொண்ட திருஞானசம்பந்தர் திருநந்தவனம் குழி ஆஇரத்தொரு நூற்று நாற்பத்து மூன்றரை இதில் நியோகப்படி புன்செய் ஒட்டுக்கு இறுக்கும் கல்லுவாய் குழி நூற்றைம்பது. கீழைப்பெருவழிக்கு கிழக்கு உதய சந்திர வாய்க்கால்லுக்கு வடக்கு குண்டூர் பசுபதிபட்டன் உள் இட்டார் பக்கல் கொண்ட சேய்ஞலூர் விளாகம் குழி நானூற்றொரு பத்து நாலரை இதில் நியோகப்படி புன்செய் ஒட்டுக்கு இறுக்கும் கல்லு... குழி முன்னூற்றைம்பது இதன் கிழக்கு குரோவி நம்பி பட்டன் விட்ட திருவிளக்குப்புறம் குழி நூற்றம்பதும் இதன் வடக்கே சுடுகாட்டுப் பெருவழிக்கு வடக்கு உறுப்புட்டூர் நிரம்பிய ஊரன் பக்கல் விலைகொண்ட நாற்பத்தெண்ணாயிரவன் திருநந்தவனம் குழி இருநூற்று

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நாற்பதேழே காலும் மேலைப் பெருவழிக்கு மேற்கு பொன்னம் பல திருமடம் குழி எழுநூறும் ஸ்ரீமாஹேஸ்வரசேஷம் .....

5 தாடிபட்டன் பக்கல் விலைகொண்ட.....ச் சொம்பாதான் திருநந்தவனக்குழி ஐந்நூற்றெழுபதும் ஒட்டிக்கழித்த இறையிலி நிலம் முக்காலே ஒரு மாவுக்கு பற்று மூன்றாங் கட்டளை ஆலால சுந்தர விளாகம் குழி ஐந்நூற்று நாற்பத்தேழும் ஏழாங்கட்டளை நாலாங்கண்டம் விக்கவினாயக விளாகம் குழி ஐந்நூற்று முப்பத்திரண்டே இரண்டு மாவும் எட்டாங்கட்டளை இரண்டாங்கண்டத்து திருஞானசம்பந்தர் விளாகம் குழி நூற்றெழுபத்திரண்டும் இதன் தெற்கு சிறுத்தொண்டர் விளாகம் குழி நூற்றைம்பதும் இதன் கிழக்கு சேய்ஞலூர் விளாகம் குழி இருநூறும் ஆக குழிஆ..... நூற்றிரண்டு

63

ஊர்	:	மேல்காசாக்குடி
கோயில்	:	நாகநாதேஸ்வரர் கோயில்
இடம்	:	அர்த்த மண்டபத்துத் தெற்குச் சுவர் ஜகதி
அரசு	:	சோழர்
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்க சோழன்
ஆட்சியாண்டு	:	3 அல்லது 4
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 20. 4. 1181 அல்லது 18. 10. 1182
ஆண்டறிக்கை எண்	:	இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: காயாக்குடியான உதய சந்திரச் சதுர்வேதி மங்கலத்து இராஜசேரியில் இருக்கும் 'விளங்கில் வேளார் உய்யக் கொண்டாரான வளவதரையர்' என்பவர் எழுந்தருளிவித்த திருநாகீஸ்வரமுடையார்க்குச் சபையினர் இறையிலி நிலம் வழங்கியதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 ஸவத்ஸிஹ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரை கொண்டு பாண்டியன் முடித்தலை..... நாயற்று பூருவபக்ஷத்துப.... மியும் திங்கள் கிழமையு

2 ம் பெற்ற திருவாதிரை நாள் உய்யக் கொண்டார் வளநாட்டு குறும்பூர் நாட்டு பிரம தேயம்..... உதய சந்திரச் சதுர்வேதி..... காரியஞ் செய்யும் பெருங்குறிமாசபை

3 யோம் எழுத்து நம்மூர் ஊர்க் கணக்கு காயாக்குடையானும் .....யனும் கண்டு..... நாட்டு குறும்பூர்..... க்கிழ்பிடாகை..... ற்கும் பிறந்த.....ருக்கும் ராச சேரியில் விளங்கி

4 ல் வேளார் உய்யக் கொண்டாரான வளவதரையர் எழுந்தருளுவித்த உடையார் திருநாகீஸ்வரமுடையார் கோயில்..... உடலாக இவ்வூரில் எட்டாங் கட்டளையில் பெருங்கழியில்.....யாக விட்ட.....

5 பயிர் செய்து கொள்ளக் கடவர்களாகவும்.... தித்தவரை இறையிலியாகக் குடுத்தோம் ஸ

6 பையோம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

64

ஊர்	:	தருமபுரம்
கோயில்	:	யாழ்மூரி நாதர்க்கோயில்
இடம்	:	இராஜகோபுரத்து வாயிலின் தென்புறச்சுவர்
அரசு	:	சோழர்
அரசன்	:	மூன்றாம் இராஜராஜ சோழன்
ஆட்சியாண்டு	:	20
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 8.9.1236
ஆண்டறிக்கை எண்	:	இல்லை

செய்தி : தருமபுரத்து யாழ்மூரி நாயகரை ஆண்டுதோறும் 12 அமாவாசை நாட்களில் உலாவாக எழுந்தருளச் செய்யவும், கடலில் தீர்த்தமாடச் செய்யவும், திருவமுது படைக்கவும், திருப்பள்ளித் தாமம் இயற்றவும் கிளிஞலூர் என்னும் ஊருக்குத் தலைவனான அணுக்கன் விழுப்பரையன் என்பவன் நிலக்கொடை வழங்கியதைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜ

2 .....க்கு யாண்டு 20 தாவது கன்னி

3 நாயற்று பூர்வபக்ஷத்து தசமியு

4 ம் திங்கள் கிழமையும் பெற்ற.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

5 த்து நாள் நித்த வினோத வளநாட்டு

6 ஆவூர்க் கூற்றத்து கிளிஞலூர் கிழவ

7 .....பெரு.....

8 மானான அணுக்கன் விழுப்பரைய

9 னேன் உய்யக்கொண்டார் வளநாட்டு முை

10 ழயூர் நாட்டு திருத்தருமபு ரமுடையார் கோயில்

11 யாழ்முறிநாயகர் ஆட்டைக்கு பன்னிரண்டு அமாவ

12 ாஸையும் எழுந்தருளி புறப்பட்டு திருமண்டபத்து

13 .....ண்ணம் பண்ணி வ.....க்கா

14 .....யும்.....மங்க.....அமுது செய்தரு

15 .....கயில் எழுந்தருளி நித்தம் பிரஸா

16 .....பிதுக்கு திருப்பள்ளித்தாமம்

17 திருஅமுதுக்கு கறியமுது அடைக்காயமுதுள்ளிட்ட

18 .....இன்னாட்டு இக்கூற்றத்து

19 Damaged

20 .....த்தில் ஒபாதியும் கடல்

21 .....வரை நாயற்று

22 .....சந்திராதித்தவரை

23 .....இவை

24 .....பெருமானான அணுக்க விழுப்ப

25 ரையன் எழுத்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

65

ஊர் : காரைக்கால்
கோயில் : கைலாசநாதர்க் கோயில்
இடம் : வடக்குச் சுவர்
அரசு : சோழர்
அரசன் : முதற்குலோத்துங்க சோழன்
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 1070–1122
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: குலோத்துங்க சோழன் வெற்றி பெற்ற கங்கமண்டலம், பாண்டி மண்டலம், சிங்களம், ஆகியவை குறிப்பிடப் பெறுகின்றன.

1 .....(பழுதுற்றது) .....

2 .....நெளிப்ப இழிந்.....களுள் சுழன்று.....

3 .....விரித்தவரை.....திசைத்தன் நாளுகந்து.....

4 .....முதுகும் பயத்தெதிர் மாறிய வியன் பெருந்திருவும்.....

5 .....அடி வாளாவி.....மடந்தையரீட்டமு மிளாது.....

6 கங்கமண்டலமுஞ் சிங்கள மென்னும் யாணி.....

7 .....ஈண்டிய புகழொடு பாண்டிமண்டலங்.....

8 .....(பழுதுற்றது).....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

66

ஊர் : காரைக்கால்

கோயில் : கைலாசநாதர்க் கோயில்

இடம் : மேற்குச் சுவர்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12 ஆம் நூற். எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி : ஸ்ரீகிருஷ்ணன், திருவாய்க்குலமுடையான், இரவீஸ்வரம் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன.

1 .....(பழுதுற்றது) .....

2 .....ம்பியந் ஸ்ரீ க.....

3 ..... வெண்காடுதேவன்.....

4 .....ர்பணியாலும்.....

5 .....ந் திருவாய்க்குல.....

6 .....ணை இரவிவ.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

67

ஊர் : காரைக்கால்

கோயில் : கைலாசநாதர்க் கோயில்

இடம் : மேற்குச் சுவர்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற் எழுத்துக்கள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: வெள்ளாளன் கூத்தன் தில்லைவாணன் என்னும் கொடையாளன், இக்கோயில் இறைவனுக்கு நந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு ஊர்ச்சபையாரிடம் நிலம் வாங்கி அவற்றை இக்கோயிலுக்கு இறையிலியாக வழங்கியதைக் குறிக்கிறது.

1 .....அரைக்காணி முந்திரிகையினால் விரித்த நில.....

2 .....இவ்ரிருக்கும் வெள்ளாளஞ் கூத்தந் தில்லைவண.....

3 .....கச்செலவு அறக்கொண்டு இந்நிலம் உடையார்

4 .....ஸாஸ் வதிநியாக இறையிலி செய்து குடுத்தோம் மஹா.....

5 .....லில் போந்த குடிமை எப்பேர்பட்டதுஞ்செய்ய.....

6 .....விளக்கு புறமாக சந்திராதித்தவற் ஸாஸ்வதி.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

68

ஊர் : காரைக்கால்

கோயில் : ஒப்பிலா மணீஸ்வரர்க் கோயில்

இடம் : இராஜகோபுர வாயிலின் வடபுறச்சுவர்

அரசு : இல்லை

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற். எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: சிற்றம்பலவன் இசைபொசிய ஆடுவான் என்பவன், இத்திருவாசல் காரியத்துக்கு உதவி செய்தமையைத் தெரிவிக்கிறது.

1 ஸவத்ஸிஸ்ரீ திருவாசல்க்காரி

2 யதுக்கு உதவி செய்த

3 வர்கள் சீபாதுங்கள் தில

4 தகுடையான் சிற்றம்ப

5 லவன் இசைபோசிய ஆ

6 டுவான் தலையாலே உ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

69

ஊர் : காரைக்கால்

கோயில் : அரங்கநாதர்க் கோயில்

இடம் : மேற்கு மதிற்சுவரின் வெளிப்பக்கம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற் எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: இறைவனுக்குத் திரு நந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு இறையிலி நிலம் வழங்கியது பற்றிக் குறிப்பிடுகிறது.

1 .....பெருங்குறி மஹா ஸபையார்..... காணியில்.....

2 .....க்க சந்திராதித்தவரையும் திருநுந்தா விளக்கு.....

3 .....பக்கல்காசுகொண்டு இறையிலியாக விட்டநீர்.....

4 .....கெல்லை பாரத்துவாசி இம்மையே தருவானில்த்துரு.....

5 .....கேசவன் மணிவண்ணன் நிலத்துக்கும் காசியபன்.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

6 .....துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை திருவிளாகத்துக்கு.....

7 .....த்துக்கு தெற்கும் நடுவுபட்ட விளைநிலம் குழி 610.....

8 .....நிலத்தில் வா.....வர்டு விட்டகுழி உள்.....

70

ஊர் : காரைக்கால்

கோயில் : அரங்கநாதர்க் கோயில்

இடம் : மேற்கு மதிற்சுவரின் வெளிப்பக்கம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : இல்லை

ஆண்டறிக்கை எண்: கி.பி. 12ஆம் நூற். எழுத்துகள்

செய்தி: இது நிலக்கொடை பற்றிக் குறிப்பிடுகிறது. எட்டாங்கட்டளை, 36 காசுகள், மடப்புறம் ஆகிய பெயர்கள் காணப்பெறுகின்றன.

1 .....முக்காலுக்கு இறை தீர்வர்த்துக்கு இப்.....

2 .....ஆகுகாசு 36 முப்பத்தாறு உஇ.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

3 .....வார் பொன் கொண்டு பொலியூட்டாக மாவி.....

4 .....எட்டாங்க கட்டளையில் விட்ட நிலத்துக்குகி.....

5 .....இமடபுறத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை.....

71

ஊர் : காரைக்கால்

கோயில் : அரங்கநாதர்க் கோயில்

இடம் : மேற்கு மதிற்சுவரின் உள்பக்கம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: கொடை நிலத்தின் எல்லைகள் குறிக்கப்பெற்றுள்ளன.

1 .....செவிர் வெள்ளான் காணியாளாக.....

2 .....ணிக்குடலாக காசிபந் வீரப் பிள்ளையா.....

3 .....ளும் விட்ட இதனின் உட்கிடையில் சம்பந்தவி.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4 .....டையான் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்.....

5 .....வடக்கும் மேல்பாற்கெல்லை இவ.....

6 .....வாய்க்காலுக்கும் நடுவுபட்ட விளை நிலங்குழி.....

7 .....ய் நிலத்துக்கு கிழ்பாறிகெல்லை வேழைகுை.....

8 .....

72

ஊர் : காரைக்கால்

கோயில் : அரங்கநாதர்க் கோயில்

இடம் : தெற்கு மதிற்சுவரின் வெளிப் பக்கம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள்

ஆண்டறிக்கை எண் : இல்லை

செய்தி: நித்த நிவேதனங்களுக்கு வழங்கப்பெற்ற நிலக்கொடைபற்றியும், குறிப்பிட்ட அறச்செயலுக்கு மூலதனமாக வழங்கப்பெற்ற காசுகள் பற்றியும் இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 .....நிலத்துக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை.....

2 .....பாற்கெல்லை திருவரியில் எதிரிலி சோழ.....

3 .....குழி 500 ஐஞ்ஞூற்றுக்கு இக்கொ.....

4 .....படிமாற்றுக்கு எழுந்தருளும் வினாய.....

5 .....சியாற்கு அளக்கும் அரிசி உடலம் ஆக.....

6 .....தேவறக்கு அளக்கும் அரிசி உட ஆக.....

7 .....துக்கு ஒடுக்கின காசு 3ம் இன.....

8 .....

73

ஊர் : காரைக்கால்

கோயில் : அரங்கநாதர்க் கோயில்

இடம் : தெற்கு மதிற்சுவரின் வெளிப்பக்கம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற். எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: அரசனின் 5ஆவது ஆட்சி தண்டில் 10 காசுகளுக்கு கோயிலுக்கு நிலம் விற்றுக் கொடுத்ததைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

1 .....லுக்கு தெற்கும் நடுவுபட்ட குழி 500 ஜஞ்.....

2 .....காசு பத்தும் இறை.....த்துக்கு இட்ட.....

3 .....இன்னாயனாற்கு யாண்டு 5 ஆவதுெ.....

74

ஊர் : காரைக்கால்

கோயில் : கைலாசநாதர் கோயில்

இடம் : அர்த்த மண்டபத் தெற்குச்சுவர் வரிமானம்

அரசு : சோழர்

அரசன் : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: கொடை நிலத்தின் இருப்பிடம் பற்றித் தெரிவிக்கிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 .....சோழவாய்க் காலுக்குத் தெற்குமுதற்க.....

2 .....யும் இக்கண்ணாற்றில் நிரவி ஏறின நிலம்அ.....

75

ஊர் : திருமலைராயன்பட்டினம்
கோயில் : ஜடாயுபுரீஸ்வரர் கோயில்
இடம் : உண்ணாழியின் மேற்கு தெற்குச் சுவர்களின் வரிமானங்கள்
அரசு : சோழர்
அரசன் : இரண்டாம் இராஜராஜ சோழன்
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 1146-1172
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு நிலம் விற்றுக்கொடுத்த செய்தி கூறப்பெற்றுள்ளது. மையார் கண்ணி என்னும் தேவரடியாரும், திருநாவுக்கரையன் திருநந்தவனம், நந்தவனப்புறம், உரோக சாந்தி, விழியூருடையான் அரையன் உடைய நம்பியார் ஆகிய பெயர்களும் காணப்பெறுகின்றன.

1 .....சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு.....

2 .....பநாயற்று பூர்வபக்ஷத்து.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

3 .....கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள்.....

4 .....நாட்டு முழையூர் நாட்டு உழச்சின் புலத்து.....

5 .....யீஸ்வரமுடையார் கோயில் தேவரடியார்.....

6 .....முடையாளான மையார் கண்ணி இன்னாயநார் தேவதா.....

7 .....து நீங்கல் நிலத்துதி.....த்துக்கு வடக்குட்பட்ட நத்தது.....

8 .....தேவர் சண்டேஸ்வரப் பெருவிலை கொண்ட நத்தம் குழி நூற்றுக்கும்.....

9 .....பிரமாண விலைப்படி காசு முன்னூறுக்கும்பெ.....

10 .....யார் கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மி.....

11 .....கோயில் திருநாவுக்கரையன் திருநன் தவனத்துக்கு.....

12 .....நன்தவனப்புற இறையிலி பிரமாண இசைவு தீட்டு குடுத்.....

13 .....பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாறி கெல்லை.....

14 .....வடக்கும் மேல்பாற் கெல்லை வீர.....

15 .....னக்கு உரோக சாந்தியாக நீர்வாத்திட்ட.....

16 .....மையார் கண்ணியார் பக்கலே ஆவணக்களியே காட்டு

Public domain. Digitization Muthulakshmi Research Academ

17 .....இறையிலி ஆகவிட்டு குடுத்தேன் இன்னித.....க்கு.....

18 .....இன்னிலத்துக்கு கடமை இறுக்குமிடத்துள.....

19 .....குடுத்தநிலம்.....இட்ட நிலம் விற்றுவிலை.....

20 ..... நன்தவனப்புற இறையிலியாக விற்ற நிலம்.....

21 .....இவ்விழியூருடையான் அரையன் உடைய நம்பியரான கொ.....

76

ஊர் : திருமலைராயன் பட்டினம்
கோயில் : ஜடாயுபுரீஸ்வரர்க்கோயில்
இடம் : தெற்குச் சுவர்
அரசு : சோழர்
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்துகள்
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: அரசனின் பட்டப்பெயரும், மூல நட்சத்திரமும் குறிக்கப் பெற்றுள்ளன.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 ஸவத்ஸிஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்திகள்.....

2 பெற்ற மூலத்து நாள்.....

77

ஊர் : திருமலைராயன் பட்டினம்

கோயில் : ஜடாயுபுரீஸ்வரர்க்கோயில்

இடம் : இராஜகோபுர வாயிலில் இருவேறு இடங்களில் உள்ள கற்பலகைகள்

அரசு : பாண்டியர்

அரசன் : இரண்டாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன்

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 1314 - 1362

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: குலசேகர பாண்டியன் காலத்து திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்த காரைக்குடி மக்கள் செலுத்திய வரிவகையைக் குறிப்பிடுகிறது.

1 பண்பர் திரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீகுல.....

2 .....ப்பட்டினத்து கரைக்குடி மக்களில்.....

3 .....கள் படுத்த மீனுக்கு ஆயமும்.....வார்.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4 .....ர்கொண்டு போகற் கூடைக்கு ஒரு காசும்.....

5 .....

78

ஊர் : திருமலைராயன் பட்டினம்

கோயில் : ஜடாயுபுரீஸ்வரர் கோயில்

இடம் : இராஜகோபுரத்தின் கிழக்குப் பீடம், வடக்குப் பக்கம்

அரசு : விஜயநகர்

அரசன் : விருப்பண உடையார்

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 31.3.1392

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: காவிரி ஆற்றுக்கும் முள்ளிவாய் ஆற்றுக்கும் இடையில் உள்ள ஊர்களில் புதிதாக வந்து குடியேறும் மக்களுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு வரி எதுவும் விதிக்கப்பெறாமல், அதன் பின்னர் வரிவிதிக்கப் பெற்றமையைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

1 .....பன்மரான ஸ்ரீ வீர விருப்பண உடையார் பிரிதிவி ராஜ்யம் பண்ணி.....

2 .....ங்வற்ஸரத்து மேஷ நாயற்று பூறுவ பக்ஷத்து தஸமியும் நாயற்றுக் கிழமையும்.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

3. .....பட்டினத்தில் வந்து ஏறும் குடிக்கு காவேரி ஆற்றுக்கும் முள்ளிவாய் ஆற்றுக்கும்.....

4 .....பட்டினத்திலும் நாட்டிலும் வந்து ஏறும் குடிக்கு வந்துதென்று கேளாது ஒழிய.....

5 .....வாசல் ஒட்டு ஆயம் அரசு பெறு புலவரி உட்பட்ட முதல் ஆறு மாதம் கேளாது.....

6 .....ஒட்டு அரசு பெறு ஆயம் புலவரி மற்றும் உள்பட பல முதலுக்குக் கழிகரைச் சேரி அற்ற.....

79

ஊர் : திருமலைராயன் பட்டினம்
கோயில் : ஜடாயுபுரீஸ்வரர்க்கோயில்
இடம் : உண்ணாழியின் மேற்குச்சுவர்
அரசு : விஜயநகர்
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 14ஆம் நூற். எழுத்துகள்
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: அரசனின் பட்டப்பெயர்களான பரமேஸ்வரன், வீரப்பிரதாபன், மகா மண்டலீஸ்வரன், கட்டாரி சாளுவன் முதலான பெயர்கள் காணப்பெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

1 பரமேசுரன்டெ.....வீரப்பிறதாபன்.....

2 ன்மஹாமண்டலீசுரன்.....கண்ட.....ன் கட்டாரி சாளுவன்.....

80

ஊர் : திருமலைராயன் பட்டினம்

கோயில் : ஜடாயுபுரீஸ்வரர்க்கோயில்

இடம் : உண்ணாழியின் வடக்கு மேற்குச்சுவர்களின் வரிமானங்கள்

அரசு : விஜயநகர்

அரசன் : விருபாக்ஷதேவர் II

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 1465 - 1485

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: விருபாக்ஷனின் பட்டங்களும், கல்வெட்டுக் காலக்குறிப்புகள் காணப்பெறுகின்றன.

1 ஸவத்ஸி ஸ்ரீமன் மஹா மண்டலீசுரன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு குடாதான் பூறுவ தெக்ஷண பச்சிம.....சதுறு சமுத்திராதிபதி.....

2 விருபாக்ஷ தேவமஹா இராயர் பிரதிவி.....கர ஸங்வத்சரத்து ஸிம்ஹ நாயற்று பூறுவ பக்ஷத்து தெசமியும் சுக்கில வாரமும் பெற்ற.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

81

ஊர் : சேத்தூர்
கோயில் : ஏகாம்பரேஸ்வரர்க்கோயில்
இடம் : அம்மன் சன்னிதியின் வடக்குச்சுவர்
அரசு : பாண்டியர்
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்துகள்
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: இவ்வூர்க் கூத்தாடும் பிரான் திருமடத்துக்கு வருகின்ற மாகேஸ்வரர்களுக்கு உணவு வழங்கும் பொருட்டு, (சிவதவனமுடையானின் மனைவி) பூவாண்டாள் என்பவள் மூன்று மாக்காணி அளவுடைய நிலங்களை மடப்புறமாக வழங்கினாள். ஆயினும், இந்நிலத்துக்காக அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு ஆண்டுதோறும் வரி செலுத்திய பிறகு எஞ்சி நின்ற வருவாயைக் கொண்டு, இத்திருமடத்துக்கு வரும் மாகேஸ்வரர்களுக்கு உணவு வழங்க இயலாமற் போயிற்று. ஆதலின், இம்மடத்து மாகேஸ்வசரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்நிலங்கள் மீது விதிக்கப்பெற்றிருந்த அரசிறைகளைத்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தாங்கி செலுத்துவதாகவும், இந்நிலங்களுக்கு நீர் பாய்ச்சுதல் வேலை செய்தல் ஆகியவற்றையும் தாங்களே இயற்றுவதாகவும் ஊரவர்கள் உறுதியளித்தனர். இதன்படி இந்நிலங்கள் இறையிலியாக மாற்றப்பெற்றன. இதனைக் கீழ் மாந்தூர்த் திருவேகம்பமுடையார்க் கோயிலில் கல்வெட்டாகவும் வரையச் செய்தனர். இச்சாசனத்தில் மாகேஸ்வரர்பலரும், ஊரவர் பலரும் ஒப்பமிட்டுள்ளனர்.

1 .....சக்கரவத்திகள்.....

2 .....தசமியும் நாயற்று.....

3 .....சாத்தன் குடி உள்பட்ட.....

4 .....இவ்வனைவோம்.....

5 .....கூத்தாடும் பிரான் திரு.....

6 .....குடுத்த நிலமாவது இத்திருமடத்துக்கு இந்நாயனார் தேவதானம் வீரப்பெருமாள்.....

7 .....முடையான் சிவதவன முடையான் இட்ட அமுது செய்யும் ஸ்ரீமாஹேஸ்ரவர்க்கு அமுதுப.....ராவும் திருப்பணிக்கும்

8 உடலாக நீர் வார்ந்த நிலமாய் இவன் பாரிகை பூவாண்டாள் தன் கொழுந்தன் குமர.....நாடுடைப் பெருமாள்ம

9 கன் உத்தராபதி நாயகரை முதுகண்ணாகக்கொண்டு தந்மதானப் பிரமாணம் பண்ணி.....பியன் சாத்தன்குடி உள்ப்ப

Public domain. Digitization Muthulakshmi Research Academ

10 .....ட்ட நிலத்து மண்ணிச் செய் நிலம் 3மா காணி ஓடை நாற்றங்கால் நிலம் மாஆக நிலம் 3மாக்காணி, மா இந்நிலம்.....இத்திரு மடத்துக்கு மட

11 புறமாகையில் இந்நிலம் இறுப்பாகையில் இந்நிலம் இறுத்து இறைமிகுதி பற்றாமே.....

12 இம்மடத்து கடமைக்கு இம்மடத்து ஸ்ரீமாஹேஸ்வரரை நலிவு பண்ணினால் இம்மடத்.....வருவார்க்கு

13 இங்கு வத்திக்க ஒண்ணாதென்றும் இந்நிலம் எங்களுக்கு இறையிலியாகச் செய்துத்தரவே

14 ணுமென்று இம்மடத்தில் ஸ்ரீமாஹேஸ்வரர் எங்களை வந்து அபைக்ஷிக்கையாலே இந்நில.....க்கு இறையி

15 லியாகத் தாங்கள் அனுபவிக்கவும் இந்நிலம் மூன்று மாக்காணிக்கும் ஊர் விழுக்காட்டுப்படியே.....கடமையுங்

16 குடிமையும் நினைப்பிட்டு தண்டும் வற்கங்களும் விநியோகங்களும் உள்ளிட்டு இறுக்கவேண்டுவ .....வோமாக

17 வும் சென்னீர் வெட்டி உள்ளிட்ட தேவைகளும் நாங்களே செய்யக்கடவோமாகவும் இந்நில.....ம் உள்ளிட்டு

18 த்தண்டும் வற்கங்களும் ஆள்த்தேவை உள்ளிட்டனவும் நாங்களே ஏற்றிச் செய்யக்கடவோம.....ந்தவன் கீழ்மாத்தூர் உடையா

19 ர்திரு வேகம்பமுடையார் கோயிலிலே கல்வெட்டின மையில் இந்நிலம் மூன்று மாக்காணியும் சந்திரதித்தவரை இறையிலியாக அனுபவிக்கக் கடவர்க

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

20 ளாகவும் இப்படி சம்மதித்து இறையிலி செய்து பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் இக்கூத்தாடும் பிரான் திருமடத்து ஸ்ரீமாஹேஸ்வரர்க்கு இச்

21 சாத்தன்குடி உள்பட்ட நிலத்து ஊரவரும் இவ்வூர் பிறிந்த நெற்குன்றங்கிழான் பிரமதேசத்துக்கும் முழையூருடையான் பிரம தேசத்தும் ஸபையாரு

22 ம்உள்ளிட்ட இவ்வனைவோம் இவர்கள் சொல்ல இந்த இறையிலிப் பிரமாணம் எழுதின மைக்கும்..... இவை காப்பியங்கிழவன் ஆளுடை

23 நாயகன் திருமேனி பிரியாதரனேன் இவை என்னெழுத்து இப்படிக்கு இவை நெற்குன்றங் கிழான் பிரமதேஸத்தும் முழையூருடையான் பிரம்ஹதே

24 ஸத்தும் காணியுடைய மத்யஸ்தன் அம்பர்புறத்தூருடையான் நாவுடைப் பெருமான் சான்று போனான் எழுத்து.....என்றும் குரொவிடி.....

25 ரணஜிபட்ட ஸோமாயாஜி என்றும் சோயடை ஸ்ரீ ராமபட்டஸ்ய என்றும் நாலூர் யஞ்ஞாபட்ட ஸ்யன் என்றும் நாலூர்.....

26 பட்டஸயன் என்றும் குண்டூர் உய்யக்கொண்டான் பட்டஸ்யன் என்றும் பிப்பிரிநாத குமாரபட்டஸ்யன் என்றும் சேட்டலூர் ஸ்ரீரா

27 பட்டஸ்யன் என்றும் நேர்பிட்டூர் திருவெண்காடு பட்டஸ்யன் என்றும் காராம்பிச் செட்டு துக்கய பட்டஸ்யன் என்றும்.....

Public domain. Digitization Muthulakshmi Research Academ

28 முத்தி பட்டஸ்யன் என்றும் அருளாளப்பட்டஸ்யன் என்றும் சேட்டன் போசன் அனந்தநாராயணபட்டஸ்யன் என்றும் இராயூர்

29 பட்டஸ்யன் என்றும் அகரபாணிபட்டஸ்யன் என்றும் ஐயப்பிள்ளை பட்டஸ்யன் என்றும் ஸ்ரீரங்கநாத பட்டஸ்யன் என்றும் பிரயாகை

30 குமாரமங்கல முடையான் உத்தராபதி நாயன் எழுத்தென்றும் இப்படி அறிவேன் குமாரமங்கலமுடையான்..... இப்படி அறிவேன்

31 குமாரமங்கலமுடையான் பூவப்பிள்ளை எழுத்தென்றும் இவ்வூர் காணியுடைய காப்பியன் கிழவன் ஆளுடைநாயகன்.....ன்னெழுத்தென்

32 றும் இப்படிக்கு இவை தெங்கங்குடையான் பாலறாவாய னெழுத்தென்றும் இப்படிக்கு இவை வாஞ்சியூர் கிழவன் தேவப்பிள்ளை எழுத்தென்றும் இப்படிக்கு இவை தேவ.....றும் இப்படி அறிவேன் வேகம

33 ங்கல முடையானேன் என்றும் ஸங்ஜ்ஜை இட்டு இது சாத்தங்குடி ஸ்ரீகைலாஸமுடையார் கோயில் சிப்பிராமணன் திருநட்டப் பெருமான் ஸங்ஞை ஆனமை.....தென்றும் இப்படிக்கு இவை சே

34 ற்றூருடையான் வையிரவனான குணிச்சாண்டா னெழுத்தென்றும் இவை சோயானெழுத்தென்றும் இவை சோழ கோனெழுத்தென்றும் இப்படி அறிவேன் நெற்குன்றங் கிழான்.....யன் திரு விடை மருதுடையானெழுத்தென்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

35 இப்படி அறிவேன் நெற்குன்றங்கிழான் ஆளுடைநா.....
தென்றும் இப்படி அறிவேன் சேற்றூருடையான் நாடறி
புகழின் ஆண்டப்பிரானே னென்றும் இப்படி அறிவேன்
சேற்றுடையானெ

36 னென்றும் இப்படி அறிவேன் நல்லெழுந்தூருடையாள்
அம்பர் நாட்டுக் கோனெழுத்தென்றும் இப்படி அறிவேள்
நல்லெழுந்தூருடையான் பெற்றான் கண்ணபுர
தேவனெழுத்தென்றும் இப்ப

37 டிஅறியேன் அம்பருடையான் பிச்சன் ஆளவன்தா னெழுத்
தென்றும் இப்படி அறிவேன் குன்றத்தூருடையா
னெனென்றுமட் இப்படி அறிவேன் நெற்குன்றங்கிழான்.....
யாண்டானெ னென்றும்

82

ஊர்	:	சேத்தூர்
கோயில்	:	ஏகாம்பரேஸ்வரர்க்கோயில்
இடம்	:	அர்த்தமண்டபத்துத் தெற்குச்சுவர்
அரசு	:	விஜயநகர்
அரசன்	:	திருமலை தேவர்
ஆட்சியாண்டு	:	சௌமிய வருடம் ஆடிமாதம் 12ஆம் தியதி
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 10.7.1489
ஆண்டறிக்கை எண்	:	இல்லை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்தி: திருமலை தேவர் உடல் நலத்தோடு வாழவேண்டும் என்பதற்காக, திம்மாச்சி நாயக்கரும், சேற்றூர் காக்கு நாயக்கரும், இக்கோயில் இறைவனின் அங்கரங்க போகத்துக்கும், திருப்பணிக்கும் திருமடை விளாகத்துக்கும், திருநந்தவனத்துக்கும் ஐந்துவேலி நிலங்கள் வழங்கியதைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

1 ஸவமி வருஷம் ஆடி 12க்கு

2 ஸ்வஸத்ஸ்ரீமந் மஹா மண்டலேசுர

3 மேதிநி மீசுர கண்ட கட்டாரி சாளு

4 வ திருமலை மகாராசாவிந்திரு

5 மேனிக்கு நன்றாக திம்மாச்சி நாய

6 க்கர் சேற்றூர் காக்கு நாயக்கர்க்கு அங்கரங்க

7 போகத்துக்கும் திருபணிக்கும் சேத்த

8 நிலம் 5ல் இதுவு திருமடைவிளாக

9 மும் திருனந்தவனமும் சேத்தருள அதுக்

10 கு இந்த நிலம் ஐ வேலியும் மடை விளாக

11 மும் சந்திராதித்தவரையும் அநுபவி

12 த்து கொள்ளவும் இந்த தந்மத்துக்கு அஹி

13 தம் பண்ணினவந் கங்கை கரையி

14 லே கபிலியை கொன்ற பாவத்திலே போககடவர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

83

ஊர் : சேத்தூர்
கோயில் : ஏகாம்பரேஸ்வரர்க்கோயில்
இடம் : மகாமண்டபத்தின் மேற்குச்சுவர்
அரசு : இல்லை
அரசன் : இல்லை
ஆட்சியாண்டு : இல்லை
வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டு
ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி :- இடையாலம் வாணாதராயர் என்பவர் இக்கோயிலில் வழியடிமைக் கொண்டான் என்னும் பெயரில் திருமதில் அமைத்ததைத் தெரிவிக்கிறது.

1 பிரமாதூதவருஷம்
2 வழியடிமைக்கொ
3 ண்டான் திருப்பணி
4 திருமதிள் இடைய
5 லம் வாணாதராயர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

84

ஊர் : சொரக்குடி

கோயில் : சோமநாதசுவாமி கோயில்

இடம் : அர்த்தமண்டபத்து வாயிலின் நிலைக்கால்

அரசு : இல்லை

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

குறிப்பு : இக்கல்வெட்டு மூன்று வரிகள் கிரந்தத்திலே இருக்கிறது.

செய்தி: சோமநாதருக்கு பிரதோஷகால பூஜைக்காகக் குழிக்கரை என்னும் இடத்தில் நிலக்கொடை வழங்கியமைபற்றி அறிவிக்கிறது.

1 க்ராமே த்ரஹி

2 க்ராமேத்ரஹிதபஷ ு பாகார்த்தம் கௌசிகோ த்விஜ:

3 ப்ரதோஷகாலபூஜார்த்தம் ஸோமநாதாய தத்தவாந்

4 இனானிலம்களும் குழிக்கரைஇலே குடுத்த மாந்யம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

85

ஊர் : மேல்பொன்பேத்தி

இடம் : தனியார் வீட்டின் வாயிற்படியில் உள்ள கற்பலகை

அரசு : இல்லை

அரசன் : இல்லை

ஆட்சியாண்டு : இல்லை

வரலாற்று ஆண்டு : கி.பி. 16ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

ஆண்டறிக்கை எண்: இல்லை

செய்தி: கோட்டுச்சேரியைச் சேர்ந்த பட்டணவர்களான செங்கணச்செட்டி, ஏறையச் செட்டி, ஆலத்துடைய நம்பி, அறம் வளர்த்த நம்பி, ஆகியோர்க்கு ஆண்டொன்றுக்கு 60 பொன் செலுத்தி, கடலில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பெற்றதைத் தெரிவிக்கிறது.

1 ஆங்கீர ஆண்டு வைய்யாசி 10ந்தேதி

2 ஸ்ரீமதுராயச.....ருவர் அய்யன் க

3 ாரியத்துகெ.....தவதரையர்

4 கோட்டுச் சேரி பட்டணவர் செங்

5 கணச்செட்டி எறையச் செட்டி ஆ

6 லத்துடைய நம்பி அறம் வளத்த

Public domain. Digitization Muthulakshmi Research Academ

7 நம்பி உள்ப்பட்டாற்கு குடுத்த ச

8 றுவ மானியப் பட்டையம்

9 இந்த ஊர்ப் பட்டணச்சேரி வரு

10 ஷம் ஒன்றுக்கு அய்யன் கட்டளை

11 பொன் அறுபது இந்தக் கட்டளை

12 இட்டதில் தரும் பொன் அறுபதுக்கு

13 ள்ளே இந்த ஊரில் பரவை மீனு

14 ம் பட்டணச்சேரி.....த்துடநேசே

15 ர்ந்தபடியாலே நாளது முதல் சந்தி

16 ராதித்தவரையும் கோட்டுச் சேரிபரவை

17 மீன் உள்பட பட்டணவரே அனு

18 பவித்துக் கொள்ளவும் யிந்த மாநி

19 யத்தை இயாதொருவ.....

20 அழித்தவன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆசிரியரின் நூல்கள்

1. பண்பும் பயனும்
2. வரலாற்றில் வில்லியனூர்
3. வரலாற்றுச் சின்னங்கள்
4. வரலாற்றில் அரிக்கமேடு
5. கல்வெட்டுகளில் அரிய செய்திகள்
6. பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்
7. புதுவை மாநிலக் கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்கள்
8. புதுவை மாநிலக் கல்வெட்டுகளில் நாடும் வளநாடும்
9. வரலாற்றில் ஆரிய வைசியர்
10. கல்வெட்டுகளில் திருமால் திருப்பதிகள்
11. கல்வெட்டுகளில் நீர்நிலையும் வரிகளும்
12. பொன்பரப்பின வாணகோவரையர்
13. கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள்
14. புதுவை மாநிலச் செப்பேடுகள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

குறிப்பு :

Public domain. Digitization Muthulakshmi Research Academ

குறிப்பு :

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

குறிப்பு :

Public domain. Digitization Muthulakshmi Research Academ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy